சுதேசமித்திரன்

பிப்ரவரி-13-49- விலை அணா 4

ஒரு புராதன வைத்தியம்

இவ்விதமாகவே நல்ல செய்திகள் பரவுகின்றன. உட்வார்ட்ஸ் கிரைப் வாட்டர் குழந்தைகளை நன்கு பாதுகாக்கிறது

WOODWARD'S GRIPE WATER

keeps baby well

I-WW 111-111

W. WOODWARD LTD. LONDON. GLAND

பிப்ரவரி 25உ
ஆரம்பமாகிறது
வேலைக்காரி
உயரிய கருத்துக்களுடன்
உன்னதமாய் தயாரிக்கப்பட்ட
உல்லாச வாழ்க்கைச்
சித்திரம்
கதை, வசனம்
ஸி.என். அண்ணாதுரை
டைரக்ஷன்
ஏ.எஸ்.ஏ.சாமி
ஸ்டூடியோ
சென்ட்ரல்
ஜூபிடர் தயாரிப்பு
JUPITER PICTURES CIRCUIT

சுதேசமித்திரன்

பொருளடக்கம்

		பக்கம்
ரமாவைக் கேளுங்கள்!	குங்குமம்	6
பெரிய புராணம்	பி ஸ்ரீ	9
சதி (நாடகம்)	பொன்னு	11
சொப்பன வாழ்க்கை (தொடர் கதை)	'ஆர்வி'	16
கலாமண்டபம்	ஸினிமா	23
கிறுக்கு (கதை)	விந்தியா	27
பெண்மை அழகு	ஆர் லக்ஷ்மி அம்மாள்	32
விமலா	எல் வி எஸ் மணியன்	35
கனவும் நனவும்	ப. ராதாகிருஷ்ணன்	39
நாமொன்று நினைக்க...	ய. மகாலிங்க சாஸ்திரி	43
பானுவின் சாமர்த்தியம்	தில்லைவாசி	46

"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும், பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் முற்றிலும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

வாழ்க நற்றமிழர்!

Vol. XX] ஸர்வதாரி௵ மாசி௴ 2௳ ★ 1949-௵ பிப்ரவரி௴ 13௳ No. 2

ஏன் இந்த அவசரம்?

சென்ற 4-ந் தேதியன்று சென்னை அஸெம்பிளியில் கொண்டுவரப்பட்ட ஹிந்து தர்ம மத பரிபாலன மசோதாவைக் குறித்து இம்மாகாணத்தில் விசேஷ மனக்கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது உடனடியாக முழு மூச்சுடன் கவனத்தைப் பெற வேண்டிய உணவு உடை நெருக்கடியைப் போன்ற பிரச்னை இதுவல்லவென்பதை அனைவரும் ஒரு முகமாக ஒப்புக்கொள்வர். ஆனால் சென்னை சர்க்கார் இதில் இவ்வளவு அவசரப்படக் காரணம் ஏதேனும் உண்டா? முக்கியமாக இம்மசோதாவின் கருத்து புதிய இந்திய அரசியலின் மூலாதார நோக்கத்துக்கே விரோதமானது சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக்கூட்டத்தில் இதை ஆலோசனைக்கெடுத்துக்கொண்டபோது பிரசன்னமாயிருந்தவர் 70 பேர்களே இதிலும் 44 பேர்களே அதற்கு ஆதரவு கொடுத்திருக்கின்றனர் கட்சியின் மொத்த அங்கத்தினர்கள் தொகையோ 190! இந்த நிலையில் இம்மசோதா சட்டசபை விவாதத்துக் குட்பட்டிருக்கிறது மதுரை ஸ்ரீமான் ஏ வைத்தியநாதய்யர் இம்மசோதாவைப்பற்றி பொதுஜன அபிப்ராயத்தை அறிய வகை செய்யவேண்டுமென்று ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார் ஆரம்பத்தில் இதற்குக் கட்சிக் கொறடாவின் ஆட்சேபனை பிறந்ததெனினும் இறுதியில் திருத்தத்தைப் பிரேரிக்கலாமேயொழிய ஓட்டெடுக்கும்படி சொல்லக்கூடாதென்ற நிபந்தனையும் கூடச் சேர்ந்தது.

இம்மசோதாவை இப்போது கொண்டுவராமல் புதிய அரசியல் வெளிவருமளவும் ஒத்திவைக்க வேண்டுமென்றும் சர்க்கார் கோட்டை முன்பாக ஸ்வாமி சத்யானந்த சரஸ்வதி உண்ணாவிரதமிருந்துவருகிறார். இதையும், மற்றும் இம்மசோதாவை ஒத்திவைக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி வெளியான அபிப்ராயங்களையும் எடுத்துக்காட்டி சம்பந்தப்பட்ட மந்திரிகளை பத்திரிகைக்காரர்கள் கேட்ட கேள்விகளுக்கு அளிக்கப்பட்ட பதில்கள் விசித்திரமானவை.

ஹிந்து மத-தர்ம ஸ்தாபனங்களை சர்க்காரின் நிர்வாகத்துக்கு உட்படுத்துவதே மசோதாவின் முக்கிய நோக்கம். மடங்கள் உள்பட எத்தகைய ஹிந்து மத-தர்ம ஸ்தாபனங்களையும் சர்க்கார் தங்கள் நேரடியான அதிகாரத்துக்குள்ளாக்கிவிடலாம் தற்போது இத்தகைய ஸ்தாபனங்களின் நிர்வாகத்தில் எவ்வித ஊழலும் கிடையாதென்பதற்காகவோ அல்லது அவை சிறக்க இயங்க எவ்வித நடவடிக்கையும் தேவையில்லையென்ற காரணத்தாலோ எதிர்ப்புகளை யாரும் வெளியிடவில்லை. ஆனால் அது ஹிந்து மத வளர்ச்சியில் அந்தரங்கமான அக்கரையும், அதற்கான அறிவாற்றலும் கொண்ட ஹிந்துப் பிரமுகர்கள் தனிப்பட்ட முறையில் மேற்கொள்ள வேண்டிய வேலையே. ஹிந்துக்கள் மட்டுமின்றி வேறு பல மதத்தினரும் சேர்ந்து ஹிந்து மத-தர்ம ஸ்தாபனங்களின் நிர்வாகத்தைச் சீர்திருத்தக் கிளம்பியிருக்கின்றனர் என்பதுதான் தற்போதைய மசோதாவின் பொருள் இது எவ்வளவு அருவருக்கத்தக்க முயற்சி என்பதை விளக்கத் தேவையில்லை.

அதுவும் தற்போது இந்தியா முழுவதும் இயங்குவது மத சார்பற்ற ஒரு சர்க்கார் என்று திட்டமாகப் பிரகடனமான பின், இத்தகைய ஒரு மசோதாவை உருவாக்க சென்னை மந்திரி சபை துணிந்தது ஆச்சரியமாகும். மத்தியிலோ, மாகாணங்களிலோ உள்ள எந்த சர்க்காரும் எந்த மத ஸ்தாபனத்துடனும் தொடர்பு கொள்ளவோ, அதன் நிர்வாகத்தில் நேரடியான பங்கு கொள்ளவோ கூடாதென்பதுதான் மேற்குறித்த பிரகடனத்தின் தாத்பரியம்.

ஏற்கெனவே அரசியல் நிர்ணய சபையில் அரங்கேறியுள்ள அடிப்படை உரிமைகள்பற்றிய பிரிவுக்கும் இம்மசோதா நேர்மாறானது. எந்த மதத்தினருக்கும், அதன் உட்பிரிவினருக்கும் பொது நலத்துக்குப் பாதகமற்ற முறையில், மத-தர்ம ஸ்தாபனங்கள் ஏற்படுத்திக்கொள்ளவும், தங்கள் மத விவகாரங்களை நடத்தவும், அவைபற்றிய சொத்துகளை நிர்வகிக்கவும் உரிமையுண்டு என்று அப்பிரிவு தெளிவாக விதிக்கிறது இவ்வுரிமையைப் பாதிக்கக்கூடிய சட்டம் எதுவும் இயற்ற மத்திய சர்க்காருக்கோ, எந்த மாகாண சர்க்காருக்குமோ

—அடுத்த பக்கம்.

பதவி ஏற்ற பிறகு முதன் முறையாகச் சென்னைக்கு விஜயம்செய்த இந்திய சேனாதிபதி லெப்டினென்டு ஜெனரல் கே. எம். கரியப்பாவுக்குச் சென்னைக் கார்ப்பொரேஷன் சார்பாக கொடுக்கப்பட்ட உபசாரப் பத்திரத்தை மேயர் ஸ்ரீ ராமஸ்வாமி நாயுடு போர்க்கள பீரங்கிபோல் செய்த வெள்ளிப்பேழையில் வைத்தளித்தார்.

அதிகாரம் கிடையாதென்றும் அந்தப் பிரிவு தெளிவாக்குகிறது.

ஹிந்து மத விவகாரங்களில் தலையிடும் எண்ணமில்லை; மத விஷயங்களைத் தவிர மற்றபடியுள்ள விவகாரங்களை ஹிந்து-மத-தர்ம ஸ்தாபனங்கள் சீராக நிர்வகிக்க வழி செய்வதே தங்கள் கருத்தென்று ஒருகால் சென்னை சர்க்கார் சொல்லலாம். ஆனால் மசோதாவின் ஷரத்துக்களை ஆராய்ந்த யாருக்கும் அந்த வாதமும் எடுபடாதென்பது எளிதில் புலனாகும். மத விஷயங்களில் தங்கள் இஷ்டம் போல் குறுக்கிட்டு விதி செய்யவும் அபாயகரமான முறையில் இம்மசோதா சர்க்காருக்குத் திட்டமாக அதிகாரமளிக்கிறது. ஹிந்து மத ஸ்தாபனங்கள் எத்தகைய முறைகளைக் கையாள வேண்டுமென்று சர்க்கார் உத்தரவு பிறப்பிக்கலாம் என்பதும் இம்மசோதாவில் ஒரு பிரிவு. உண்மையில் இதிலுள்ள பிரிவுகளில் பெரும்பாலானவை ஹிந்து மத-தர்ம ஸ்தாபனங்களைப்பற்றிய பல விவகாரங்களையும் சர்க்காரின் நேரடியான அதிகாரத்துக்கு உள்ளாக்கும் வகையை விவரிப்பவையே.

எப்படியும் தர்ம சொத்துக்களின் பரிபாலனம் நேர்மையாக நடந்தேற வேண்டுமென்பதுதான் தங்கள் கருத்தென்று சென்னை சர்க்கார் சொல்வராயின், அதுவும் சரியல்ல. அத்தகைய கருத்துள்ளவர்கள் எல்லா மத-தர்ம ஸ்தாபனங்களின் நிர்வாகமும் சீர்திருந்துவதில் அக்கரை காட்டுவதுதான் முறை. ஆனால் முஸ்லிம் அல்லது கிறிஸ்தவ மத விவகாரங்களில் எவ்விதத்திலும் குறுக்கிட தங்களுக்கு உரிமையில்லையென்று ஒப்புக்கொள்ளும் சர்க்கார் ஹிந்து மத விஷயங்களில் மட்டும் தங்கள் அதிகாரத்தைப் பிரயோகிக்கத் தடையில்லையென்று எண்ணுவது விந்தையல்லவா?

எப்படியும் இம்மசோதா குறிப்பதுபோல், ஹிந்து மத விவகாரங்களில் இந்த அளவு குறுக்கிட தற்போது அதிகாரத்திலுள்ள கட்சியினர் வாக்காளரிடமிருந்து அனுமதி பெற்றதில்லை. அவசியமில்லையென்று எளிதில் சொல்லிவிடக்கூடிய ஒரு அற்ப விஷயமுமில்லை. இது தேர்தலில் வாக்காளர் ஆதரவு வேண்டும். அதைப் பெறுவதற்கு இம்மசோதாவைப்போன்ற முக்கியமான விஷயங்களில் அவர்கள் அபிப்ராயத்தை அறிய முற்பட வேண்டும். அத்தகைய அபிப்ராயம்தான் சர்க்காருக்கு உண்மை பலம். அதை உதறித்தள்ளிவிட்டு தாங்கள் எதை வேண்டுமானாலும்செய்யலாம் என்ற எண்ணம் மேலோங்குமாயின் அது எங்கு போய் முடியுமென்று சொல்வதற்கில்லை.

"எக்ஸ். டி" - கூட்ஸ் என்ஜின்களில் 6. சென்ற 1-ந் தேதியன்று சென்னைத் துறைமுகத்தில் இறக்குமதியாயிற்று கப்பலில இருந்து இறக்கிய என்ஜினை தண்டவாளத்தில் பொருத்துவதைக் காட்டும் படம் இதைப்போன்றுள்ள என்ஜின்கள் எம் எஸ். எம் ரயில்வேயில் வேலை செய்யும் 1951-வருஷத்துக்கு முன் 853-என்ஜின்கள் வருமென இந்திய ரயில்வே எதிர்பார்க்கிறது.

ரமாவைக் கேளுங்கள்

'குங்குமம்'

6

அன்புள்ள கீதாவுக்கு!

வர வர உலகத்தின் போக்கே தும்பைவிட்டுவிட்டு வாலைப் பிடிக்கிற கதையாய்ப் போய்விட்டது. இப்படிப்பட்ட சமயத்தில் பழங் காலத்து விஷயங்களை மனதில் வைத்துக்கொண்டு அதன்படி நடக்க முயல்வது சுத்த பைத்தியக்காரத்தனம் என்றுதான் ஓரொரு சமயங்களில் தோன்றுகிறது.

வயசு வந்த பெண்கள் இப்படி வீட்டில் ஒரு நிமிஷங்கூடத் தங்காமல் வெளியிலேயே ஸஞ்சரித்துக்கொண்டிருப்பதோடல்லாமல் வயசு வந்த புருஷப் பசங்களுடன் வித்யாஸமில்லாமல் பழகுகிறதுகளே என்று பாட்டி அங்கலாய்த்துப் போகிருள். அவளுடைய அங்கலாய்ப்பில் கொஞ்சமாவது அர்த்தம் உண்டா என்றுதான் இந்தக் காலத்துப் பசங்கள் கேட்குங்கள். கேட்பதோடுமட்டமல்ல. இதென்ன கட்டுப்பெட்டித்தனம், அதெப்படி ஒரு 'ஜந்து' வெளி உலகமே தெரியாமல் வீட்டிலேயே அடைபட்டுக்கொண்டிருக்க முடியும்? கோஷாக்களா என்ன? என்று பாட்டியினுடைய வாதத்தின் உள் கருத்தே இன்னதென்று தெரியாமல் திகைக்குங்கள்.

அதுகள் இம்மாதிரி திகைப்பதிலும் என்ன தவறு இருக்கிறது, நீதான் சொல்லேன் பார்க்கலாம்! இது பாட்டியினுடைய காலமா, பெண்கள் வீட்டைவிட்டு வெளியேறக்கூடாது. பிற புருஷர்களுடன் 'கண்டாகண்டபடி' பழகக்கூடாது. தகுந்த துணையின்றி எங்கும் தனியாய்ப் போகக்கூடாது. இவ்வளவு வயதுக்குமேல் பெண்களைக் கல்யாணம் செய்து கொடுக்காமல் வீட்டில் வைத்துக்கொண்டிருக்கக்கூடாது, என்று சாஸ்திர விதிப்படி நடப்பதற்கு?

இது பெண்கள் 'முன்னேறி வரும்' யுகம். 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே' என்று விடுதலை கோஷம் செய்யும் காலம். அந்தக் காலமா இது? இன்னின்னார்தான் இந்த இந்தத் தொழிலைச் செய்யலாம, இன்னின்ன கலையை வளர்க்கலாம், அப்பொழுதுதான் தேசத்தின் கலைப் பொக்கிஷங்கள் பரம்பரையாக அழியாமல் வளர்க்கப்பட்டுவரும் என்று ஒரு நியதி ஏற்படுத்திக்கொண்டு அதன்படி முறை தவருமல் நடந்து வருவதற்கு? இப்பொழுதுதான் யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் செய்யலாமே!

"...ஸாக்ஷாத் மன்மதன்மாதிரியே" விளங்கும் கோபாலன்......"

திடீரென்று ஒரு பெண்மணி நடனகலா ராணியாகலாம். வயதுக்கிரமம்தான் கிடையாது. பதினாறு அல்லது பதினெட்டு வயதுவரையில் 'பேபி'யாக இருக்கலாம். முப்பது—ஏன்?—முப்பத்தைந்து வயது வரையில்கூட 'குமாரி'யாக இருக்கலாம். அப்புறம் வேண்டுமானால் 'ஸ்ரீமதி' யாகலாம். அல்லது குமாரியாகவே இருந்துவிட்டாலும் இருந்துவிடலாம். இந்தப் பரம்பரை, அந்தப் பரம்பரை என்று ஹோ ஹோவென்று ஒன்றும் வேண்டியதில்லை. ஒன்றரை அல்லது இரண்டுவருஷ சிட்சையிருந்துவிட்டால் ஒரு பட்டம்' நிச்சயமாக இருக்கிறது.

கங்காதர சாஸ்திரிகளின் பெண், சுவர்ணலதாவின் பரத நாட்டியப் புகழ்பற்றி நாலு பத்திரிகைகளில் வெளி வருவதைப் பார்த்துவிட்டு ராமஸ்வாமி அய்யங்காரின் பெண் ஜகதலபிரபாவுக்குக் கையையும் காலையும் வைத்துக்கொண்டு வெறுமனே இருக்கத் தோன்றுமா? அடுத்த நிமிஷமே பரத நாட்டிய சிட்சைதான்,

அவ்வளவுதான் அதற்குப் பக்கத்து வீடு, அதற்கும பக்கத்து வீடு, அப்புறம் அந்த வட்டாரம் முழுவதும் பரதநாட்டியப் 'பித்து' தான்.

இதேமாதிரிதான் சங்கீதத்திலும். 'அதோ கோடியகத்து, கோகிலத்வனி. கோமளவல்லி கச்சேரி செய்து பணம் பணமாய்' வாருகிறாள். அவளைவிட நூறு பங்கு நல்ல சாரீரமுள்ள நம்ம பெண் ஆனந்தவல்லியை வீணில் வைத்துக்கொண்டிருப்பதா? அமர்த்து ஒரு பாடகனை டியூஷனுக்கு. அவ்வளவுதான் நாலு வருஷமோ, ஐந்து வருஷமோ, சங்கீத சிட்சை பெற்றுக்கொண்டு சங்கீத வாசனையே இன்னதென்று அறியாத ஒருவனுக்கு 'வாழ்க்கைப் பட்டு' பம்பாயிலோ, கல்கத்தாவிலோ கேட்பாரற்று ஒரு மூலையில் குடித்தனம் செய்துகொண்டிருககும்.

இதேமாதிரிதான் படிப்பு விஷயத்திலும். பிரபல மந்திரிகளாகப் போகிறோம். அந்நிய நாட்டு ஸ்தானிகர்களாகப் போகிறோம், டாக்டர்களாகப் போகிறோம் என்று என்னென்னவோ மனக் கோட்டைகளெல்லாம் கட்டிக்கொண்டு 'விழுந்து விழுந்து' படிக்குங்கள். கடைசியில் பார்க்கப் போனால் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது, அடுப்பங்கரையை விட்டு ஒரு நிமிஷம் கூட ,இங்கே அங்கே' நகரமுடியாமல் உட்கார்ந்துகொண்டிருக்குங்கள். இதனால் நான், இவைகளின் அருகிலேயே பெண்கள் போகக் கூடாது என்று சொல்வதாய் நினைத்து விடாதே. எதிர் வீட்டு ஏகாம்பர மாமா சொல்கிறமாதிரி நான் சொல்வது இதுதான். இவரிவர்கள்தான் இதை இதைச் செய்யலாம். இவரிவர்களுக்கு இது இதுதான் யோக்யதை. அதை விட்டு வேறு மார்க்கத்தில் சென்றால நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது தோல்வியில் தான் முடியும்.

அவ்வளவு தூரம் போவானேன்! உன் அம்மாவும், அப்பாவும் எவ்வளவோ ஆசை ஆசையாய், பணத்தைப் பணமென்று பாராமல், செலவழித்து உனக்குப் பரதநாட்டியம் சொல்லி வைத்தார்கள். அரங்கேற்றம் நடந்தது. அவ்வளவுதான் அதன் பலனை நீ கண்டது. எங்காவது கச்சேரி பார்க்கப்போகக் கூட ஒழியவில்லை என்று எழுதியிருக்கிறாய். என்ன உபயோகம்! இதுவே, அந்தக் கலையையே தொழிலாகக் கொண்டவர்களாக இருந்தால் எவ்வளவு சோபிக்கும்? நாட்டுக்கும் அந்தக் கலைக்கும் அதனால் எவ்வளவு உபயோகம் ஏற்படும்?

‘‘.........வெறுமனே இருக்கத்தோன்றுமா?.........’’

உலகம் தெரிந்தோ தெரியாமலோ, 'இது எங்கே. எப்படிப் போய்நிற்கும்? அதன் முடிவு என்னவாக இருக்கும்? இத்தனை ஆயிரம் வருஷங்களாய் உலகம் அடையாத என்ன நன்மையை இந்தமாதிரியான முன்னேற்ற கோஷத்தினால் அடைந்துவிடப் போகிறது, என்று ஒருவித லட்சியமுமில்லாமல் வாயுவேகம், மனோவேகத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. இதற்கு எங்கள் சிறிய நாத்தனார் வஸந்தாவோ, அவள் சகபாடிகளோ எப்படி இலக்காகாமல் இருக்க முடியும்?

எங்கு பார்த்தாலும ஹிந்தி மோகம் ஏற்பட்டிருக்கிறதா? ஹிந்தி கற்றுக்கொள்கிறேன், ஹிந்தி வகுப்புக்குப் போகிறேன் என்றுபோய்க்கொண்டிருக்கிறாள். பிறகு சங்கீத வகுப்புக்குப் போகிறாள். டைப் ரைடிங், சுருக்கெழுத்து, நிட்டிங், எம்பிராய்டரி எல்லாம் கற்றுக்கொள்கிறாள். இது தவிர காலேஜுக்குப்போய் வருகிறாள். அப்புறம் சினிமா, சங்கீதக் கச்சேரிகள் இருக்கவே இருக்கின்றன 'வீட்டில் ஒரு நிமிஷம்கூடத் தங்கமாட்டேனென்கிறதே என்றால் அதற்கு வீட்டில் தங்குவதற்குப் பொழுது எங்கேயிருக்கிறது சொல் பார்க்கலாம்?

இதெல்லாம் சாதாரண நம்மைப்போன்ற குடும்பங்களுக்கு அவசியந்தானா? வீட்டிலேயே ட்யூஷனுக்கு ஏற்பாடு செய்யக் கூடாதா? என்று நீ சுலபமாய்க் கேட்டு விடுவாய். மாமனார் சொல்கிறமாதிரி சாதாரண குடும்பங்களில் இவ்வளவு தடபுடல் வேண்டியதில்லைதான். ஏனென்றால் இவர்கள் வாழ்க்கைப்படப் போகிற இடம் அநேகமாக இதே

அந்தஸ்து அல்லது இதற்குச் சற்று உயர்ந்ததாய் இருக்கப் போகிறது. ரொம்ப பெரிய இடத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குச் சமமான இடமாகத்தான் பார்ப்பார்கள். யோக்யதையைப் பார்த்துப் பண்ணிக்கொண்டுபோகிறவர்கள் நூற்றில் ஒன்றிரண்டு பேர்கள்தான் இருப்பார்கள். வீட்டிலேயே ட்யூஷனுக்கு ஏற்பாடு செய்ய நமக்கு என்ன அவ்வளவு அந்தஸ்து சொல் பார்க்கலாம். இதெல்லாம் யாரோ பெரிய பணக்காரர்கள் செய்ய வேண்டிய வேலை.

பின்னிட்டு இதனால் சாதகமோ பாதகமோ, எதுவாகவாவது இருக்கட்டும். உடனே பிரத்யக்ஷத்தில் தெரிகிற பாதகம், விவாக விஷயம்தான். கூடவே, பாட்டி அங்கலாய்த்துக் கொள்ளுகிறமாதிரி துராசாரமும் துர்ப்பழக்கங்களும் வந்து சேர்கிறது

லக்ஷணமாக எஸ். எஸ். எல். சியோடு படிப்பை முடித்துவிட்டு நம்முடைய அந்தஸ்துக்குத் தகுந்தமாதிரி ஒரு வரனைப் பார்த்துக் கல்யாணத்தை முடித்திருந்தால் இன்று சிறிய நாத்தனார் கோபாலன் வீட்டிற்குப் போனாளா! வேறு எங்காவது போனாளா என்று பார்த்து வர ஆளை அனுப்பிவிட்டு என்ன பதில் வரப்போகிறதோ என்று வாயில் பல்லில், ஈரமில்லாமல் நின்று கொண்டிருக்க வேண்டியதில்லை. குடியுங் குடித்தனமுமாக இந்த வயசுக்கு இரண்டு குழந்தைகளைப் பெற்றுவிட்டு அகமுடையானுடன் லக்ஷணமாக வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கும். பார்க்கிறவர்களுக்கும் மதிப்பாக நன்றாக இருக்கும். பெற்றெடுத்தவர்களுக்கும் விசாரமற்று ஹாயாக இருப்பார்கள்.

நல்ல சிகப்பு. மூக்கும் விழியும் ‘தெறிப்பாக’ கம்பீரமான முகம். ஆஜானுபாகுவான சரீரம். நிகுநிகுவென்று கிராப்பை வாரிவிடடுக்கொண்டு,பளபளவென்று ஒரு ஸில்க் ஜிப்பாவையும் போட்டுக்கொண்டு வந்து நின்றானானால் ஸாக்ஷாத் மன்மதன் மாதிரியே இருக்கும் பணக்கார குடும்பம். கேட்கவேண்டுமா முகத்தில் களைக்கு. கோபாலனைத்தான் சொல்கிறேன்.

வஸந்தாவும் அழகில் ஒன்றும் குறைந்தவளில்லை. இரண்டு பேருக்கும் ஒருவரை ஒருவர் கல்யாணம் செய்துகொள்வதில் சம்மதம்தான். பெண் வீட்டுக்காரர்களைப பற்றியும் யாதொரு ஆட்சேபனையுமில்லை. பிள்ளையின் பெற்றோர்கள் சம்மதித்தால் தானே!

‘அவர்கள் கிடக்கிறார்கள்! பழம் பசலிகள்! கல்யாணம் செய்துகொண்டு அந்தப் பெண்ணை வைத்துக்கொண்டு குடும்பம் நடத்தப்போகிறவன் நானா, அவர்களா? எனக்கிஷ்டமான பெண்ணை நான் தேர்ந்தெடுத்துக் கொள்கிறேன். அவர்கள் இதில் குறுக்கிடுவதற்கு என்ன உரிமை இருக்கிறது? அப்படி இஷ்டமில்லாவிட்டால் அவர்கள் தனியாக இருந்து கொள்ளட்டும். நான் வஸந்தாவைத்தான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன்’ என்று சொல்லிக்கொண்டிருக்கிறதாம் அந்தப் பிள்ளை.

அதற்குத் தகுந்தமாதிரி அதுவும் இதுவும் (கோபாலனும் வஸந்தாவும்) ஒரு நிமிஷம் விட்டுப் பிரியாதுகள். வஸந்தா வீட்டில் இல்லையென்றால் கோபாலனுடைய வீட்டில் பார்க்கலாம். கோபாலன் வீடடில் இல்லையென்றால் வஸந்தாவினுடைய வீடடில் அவனைப்பார்க்கலாம். இது இந்த வட்டாரம முழுவதும் தெரிந்த விஷயம்.

இருக்கட்டும். வேண்டாமென்று சொல்லவில்லை மனதுக்குப் பிடித்தமானவர்களைத்தான் செய்துகொள்ளவேண்டும். நல்லபடியாக இரண்டுபேருககும் விவாகம் நடந்தேறிவிட்டால் சரிதான். இல்லாவிட்டால்?...

நான் பயப்பட்டது வீண் போகவில்லை என்றுதான் தோன்றுகிறது.

மற்றவை அடுத்த கடிதத்தில்.

இப்படிக்கு
உன் அன்புள்ள
ரமா

“……………….சங்கீத சிட்சை பெற்று……………….”



மெய்விளங்கிய அன்பர்கள்

பெரியபுராணப் பூங்காவில்

பி.ஸ்ரீ.

பெரிய புராண ஆசிரியரைப் பக்தியோடு பின்பற்றும் நந்தன் சரித்திரக் கீர்த்தனை ஆசிரியர் நந்தன் நெருப்பிலே மூழ்கிய கதையை மாற்றி அமைக்கத் துணியவில்லை; என்னினும் வேறு மாறுதல்கள் செய்து தமது நந்தனர் சரித்திரக் கீர்த்தனையை ஒருபுதிய இலக்கிய சிருஷ்டியாக நமக்கு அளித்திருக்கிறார்.

பெரிய புராணத்தில் வரும் நந்தனர் சரித்திரம் ஆதனூர் வருணனையுடன் ஆரம்பமாகி ஆறுவது செய்யுள் முதல் புலைப்பாடியை ஐந்து பாடல்களில் வருணித்திருக்கிறது. தாம் கண்ட புலைப்பாடியைச் சேக்கிழார் உள்ளது உள்ளபடியே வருணித்திருக்கிறார் என்றால், கீர்த்தனை ஆசிரியரான கோபாலகிருஷ்ண பாரதியாரும் 'பழன மருங்கணையும்' என்று தொடங்கும் நொண்டிச்சிந்தில் தாம் கண்ட புலைப்பாடியையும் அப்படியே வருணித்திருக்கிறார். புன்னாகவராளியில் இந்த நொண்டிச் சிந்தைக் கதாகாலட்சேபங்களில் பாடக் கேட்போர் இந்தப் புலைப்பாடியின் வசீகரத்தை எப்படி அனுபவித்திருக்கிறார்கள் என்பதை இங்கே சொல்லவேண்டியதில்லை.

பழன மருங்கணையும்—புலைப்
 பாடியது கூரை வீடுதனில்
சுரையோ படர்ந்திருக்கும்—அதைச்
 சுற்றிலும் நாய்கள் குரைத்திருக்
 [கும்

என்று தொடங்கும் பரிதாபக்காட்சி, இந்த நொண்டிச்சிந்தைப் பாடப் பாட வளர்ந்துகொண்டே வருகிறது நம் கண்முன்பு.

சேக்கிழார் கண்ட புலைப்பாடி வேறு; கோபாலகிருஷ்ண பாரதி கண்ட புலைப்பாடி வேறு. பெரிய புராணத்திலே பொருள் வளமும் குடிவளமும் பொங்கிக்கொண்டிருக்கும் சோழநாட்டிலே புலையர்கள்

39

பிந்திய நந்தனரும் முந்திய பாரதியாரும்

★

மாத்திரம் நாகரிக வாழ்க்கைக்கு உரிய வசதி பெறாது வாழ்கின்றார். கீர்த்தனை ஆசிரியரின் சோழநாட்டிலோ அவர்கள் வாழ்கின்றாரில்லை; ஒதுங்கி ஒடுங்கி 'மானுடம் தானோ?' என்று மயங்கி நிலையில் தாழ்கின்றார் அழுக்குடம்போடும் அறியாமையில் ஆழ்ந்த உள்ளத்தோடும்.

இத்தாழ்ச்சியின் காரணத்தைப் பெரிய புராணத்திலேயே காண்கிறோம். கோழி கூவ விழித்துக் கொண்டு இரவுவரை உடல் ஓய ஊருக்கு உழைத்து நிலத்தைப் பண்படுத்திவந்த மக்களுக்கு மனத்தைப் பண்படுத்தி வாழ வசதியுமில்லை அவகாசமுமில்லை. சுற்றுப் பொருள்களும் அவர்கள் வாழ்க்கையை வசமாக்கி வளர்க்கும் நிலையில் அமைந்திருக்கவில்லை. அக்காலம் தொடங்கி அத்தகைய சேரிகளில் வசித்த புலையர்களின் வாழ்க்கை, அறிவுபெறாது விரிந்த அனுபவமும் பெறாது பாழடைந்து மேலும் மேலும் தாழ்ந்து கொண்டே வந்தது என்பதில் ஐயமில்லை. இத்தாழ்ச்சியின் எல்லையை நாம் சரித்திரக் கீர்த்தனையில் காண்கிறோம்.

உழவு மாடுகளைப் போலவே உழைத்து வருகிறார்கள்.

நண்டோ குடியிருக்கும்—சிறு
 நத்தைக மடம்வ ளுத்திருக்கும்

என்று பாடுகிறாரே கோபால கிருஷ்ண பாரதியார், அந்த நண்டு நத்தைகளுடன் குடியிருக்கும் உழவர்களும் அப்படியே வெளியுலகம் அறியாதிருக்கிறார்கள். துன்பத்தால் இழைக்கப்பட்ட அடிமை வாழ்க்கை தான். ஆனால் இவர்கள் உழுது பயிரிடும் இந்த நிலப்புதல்வர்களிடத்திலும் அமைந்திருக்கிறது பொறுமைமட்டுமா?

தெருவில் விளை
 யாடிக்கொண்டு—அவர்
தெந்தினம் பாடுவார்
 சுந்தரமாய்!

கடுமையான உழைப்பிற்கிடையே கிடைத்த அற்பமான ஓய்வு நேரம் இப்படிக் கழிகிறது.

சங்குதோடு காதணியும்—அருந்
 தாவட மேயவர் தூவிடமாய்
மணியோ தரித்திருப்பார்—தெரு
 வாசற் புறத்தினில் ஏசிக்கொண்டு
கொண்டாட்டமாயிருப்பார்-கையை
 கொட்டிக்கொண்டு தமக் கிட்ட
 [முடன்
மதுவுண்டு கெக்கலிப்பார்—பறை
 வாத்திய மும்வெகு நேர்த்தியுடன்
இருக்கும் புலைப்பாடி.

'தெந்தினம் பாடாதபோது வாசற் புறத்திலே நின்றுகொண்டு கொண்டாட்டமாய் வாய்வலிக்க ஏசிப் பொழுது போக்குகிறார்களாம். ஏசலும் பூசலும் கிடைக்காமல் கள்ளுக் கிடைத்துவிட்டால் குடித்துக் குதித்துக் கஷ்டங்களையும் கவலைகளையும் 'தூ' வென்று துப்பிக் கை வலிக்கக் கொட்டி வாய் வலிக்கக் கொக்கரித்துக் கால் வலிக்கக் கூத்தாடுகிறார்களாம்.

இத்தகைய க்ஷீணகதி என்னும் பாதாளத்திலே ஹரிஜன வாழ்க்கை ஆழ்ந்திருந்த காலமாகிய பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அதாவது இராமலிங்கசுவாமி வாழ்ந்த காலத்தில்—வாழ்ந்தவர் கோபாலகிருஷ்ண பாரதியார். இவரைத் 'தீண்டாமையின் விரோதி' என்றும் ஏழைத் திருக்குலத்தார் படும் இடர்களையும் இன்னல்களை

சென்ற மாதம் 31-ந்தேதியன்று ராஜகட்டத்தில் காந்திஜியின் முதல் வருஷ சிராத்தத்தை முன்னிட்டுத் தலைவர்கள் அஞ்சலி செய்தனர். பிரார்த்தனையும் நடந்தது. தேவதாஸ் காந்தி, ஆசார்ய விநோபா (ஒலிபெருக்கிக்கு முன்) ராஜாஜி, ஸர்தார் படேல், முதலியவர்களைக் காண்க.

யும் வறுமைத் துயரையும் கண்டு இரங்கியவர் என்றும் புதுவை அறிஞர் சுத்தானந்த பாரதியார் கூறியுள்ளார். கோபால கிருஷ்ண பாரதியாரின் இரக்கமும் அனுதாப உணர்ச்சியும் பக்திபரவசம்போல் நந்தன் சரித்திரத்தினூடே பரந்து கிடக்கக் காணலாம்.

புலைச்சேரியில் நந்தனார் பிறந்தார்; ஆனால் புலைச்சேரி அவரைத் தீண்டவில்லையென்பது பெரிய புராணக் குறிப்பு. புலையர்களின் உழைப்பிலும் கஷ்டங்களிலும் பங்கெடுத்துக் கொண்ட நந்தனார். உடம்பையும் உள்ளத்தையும் மாசடையச் செய்யும் சேரிப்பழக்கங்களில் கலந்து கொள்ளாமலே விலகி வாழ்ந்தார் என்று கோபாலகிருஷ்ண பாரதியாரும் காட்டுகிறார். பக்தி வடிவமான நந்தனாரை இவ்வாசிரியர்.

நந்தனார் அவர்பேராம்-வெகு
நல்லவராம் இந்தத்தொல்லுலகில்
* * * * *

அன்புபு ரியும்பே ரின்பசுகம்
கொள்ளை கொள்ள வோபிறந்தார்?

என்று போற்றுகிறார்.

பக்தியனுபவம்

பக்திச்சுவை சொட்டச் சொட்டப் பெரிய புராணம் பாடியவர் சேக்கிழார் என்பர் 'சித்தம் உருகிய பக்தி' சரித்திரக் கீர்த்தனையிலும் எத்தனை வகையான சித்திரக் காட்சிகளில் பிரதிபலிக்கின்றது! இவற்றில் மிகவும் அதிசயமானது, நந்தனாரின் உன்னத நிலையை அறிந்து கொள்ளும் ஆற்றல் பெறாத சேரிவாசிகள் இவர்மீது கோபங்கொண்டு எஜமானிடம் குற்றம் சொல்லத் தொடங்கும் காட்சி!

ஐயே! ஒரு சேதி கேளும்

என்று தொடங்கும் பிரசித்தமான நொண்டிச் சிந்தைத்தான் குறிப்பிடுகிறேன் எஜமானிடம் குற்றப்பத்திரிகை படிக்கத் தொடங்கும்சேரிவாசிகள் தங்களுக்கு விளங்காத பக்தியனுபவங்களைத் தங்களுக்குத் தெரிந்த உபமானங்கள் வாயிலாக விளக்கும் அந்த அதிசயத்தை என்னென்பது?

அவ்விதமாக நந்தனாரை ஆட்டிவைப்பது சேரித் தெய்வங்களில் ஒன்று என்றே அவர்கள் முதல் முதல் துணிந்தார்கள் ஆனால் குலகுருவான வள்ளுவன் அவர்களைக் காட்டிலும் உலகம் தெரிந்த புத்திசாலி 'நந்தனார் சிவ பக்தர் இவர் பக்தி நீங்காது' என்பதை அவர்களுக்கு விளங்கும் பாஷையில் சொல்லும் அழகைத்தான் என்னென்பது?

வேறு அம்சங்கள்

பக்தி யனுபவங்களை இவ்வளவு அழகாகவும் உத்ஸாகமாகவும், உசிதமாகவும் வெளியிடும் கோபால கிருஷ்ண பாரதியார் ஹாஸ்ய ரஸம் முதலான வேறு அம்சங்களையும் அமைத்துத் தமது சரித்திரக் கீர்த்தனைகளை ரஸக்களஞ்சியமாகச் செய்திருக்கிறார் ஆஸ்திக நாஸ்திக சித்தாந்தங்களைத்தான் எவ்வளவு பொருத்தமாகச் சேரி விவாதங்களிலும், வேதியர் நந்தனார் விவாதங்களிலும் வெளியிடுகிறார்!

பெரிய புராணத்தில் வரும் முக்கிய நிகழ்ச்சிகளே கதாப் பிரசங்கங்களிலும் காலட்சேபங்களிலும் நாடக மேடைகளிலும் கையாளுவதற்கு ஏற்ற முறையில் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையாகப் பரிணமித்திருக்கின்றன. இந்த இசைத் தமிழ் நூல் தமிழிசைக்கும் கர்நாடக ஹிந்துஸ்தானி சங்கீதங்களுக்கும் ஒரு திரிவேணி சங்கமமாகத் திகழ்வதுடன் தமிழ் மொழியின் அபூர்வ எளிமைக்கும் தெளிவுக்கும் ஜீவ சக்திக்கும் ஒரு முக்கூடலாக விளங்குகின்றது

பெரிய புராணத்திற்கும் பிந்திய கீர்த்தனை நந்தனாரே தமிழ்ப் பெருமக்கள் அனைவருக்கும் இன்று அறிமுகமாயிருப்பவர் இந்தப் பெருமை ஒன்றுதானா கோபால கிருஷ்ண பாரதியாருக்கு? நமது புதுமைப் பெருங் கவிஞரான பாரதியாருக்கும் ஒரு வழி காட்டியாகவுள்ள கீர்த்தனை ஆசிரியரைப் 'பாரதியாருக்கும் முந்திய பாரதியார்' என்று தமிழகம் பெருமைப்படுத்துகிறதல்லவா?



பாத்திரங்கள்

★

வேங்கடராமய்யர்	—	வீட்டு எஜமானர்
பர்வதம்	—	அவர் மனைவி
கணபதி	—	அவர் நண்பர்
மீனாட்சி	—	நண்பர் மனைவி

[வேங்கிடராமய்யரின் வீட்டு வாசலின் முன் அறை. சுவர்களில் பலவிதப் படங்கள் தொங்குகின்றன. வலது கதவு வாசலுக்கு. இடது கதவு கூடத்து ரேழிக்கு. எதிரிலும் ஒரு கதவு.]

(வாசற் கதவைத் தட்டும் ஓசை. சைக்கிள் மணியும் ஒலிக்கிறது)

குரல்:—*சீக்கிரம்! கதவைத்திற! —பர்வதம்!.......... சீக்கிரம்!*

பர்வதம்;—இதோ! இதோ! வந்துவிட்டேன்! (கூடத்தினின்று வருகிறாள்) ....இதோ. ஆச்சு! (கதவு திறக்கிறாள் கீச்சிடுகிறது கீல்) என்ன அவசரம் அப்படி?

வேங்:—கணபதியும் அவன் சம்சாரம் மீனாட்சியும் வந்துகொண்டிருக்கிறார்கள், பண்ணலே! முன்னாடி ஓடி வந்தேன் உனக்குச் சொல்ல!

பர்:—யார் அந்த கணபதி?........ஓஹோ, மீனுவின் புருஷரா?

வேங்:—நானும் அதையேதான் சொன்னேன்—சந்தேகம் தெளிஞ்சுதா? அவர்களைப் 'பஸ் ஸ்டாண்டுக் கிட்டக் கண்டேன்

பர்:—இப்போதான் இறங்கியிருக்கிறார்களா? நம்ம வீட்டுக்கு வருகிறார்களா? வரட்டும்! எப்பவும் காலியாயிருக்கிறது ஒரு அறை. வரவேற்க! வெள்ளைக்கார பாஷையில்........

வேங்:—தயாராயிருக்கு ஒரு அறைன்னு சொல்லாது விட்டாயே! (லேசாக சிரிக்கிறாள்) பார்க்கப்போனால்—தயாராத்தான் இருக்கு! காலியா? மேஜை நாற்காலி—எல்லாம் இருக்கே வசதியாய்! இப்போ முன்னாடி அவர்கள் வருகிறது தெரிஞ்சுதோ, நல்லதாச்சோ! அவர்கள் திடும்னு வந்திருந்தால்—நிஜமாகவே கன்னத்தில் அறை கொடுத்து அனுப்பத்தான் தோணியிருக்கும் எனக்கு!

பர்:—அதென்ன கண்டபடி சொல்றேள்?... கஷ்ட காலம்...அவாளுக்குக் கேட்டுவிடப் போகிறது.

வேங்:—இப்போ இதற்குள் வரமுடியாது....இன்னும் ஒரு அஞ்சு நிமிஷம் செல்லும்!...அதற்குள்ளே ஒரு வேலை செய்யணும்...அதுக்காகத்தானே ஓடிவந்தேன்!... முன்னாடி அந்த நம்ப சந்துருவின் போட்டோக்களை எல்லாம் எடு.......

பர்:—இதென்ன...

வேங்:—ஆமாங்கறேன்!...எடுக்கணும்!... இப்போ துறையூர் போய்விட்டு இரண்டு நாளில் வந்துவிடப் போகிறார்களாம்! துறையூர் பஸ் புறப்பட இன்னும் ஒரு மணி நேரம் இருக்கு! இங்கே வாருங்கோன்னு அழைத்துவிட்டேன் ஒப்புக்கொண்டுவிட்டார்கள்...

பர்:—இன்னும் மணி பன்னிரண்டுகூட ஆகவில்லையே!...காப்பி கொடுக்கக்கூட வசதியாகவிருக்காது போலிருக்கே...

வேங்:—வேண்டாம் அந்த உபசாரமெல்லாம் இப்போ!...நாராயணய்யர் வீட்டில் சாப்பிட்டுவிட்டு வெற்றிலை குதப்பிக்கொண்டுதான் போகிறார்கள்.... கையில் ஒரு சின்னப்பைதான்...வெறுமனே கொஞ்சம் பேசி க்ஷேமம் விசாரிக்கலாம்னுதான் கூப்பிட்டேன்

பர்:—போகிறது ... கண்டதும் வரச்சொன்னேளே... மீனுவைப்பார்த்து ஐந்து வருஷமாகிறது....அவள் பெண் அன்னம்மாளும் வந்திருக்காளா?

வேங்:—அவள் வரவில்லை ..ஆனால்...அவள் நினைவு வந்ததும்தான் ஓடிவந்தேன் குடுகுடுவென்று!... இந்தா... இதைப் பிடி!...அந்தப் போட்டோவையும் எடு! அவன் டென்னிஸ் கோலத்தைக் கட்டாயம் எடுத்தாகணும்!... உம் ..

பர்:—இதென்ன 'இந்த வேலைத்தனம்!...அன்னம்மாளுக்குக் கொடுத்தனுப்பவா?

வே:—கொடுத்தனுப்பவா?...கெட்டிக்காரிதான் ஊகத்தில்!...அவர்களிடம் எதற்குக் தரணும்? 'கண்ணிலே படாமல் இருக்கட்டும்னுதான்...உம்...எடு!...

பர்:—சரி தெரிஞ்சுது! நல்ல காரியந்தான்!...

வேங்:—ஜாக்கிரதை...மெள்ள எடு! ஆடி உடைந்து விடப்போகிறது கண்ணாடி!

பர்:—ஆகட்டும்... மெதுவாத்தான் எடுக்கிறேன்.... நீங்களும் அந்த "அக்டோகிரூபை" எடுத்துடுங்கோ!... எட்டு தினுசாய் அவன் இருக்கிறதுதான் எல்லாவற்றையும் விட ஜோராயிருக்கே!...கொழுகொழுன்னு எப்படி கம்பீரமாயிருக்கிறான் ......

வேங்:—வருஷா வருஷமும் இது மாதிரி எடுத்திருக்கலாம்....

பர்;—பெரிய சங்கீத வித்வான் மாதிரி புல்லாங்குழலை வாசிக்கிற 'போஸை'ப் பாருங்களேன்...(சிரிக்கிறாள்)

வேங்:—ஏன்...சிரிப்பானேன்? அவன் பாட்டில் கெட்டிக்காரனில்லையோ? பள்ளிக்கூடக் கொண்டாட்டத்தில் வெள்ளி மெடல் தட்டினானே...கேட்டு வந்த பாட்டு... அடடா...நல்ல காலம்!...

பர்:—என்ன?

வேங்:—இந்தப்படத்தின் கயிறு இற்றுப்போகிற மாதிரி யிருக்கு...நல்ல வேளையாய் இப்போ எடுத்தோமே....

பர்:—சுவரெல்லாம் ஊளியாகிவிட்டமாதிரி இருக்கே....

வேங்;—இருக்கட்டும். இருக்கட்டும்...இதோ அவர்கள் ளாம் போனப்புறம் புதுக்கயிறு போட்டு மாட்டிவிடலாம் ...என்ன...இன்னும் அந்த டென்னிஸ் ஆடுகிற போட்டோவை எடுக்கல்லையா நீ!...

பர்:—எடுக்கத்தான் போனேன்...இதற்குள்ளே "அக்டோகிராப்" மேலே கவனம் போயிடுத்து!...(சிரிக்கிறாள் மெல்ல) இதோ ஒரு நிமிஷம்!

வேங்:—ஒரு நிமிஷம் என்ன குறைச்சலா...ஒரு செகண்டுலே எடு!...வர சமயமாச்சு! (எட்டிப் பார்க்கிறார் வெளியே)

பர்:—அடடா...இதென்ன....

வேங்!—என்ன 'டபக்'னு சத்தம்? உடைச்சாச்சா?

பர்:—உடைஞ்சு போச்சு கம்பி! படம் உடையாமல் தப்பிச்சுது!

வேங்:—என்ன, கம்பியா உடைஞ்சுது? எங்கே...

பர்:—துருப பிடிச்சிருக்குபோலிருக்கு...ஒரு திருகு திருகினேன் முறிஞ்சு போச்சு...

வேங்:—அத்தனை கனம் உன் பிள்ளை!

பர்:—கனவானு?...

(சிரிக்கிறாள்.)

வேங்:—உம்...குலுக்காதே.....கண்ணுடி உடையப் போறது!...

பர்:—இல்லே. இல்லே...எல்லாவற்றையும் ஜாக்கிரதையாய் எடுத்தாச்சு!...ஒளிக்க வேண்டியதுதான் பாக்கி... சந்துருவைப்பற்றி அவர்கள் பேச்செடுத்தால்...பிடி கொடுக்காமல் பேச வேண்டியதுதானே...

வேங்:—பிடிகொடுக்கக்கூடாது...பிடிபடவும் கூடாது! அந்தப்பேச்சிலிருந்து நழுவப் பார்க்கணும்!...

பர்:—ஆகட்டும்...ஆனால் நான் அன்னம்மாளைப்பற்றி விசாரிக்கப்போனால், சந்துருவைபபற்றி பேச்சு வந்துடுமோ என்னமோ......ஏதாவது கேட்டுவிடுவார்களோ என்னமோ முந்திமாதிரியே......

வேங்:—எப்படியும் சந்துருவைப்பற்றி அவர்கள் கேட்கத்தான் கேட்பார்கள்...குசலம்;...பேச்சு வரத்தான் வரும்...ஆனால் பிடிபடாமல் மழுப்பிவிடணும்...பேச்சை டக்குன்னு நிறுத்தப் பார்க்கணும்...



பர்:—அன்னம்மாளுக்கு இன்னும் அதே மாதிரிதானே என்னமோ பல் அழகு?

வேங்:—அதை அவர்களையே கேட்கப்போகிறாயா?... நம்ம சந்துருவுக்கு அவள் வேண்டாம் என்றால் அவளைப் பற்றி ஏதாவது குற்றமாய்க் கேட்கவேண்டாம்!...அவள் ஒல்லி, கறுப்பு...அதனால் பல் வரிசை கொஞ்சம் துருத்தின மாதிரி தெரியும்...அவ்வளவுதான்...பல் வரிசை சீரானதுதான்...முகத்திலேயும் ஒரு அசட்டு...

பர்:—அடியம்மா...அவள் கை வீச்சும், கால் பாய்ச்சும், குரலும்...போதும்...உங்க சின்ன மாமா எப்படித்தான் சொன்னாரோ சந்துருவுக்கு அவளை முடிச்சுவிடலாம்னு யோசனை?

வேங்:—அது 7, 8 வருஷத்துக்கு முன்! இப்போது காலம் மாறிப்போச்சு! கணபதிக்கு சந்துருவின் நினைவே யிருக்காது அநேகமாய்!...என்னவோ, சைக்கிளில் போகும்போது திடுக்கெனப்பார்த்தேன்...மரியாதைக்கு இறங்கிப் பேசவேண்டியதாச்சு!

பேச்சு நடுவிலே மரியாதைக்கு வீட்டுக்கும் அழைக்க வேண்டியதாச்சு!...இப்போ சந்துரு ஜாதகத்தைக்கேட்டால் என்ன பதில் சொல்றது நாம்? மறுக்க முடியுமா? கொடுத்தப்புறம் ஜாதகம் பொருந்தியிருக்கு என்றால்... மனஸ்தாபம் தான்!...அவா வருகிறதைப்பற்றி முதலில் எனக்கும் சந்தோஷமாகத்தான் இருந்தது...இப்போது அந்தப் பழைய 'சம்பந்த'ப் பேச்சு நினைவு வந்ததும் எனக்கும் என்னமோ குழம்புகிறது...

வேங்:—என்ன செய்கிறது? எப்படியோ சமாளிக்க வேண்டியதுதான்! மனஸ்தாபம் வரட்டுமே...என் உத்தியோகத்திற்கேதான் உலை வைக்கிட்டுமே கணபதி... மேலதிகாரிகளிடம் பொய்கோள் சொல்லி...அதற்கெல்லாம் மசிவோமா, வேண்டாத நாட்டுப்பெண்ணைக் கட்டிக்கொண்டு! சந்துருவுக்கு ரதி கிடைத்தால்தான் நான் ஒப்புவேன்!

பர்:—ரதிகள் ஏது இந்த நாளிலே! ஏதோ நல்ல அழகான நாட்டுப்பெண் கிடைச்சால்போதும்...அன்னம்மாள் மாதிரிவேண்டாம்...கடவுள் கிருபை எப்படியோ?

வேங்:—சரி, கொண்டா, அந்த ஐந்து படத்தையும்... என் பீரோவில் ஒளித்து விட்டு வருகிறேன்!...

பர்:—கூடத்திலேயும் இரண்டு படங்கள் இருக்கு!...... அவர்கள் அங்கேயும் வந்தால்?

வேங்:—அப்படியெல்லாம் வீட்டில் உலாத்த நேரமிருக்காது! நீயும் காப்பி கீப்பி என்று உபசாரம் பண்ண வேண்டாம்...ஏதோ பொதுவாய் மற்ற விஷயங்களைப் பற்றி இங்கேயே ஹாலில் குசலம் விசாரி. போதும்!... சந்துருவைப்பற்றி அதிகம் சொல்லிக்கவேண்டாம்! அப்படி அவர்கள் உள்ளே வந்தார்களோ வீட்டைப் பார்க்கணும்னு விரட்டியடிச்சுடுவேன் நான்......

பர்:—ஐயையோ...அப்படியெல்லாம் பேசாதேங்கோ! நீங்களும் வந்தவர்களிடம் மரியாதையாயிருங்கோ...நான் ஒன்றும் சொல்லித்தரவேண்டாம் உங்களுக்கு...

வேங்:—சரி, சரி, நீ போ போட்டோக்களை எடுத்துண்டு! 'கேட்' ஓசைப்படுகிறது!

பர்:—இந்தாங்கோ; நீங்களே உள்ளே வச்சுடுங்கோ....

வேங்:—(மென்குரலில்) சரி, தா. (எதிரறையில் மறைகிறார்)

[கணபதியும் மீனாட்சியும் உள்நுழைகிறார்கள்]

குரல்:—சௌக்கியமாம்மா?

பர்:—வாம்மா, மீனு! வாங்கோ, இரண்டுபேரும்! ரொம்ப சந்தோஷம்! மூட்டை முடிச்செல்லாம் எங்கே காணோம்? இப்போதுதான் வருகிறீர்களா? பஸ்ஸிலா, ரயிலிலா?

கண:—வெங்கிட்டு சொல்லவில்லையா எல்லாம்?

மீனாட்சி:—அவர் சைகிள் இல்லையோ, திண்ணையில் இருக்கிறது? உள்ளே வராமல் எங்கேயானும்——

பர்:—நீங்கள் வருகிறதாகச் சொன்னார்....வேறு விவரம் எதுவும் சொல்லவில்லை....உள்ளே போயிருக்கிறார்......

கண:—ஓ. அப்படியா' ...... நாங்கள் இப்போது அவசரமாய் துறையூர் போகவேண்டும். நாளைக்கு திரும்பி வந்துஉங்கள் வீட்டில் மூன்று நாள் முகாம் போடுவோம்.

பர்:—பேஷாய்! ஒருவாரம் இருந்து விட்டுப் போகணும். அப்படியென்ன துறையூரில் அவசரக் காரியம்?

மீனா:—ஒரு வார்த்தையில் சொல்லி விட முடியுமா அதை? (மென்சிரிப்பு)

பர்:—அன்னம்மாளை அழைத்து வரவில்லையா?

கண:—அதெப்படி முடியும்?

பர்:—இதோ, இப்படி உட்காருங்கள்; (நாற்காலி இழுபடும் சத்தம்)

[வேங்கடராமய்யர் வருகிறார்]

வேங்:—கலியாண விஷயமாயிருக்கலாம் துறையூர்ப் பயணம்...அவள் எப்படி கூட வரமுடியும், பர்வதம்?

மீனா:—அவளுக்குக் காலேஜ் படிப்பு!........அதனால் தான் ...... எப்படி....



வேங்:—இண்டர் மீடியேட்டிலா படிக்கிறாள்?

கண:—ஆமாம், இரண்டாம் வருஷம்!

வேங்:—பணம் கட்டணுங்கிற கவலை உங்களுக்கு இருக்கும், பாவம்!

மீனா:—கவலையா எங்களுக்கு? அவள்தானே இங்கிலீஷில் முதல் மார்க்கு!

பர்:—அப்படியா?

வேங்:—செலக்ஷன் பரீக்ஷை கிடையாதாமே இனிமேல்? கவலை என்ன?

பர்:—என்ன இருந்தாலும் கவலையில்லாமல் இருக்குமா?

வேங்:—அது வாஸ்தவம்! பெண் படிப்பில் கெட்டிக்காரியாயிருக்கலாம்! உடம்பு திடம் வேணும்......பரீட்சைக்கு முன்னால் படுத்துவிட்டால் இரண்டு வருஷப் படிப்பும்...

கண:—ஏதோ மீனாக்ஷி சுந்தரேசர் அருளால் நோய் நொடி, குளிர், காய்ச்சல்னு படுத்ததில்லை அவள் இதுவரை!

பர்:—நிஜமாவா?......அப்படியானால் பகவான் கிருபைதான் அது!....பாருங்களேன்......எங்கள் சந்துருவை.... இந்தப் பல்கிட்டுகிற குளிரிலேயும் ஹாஸ்டலில் பச்சை ஜலத்தில்தான் முழுகுகிறானும்!......காய்ச்சல் கீய்ச்சல் வந்து படுத்துவிட்டால்......

வேங்:—சரிதான்...நீ சத்துருவைப்பற்றி பேச்செடுத்துவிட்டாயா?...இனிமேல் மகாபாரதம்தான்!...கொஞ்சம் வாயை மூடும்மா!

கண:—சந்தருவைப்பற்றி......

பர்:—இன்னும் ஈரத்தலையில் தேங்கா எண்ணெய் தடவிக்கொள்கிற கெட்ட பழக்கம்...எப்படி உலரும் மயிர்?

மீனா:—கிராப்புத்தானே...அழகாக மயிர் படியணும் என்றால் அப்படித்தான் செய்யணுமாமே?

பர்:—ஆனால், எப்படி உலரும் ஈரம்?...நீர் கோத்துக்காதோ?...என்ன சொன்னாலும் இந்தக் கெட்ட பழக்கம் விடவில்லை...

வேங்:—கெட்ட பழக்கம் ஒன்று, இரண்டா...பெரிய பாரதம்...

கண:—அப்படியா?

வேங்:—அவன் அம்மா கெஞ்சிக் கேட்கிறாள், தமிழில் கடிதம் எழுதச் சொல்லி;...தானும் பார்த்துச் சந்தோஷப்படலாம் என்று; முரடன், இங்கிலீஷில்தான் எழுதுகிறான்!

பர்:—அப்பா, அம்மா பேச்சு லக்ஷ்யமிருந்தால்தானே!

மீனா:—பாவம், படிப்பெல்லாம் இங்கிலீஷ்! தமிழில் எழுதுகிற பழக்கம் இல்லாமல், தயங்குகிறான்போலிருக்கு, பாவம்!... பொழுதும் இல்லையோ என்னமோ நிதானமாய் ஆலோசித்து எழுத!

வேங்:—இரவு $11\frac{1}{2}$-மணிக்குத்தான் படுக்கையாம்... இவன் உருப்படுவானா?...காலையிலும் சீக்கிரம் எழுகிறானும்...உடம்பு என்ன ஆகும்?

கண:—நல்ல பழக்கமே இது! பரீட்சையிலும் சிறப்பாகத் தேறணும் என்ற ஆவல் குழந்தைக்கு. முன்னைப் போலவே!

வேங்:—முன்னைப்போலவா? முன்னைப்போல சிறு பையனா இன்னும்? கொஞ்சம் தன் பொறுப்புத்தெரிஞ்சுக்க வேண்டாமோ? ஜாக்கிரதையாய் உடம்பு கெடாமல் பார்த்துண்டு படிக்கவேண்டாமோ?

பர்:—இவ்வளவு படிச்சும் அப்படியொண்ணும் ஓசத்தியாய் தேறக்காணோம்!

வேங்:—எப்படி முடியும்? ரேடியோவுக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டே, அந்த இரைச்சலுக்கு நடுவில் கணக்கும், 'கிறுப்' போடுகிறதும்......இப்படியா படிக்கிறது ஒரு பையன்?

பர்:—ஆமாம்......இது ஒரு மகா கெட்டபழக்கம் அவனிடம்!

மீனா:—இப்படிப் படிச்சும் பி. எஸ் சி. முதல் வகுப்புலே தேறி இருக்கானாமே!

கண:—அவன் காலேஜில் அவன் தான் முதலாமே!

மீனா:—அஷ்டாவதானம்னு சொல்றாளே....அதுமாதிரி போலிருக்கு சந்துருவும்......எப்படியோ......

வேங்:—அஷ்டாவதானமோ......என்ன தானமோ...... மகா ஊதாரி...அநியாயச் செலவு....

கண:—இவனுக்கு வந்த மார்க்குகளை நாலு பேருக்கு தானம் செய்து பாஸ் பண்ணலாமாமே....அவ்வளவு அபாரமான மார்க்குகளாமே...செலவுக்கென்ன...இந்த அகவிலை காலத்திலே ...

வேங்:—என்ன பிரமாத மார்க்கு?......யூனிவர்சிடியில் முதல் இல்லை...ஒரு பரிசு, பதக்கம் கிடையாது!

கணா:—அதனாலென்ன குறை......ஸ்காலர்ஷிப் கிடைச்சிருக்குமே?

வேங்:—அப்படியொண்ணும் இல்லையே.

மீனா:—ஏதோ. முதலியாரோ செட்டியாரோ அளித்தாராமே ஸ்காலர்ஷிப்.

பர்—அந்தப்பணம் எத்தனை...ஏதோ...

கணா:—ஏன் அவர்கள் தாராள சிந்தனைபோல் யாருக்குண்டு?...

வேங்:—மாதம் முப்பது கிடைத்தால் போதுமா கணபதி?...அவன் செலவு அதற்குமேல் நூறு!

பர்:—ரொம்ப ஊதாரிச் செலவாளிதான், மீனு!...... எப்படி இவன் பிழைக்கப் போகிறானோ....

வேங்:—மாதா மாதம் என்னவோ புத்தகமாம், பத்திரிகைகளாம் வாங்கிக் குவிக்கிறான்.

பர்:—படிக்க முடியுமோ அத்தனையும்? வீண் செலவு....

வேங்:—ஏன் அவனைப்பற்றி இத்தனை பேச்சு?...... முழு உதவாக்கரை!

பர்:—உதவாக்கரை யென்ன? பொறுப்பத்த பிள்ளை அவவளவுதான் ...

வேங்:—போதும் உன் கரிசனம், அவனுக்கு?

கணா:—பாவம், அவனால் உங்களுக்கு ரொமப கவலை போலிருக்கு!...........என்னால் ஏதாவது உபயோகம் ஆகுமோ அவனுக்கு.........சொல்லுங்கள்—கூடுமானால் செய்கிறேன், வெங்கிட்டு!

வேங்:—அவன் தலைவிதி! உங்களாலும், எங்களாலும் என்ன முடியும்?

பர்:—இன்னும் படிப்பு இருக்கிறது அவனுக்கு. படிச்சுத் தேறி வேலைக்கு அலையும்போது உங்களாலான சிபார்சு செய்யுங்கள்!

கணா:—வேலைக்குச் சிபார்சுகளா......என்றல் முடியுமாம்மா அது?

மீனா:—அன்னம்மாளுக்குப் பெரிய வேலை போட்டுத் தருகிறதாகச் சொன்னாரே வேலாயுத நாயுடு.........அவரிடம் சொல்லி.........

வேங்:—அப்படியா...அன்னம்மாளுக்கு உத்தியோக லிபிதான் போலிருக்கு!...... கலியாணம், கிலியாணம்...

பர்:—கல்யாணம் என்றால் கிலியாயிருக்காக்கும் அவளுக்கு?

வேங்:—கலியாணம் நடக்காதுங்கிற நம்பிக்கையோ?.

மீனா:—ஏன் ...... அவளுக்கெதுக்கு...........

பர்:—படிச்ச பெண்ணுன்னால் இந்தக்காலம் ஒதுங்குகிறார்களே ......அதனால் இருக்கலாமோன்னு சொல்றார் அவர்.........

கணா:—அவளைப்பார்த்தால் ஒதுங்க மாட்டார்கள்...

வேங்:—ஏன் ஒதுங்குவார்கள்? எங்கே ஒடிஞ்சு விழுந்திடுவாளோ அப்படின்னு ஜாக்கிரதையாய் கூடப் போகணும் யாராவது!

பர்:—நல்ல உடம்பாயிருக்கிற பெண்களே ஜாஸ்தி படிச்சால் குச்சியாயிடறதுகள் ......அன்னம்மாள் முந்தியே ஒல்லி......?

கணா:—முந்தி ஒல்லி......? இபபோ அவளைப் பார்க்கணும் நீங்கள்! அவள் 'டென்னிஸ்' ஆடுகிற அழகையும் பார்க்கணும்! என்ன ஷோக்காய் ஆடுகிறாள்!

வேங்:—அவளுக்கும் 'டென்னிஸ்' பழக்கமா?

மீனா:—இரண்டு 'கப்' பரிசு வாங்கியிருக்கிறாள்!

கணா:—இல்லை.........ஒன்றுதான் டென்னிசுக்கு!...... மற்றொன்று அவளுடைய நாவன்மைக்காக! 'இலக்யூஷன்' பரிசு!

வேங்:—அப்படியா. சரிதான். எப்பொழுதுமே அவள் மகா......பெரிய வாய்ப்பேச்சுக்காரிதான்.........தெரியும் எனக்கு.

பர்:—அம்மாடி......ஒரு ராத்திரி முழுதும் பேசிக் கொட்டினாளே.........ஏழுவருஷத்துக்கு முந்தி......இன்னும் நன்றாய் நினைவிருக்கு......

மீனா:—அதுதான் விளையும் பயிர் முளையிலே என்கிறது......

கணா:—பேச்சு விஷயத்தில் சரிதான் வசனம்...ஆனால் அவள் உடம்பும் நிறமும்....

வேங்:—முன்னைவிட கறுத்திருப்பாள்...பாவம், படிப்பும்....

கணா:—கறுக்கிறதா?......வெள்ளக்காரச்சி!

பர்:—பூட்ஸ், கௌன், ஹாட்...இதுதானாக்கும் வழக்கம்

மீனா:—யார்? எங்கள் அன்னமா?......செருப்புக்கூட போடுவதில்லை முக்கால்வாசிநாள்! வண்டியில் போவாள் வருவாள் ராணிமாதிரி!......உடம்பும் சதை கூடிக் கொண்டு விட்டது வெய்யிலில் நடையுமில்லை......நல்ல வெளுத்த நிறம் வந்துவிட்டது உடம்புக்கு!

பர்:—நான் பார்த்தபோது அவள் இருந்ததற்கும்...... இப்போ நீ சொல்வதற்கும்......என்னால் நம்பவே முடியாதுபோலிருக்கே மீனு!......

வேங்:—கணபதியின் பெண்ணு என்று ஒருவரும் நம்ப முடியாதபடி இருந்தவளா—இப்போது...

கணா:—கணபதியின் பெண்ணேதான் என்று ஊகித்து விடும்படி மாறியிருக்கிறாள்!

"எங்கே ஒடிஞ்சு விழுந்துவிடுவாளோனனு" இருந்தவள்..........................

கணபதியின் பெண் தான் என்று ஊஹித்து விடும்படி மாறியிருக்கிறள்!"

வேங்:—அவளை நேரில் பார்த்தாலொழிய நம்ப மாட்டேன் (சிரிக்கிறார்) இல்லை அவளைப்பற்றி துறையூரில் பிள்ளை வீட்டாரிடம் எப்படி வர்ணிக்க வேண்டும் என்பதற்கு ஒத்திகையோ இது?

மீனா:—அவள் கல்யாணத்தைப்பற்றியா எங்களுக்குக் கவலை? நாங்களா கவலைப்படுகிறோம்?

வேங்:—இந்த நாளிலே பெண்களேதான் கவலைப் படும்படித்தானே இருக்கு! அப்பா, அம்மாவுக்கு கவலை குறைச்சல்தானே. இல்லையா? (சிரிக்கிறார் லேசாக)

பர்:—எதுக்கும் நல்லது... பெண் பார்க்கிறதை வச்சுக்காதேங்கே போட்டோ எடுத்து அனுப்பிவிடுங்கோ! அதான் 'பாஷன்' கூட!

மீனா:—அதுக்கென்ன... அவள் போட்டோ வீடு பூராயிருக்கு! புதுசா எடுத்தனுப்பணுமா. அப்படியே செஞ்சாலும் போச்சு!... இந்தப் பையிலே கூட இருக்கு ஒண்ணு!

வேங்:—துறையூருக்குக் கொண்டுபோய் காட்டவா?

கண:—உங்களுக்கு வேணுமானாலும் காட்டுகிறேன் இப்போ!

வேங்:—நாங்கள் தான் நேரிலேயே அவளைப் பார்த்திருக்கோமே!

கண:—சரி, வேண்டாமென்றால் எடுக்கவில்லை...

பர்:—இல்லை, எடுங்கள்...ஆறு வருஷமாச்சே அன்னம்மாளைப் பார்த்து!...பார்ப்போம்...

மீனு:—பைக்குள்ளே பகவத்கீதை புஸ்தகத்துக்குள்ளே செருகியிருக்கு...ஜாக்கிரதையாய் எடுங்கள்...

கண:—ஓஹோ...கீதைக்குள்ளே திணற வைத்துவிட்டாயா அவளை?

மீனு:—திணறுவானேன்? திணறாமல் கீதைப் பரீட்சை எழுதி பாஸ்பண்ணி ஒரு கட்டுப் புஸ்தகம் பரிசு வாங்கினாளே அன்னம்!

கண:—(புஸ்தகத்தை குலுக்குகையில்) எங்கே, காணோம் இதிலே!

பர்:—அதோ...தரையில் விழுந்துவிட்டதுபோலிருக்கு!

வேங்:—அடடா......கீழே விழுந்துவிட்டதே! (எடுக்கிறார்)

பர்:—எங்கே, காட்டுங்கள் எனக்கும்! (அணுகுகிறாள்)

வேங்:—இதென்ன...சந்துரு!

பர்:—சந்துருவா?...எங்கே! ஆமாண்டி!...சந்துருவும் அன்னம்மாளும் பக்கத்துப் பக்கத்தில்...

வேங்:—இதென்ன விபரீதமாயிருக்கு?

பர்:—எப்போ சந்தித்தார்கள்?...எப்படி போட்டோக்காரனிடம் கூச்சமில்லாமல் நின்றார்கள்...?

கண:—நான்தான் போட்டோக்காரன்!

மீனு:—போன வருஷம் பெரிய லீவில் எங்கள் ஊருக்குத்தானே ஒரு சிநேகிதனோடு வந்தான் சந்துரு!...

பர்:—ஆமாம்...சிநேகிதனுக்குத் துணையாய் கூட மாட இரண்டு நாள் போனான்...உங்களைப்பார்த்ததாகக் கூட சொல்லல்லையே...

வேங்:—நாம் ஒரு கேள்வியும் கேட்கல்லை...சமர்த்துப் பிள்ளை, அவனும் சொல்லல்லை...

கண:—அப்போ சந்தித்தோம்...சிநேகிதனுடைய உறவுக்காரர் வீட்டில் காலையில்...எங்கள் வீட்டில் மாலையில்...

பர்:—எங்களுக்கு இது ஒன்றும் தெரியாதே!

மீனு:—தானாகச் சொல்வானா இதையெல்லாம்? அதுவும் இவர் வேடிக்கைக்காக இரண்டுபேரையும் நிறுத்தி எடுத்ததைச் சொல்வானா?...எங்களைப் பார்த்ததாகவேச் சொல்லிக்கொள்ளாமல் இருந்துவிட்டான்......அனாவசியமென்று!...

பர்:—அனாவசியமா? லேசானதா இந்தக் காரியம்... இரண்டு பேரையும் சேர்த்து எடுத்திருப்பது! ...தலை போகிற காரியம் ...

வேங்:—தலைபோகிறதா?...மானம் போகிறது!

கண:—ஒரு மானமும் போகாது!...சந்துருவுக்குத்தான் அன்னம்! "அன்ன பூரணி"யல்ல அவள்; "அழகு பூரணி" என்று தன் நண்பனிடம் அவன் சொன்னானாம்!

பர்:—நிஜந்தான்...அழகு பூரணமாகவேயிருக்கிறது!... சிரித்த முகத்திலும் பல் வரிசை எட்டிப் பார்க்கக் காணோம்! ஆச்சரியமாயிருக்கு!

வேங்:—ஆச்சரியமென்ன! எல்லாம் போட்டோ டிரிக்! நீட்டியிருந்த பல் கூட சின்னதாகிவிடுமா. உடம்பும் நிறமும் மாறினாலும்!

கண:—சதைப் பிடிப்பு வந்ததும், கன்னங்கள் ஊதினதும் பல் வரிசையும் உள்ளே அடங்கிப் போச்சு! எனக்கென்னப்பா தெரியும் 'போட்டோ டிரிக்'! அவ்வளவு திறமை இன்னும் வரவில்லை! (சிரிக்கிறார்).

பர்:—சந்துருவின் முகத்தைவிட அன்னம்மாளின் முகம் வெளுப்பாய்த்தெரிகிறதே!

வேங்:—இது சுலபமான போட்டோ 'டிரிக்'தானே, கணபதி? (சிரிக்கிறார்).

பர்:—'டிரிக்' ஒண்ணும் இருக்காது! பவுடர் பூசியிருப்பது கொஞ்சம் ஜாஸ்தியாயிடுத்தோ என்னமோ?

கண:—பவுடர் எதுக்குத் தொடணும் அவள்?

மீனு:—நாங்கள் பார்த்தபோதுகூட சந்துருவை விட எங்கள் அன்னம்தானே வெளுப்பாயிருந்தாள்?

கண:—அன்னமேதான் அவள்!

வேங்:—இருக்கலாம்...சந்துருவுக்கும் சந்திரன் மாதிரி முகத்தில் களங்கம்தானே கொஞ்சம்! முகக்ஷவரம் செய்கிற சதி!

பர்:—சதியைப் பாருங்கள்...சந்துருவின் சதி...இவர்களின் சதி...(லேசாக சிரிக்கிறாள்)

கண:—சந்துருவின் சதி இதோ...பாருங்கள் முகத்தை நன்றாய்! (அவரும் சிரிக்கிறார்)

பர்:—உம். பார்த்தேன்...அன்னக்கவளங்களை நாசூக்காய்வாயில் அடைத்துக்கொண்டு இருக்கிறாளோ...அன்னபூரணி!

மீனு:—போட்டோவுக்கு நிற்க அவள் எந்த சதியும் செய்யவில்லை! அவளைச் சந்துருவுக்குக் கொடுக்காமல் தடுக்க ஏதாவது சதி நடக்கக்கூடும் என்றுகூட அவளுக்கு எண்ணமில்லை!

கண:—ஆமாம்!...(அவரும் சிரிக்கிறார்)

பர்:—நீங்கள் துறையூருக்கு எதுக்குப் போகணும்?... இங்கேயே வரனிருக்கும்போது?......பாவம். அவளுக்குத் தெரியாது உங்கள் சதி!......

கண:—வரனுக்காகவா......கல்யாண விஷயமாகவா நாங்கள் துறையூர் போகிறோம்? அப்படிச் சொன்னோமா? நிலம் விஷயமாகப் போகிறோம்......கட்டாயம் போயாகணும்......நீங்கள்தான் என்னென்னமோ கற்பனை செய்துவிட்டீர்கள்.........

வேங்:—சதியும் செய்துவிட்டோம்.........

கண:—நிஜந்தானா? என் ஊகம்?......இல்லாத பொய்கள் சொல்லிக் கல்யாணம் நடத்து என்பார்கள்... பொல்லாத பொய்கள் சொல்லி பெண்ணும் பிள்ளையும் விரும்புகிற கல்யாணத்தைத் தடுக்கத்தானே பார்த்தீர்கள்?

மீனு:—தங்கள் பிள்ளையையே என்னமாய்த் தாழ்த்திப் பேசினார்கள்! அம்மாடி!

கண:—அதனாலே, நம்ம பெண்ணைத் தாழ்த்திப் பேசினதையும் லட்சியம் பண்ணக்கூடாது............சரிதானே? (சிரிக்கிறார்)

பர்:—அன்னம்மாள் முந்தி இருந்ததை நினைச்சுப் பேசினது......அது போகட்டும்......இப்போ அவள் எங்கள் சந்துருவையும் மிஞ்சினவள்தான்......

கண:—மிஞ்சினவள் என்றால்......எதில்? தாழ்விலோ

(சிரிப்பு) •

வேங்:—எங்கள் ராஜா சந்துருவைப்பற்றி நாங்கள் சொன்னதெல்லாம் உயர்த்தித்தான்! சொன்னதில் எல்லாம் உண்மைதான்! ஆனால் அதை நாங்கள் சொன்ன விதத்தில்தான்......

பர்:—சதி!

கண:—ஆமாம்! (சிரிக்கிறார்)

புதிய தொடர்கதை



3

புத்தம் புதிய சிறிய கார் ஒன்று பங்களா முகப்பில் வந்து நின்றதும், "வண்டியில் ஏற்றி விட்டாயா?" என்று டிரைவரைப் பார்த்துக் கேட்டான் விசுவநாதன்.

"ஆமாம் சார்."

"சரி நீ வீட்டுக்குப் போய்விட்டு விடியற்காலையிலேயே வந்து விடு. ஏழு மணிக்குள் வெளியில் கிளம்பவேண்டும்" என்றான் விசுவம் அப்புறம் எதையோ நினைத்துக்கொண்டு, "இந்தா தாஸ், அம்மா ஏதாவது சொன்னாங்களா?" என்று கேட்டான் வேண்டாவெறுப்பாக.

தாஸ் சிறிது தயங்கினான் உடனே பதில் சொல்லாமல்.

"என்ன, சொல்லேன்."

"உங்களுக்கு ஒன்றும் சொல்லவில்லை. எனக்குத்தான் சொன்னாங்க, "ஐயாவைப் பாத்துக்கோன்னுங்க!"

"ஓகோ! சரி போய்விட்டு வா" என்று வீறுப்புடன் கூறிவிட்டு உள்ளே சென்றான் விசுவம்

வெளிப்பார்வைக்கு அவன் எவ்வளவுதான் மிடுக்காக இருந்தபோதிலும் உள்ளூற அவன் மனம் எதையோ பறிகொடுத்துவிட்டு நிற்பதுபோல வெறிச்சென்றிருந்தது வீட்டில் சமையல்காரி, வேலைக்காரர்கள். விதவை அத்தை, கடைசித் தம்பி ஒருவன் எல்லோரும் இருந்தும எங்கும் சூனியமாய் இருப்பது போலத் தோன்றியது. வீட்டில் சுசீலா ஒருத்தி மட்டும்தான் இல்லை. அவள் இருக்கும்போது வீடெங்கும் எல்லாம் நிறைந்திருந்தன போல இருந்தது

ஸ்நான அறையில் முகத்தை அலமபிக்கொண்டு வந்ததும் சாப்பாடு தயாராய் இருந்தது. அத்தை குத்து விளக்குக்கு எதிரில் உட்கார்ந்து ஜப மாலையை உருட்டிக்கொண்டே சாப்பாடு பரிமாறுவதை மேற்பார்வை பார்த்துக்கொண்டாள் காலேஜில் படிக்கும் சுவாமி அடக்க ஒடுக்கமாக வாய் திறவாமல் அண்ணனோடு உட்கார்ந்துகொண்டான். இவ்வளவு மௌனமாக அங்கே சாப்பாடு நடந்ததேயில்லை. வேலைக்காரன் ஒருவன் மேலே மெத்தையைத் தட்டிப்போட்டு புது உறை ஒன்றை எடுத்து மாட்டினான். விசுவம் கையை அலம்பிவிட்டு நேராக விடுவிடென்று மெத்தைக்குப் போய்விட்டான். சிறிது நேரங்கழித்து கையில் வெத்திலைத் தட்டுடன் சுவாமி மேலே போனபோது விசுவம் படுக்கையில் சாய்ந்துகொண்டு எதிரே இருந்த படமொன்றையே பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டான். பார்வையை வேறு புறமாகத் திருப்பிக்கொண்டு கட்டிலுக்கருகில் இருந்த ஸ்டூலில் தட்டை வைத்துவிட்டு நின்றான் சுவாமி.

விசுவத்துக்கு இன்று எல்லாமே புது மாதிரியாக நடப்பதுபோலத் தோன்றியது. அதில் ஒரு புதுமை இருந்ததுபோலவும் தோன்றியது. ஆனால் அந்தப் புதுமை இவ்வளவு கசப்பாக இருக்கும் என்பதை அவன் கற்பனை கூடச் செய்தது கிடையாது. தட்டை வைத்துவிட்டு சுவாமி ஏன் நிற்கிறான் என்பதும் தான் இப்போது என்ன செய்யவேண்டும் என்பதும் அவனுக்கு விளங்கவில்லை.

"தட்டு இங்கேயே இருக்கட்டும் போ" என்றான்.

"சரி" என்று சொல்லிவிட்டு சுவாமி மேலும் தயங்கி நின்றான்.

"என்ன?"

"நாளையிலிருந்து ஒரு மாதம் காலேஜ் லீவு அண்ணா! ஊருக்குப் போயிட்டு வரட்டுமா நாளைக்கு?" விசுவம் இதற்கு உடனே விடையளிக்கவில்லை. காலேஜ் லீவு விட்டிருப்பது என்னவோ வாஸ்தவம். ஆனால் சுவாமி இப்பொழுது ஊருக்குப் போவது சரியா, போகலாமா என்ற கேள்வியே இப்பொழுது எழுந்தது. அவன் ஊருக்குப் போனால் சுசீலா மனஸ்தாபப்பட்டுக்கொண்டு ஊருக்குப் போய்விட்டது அப்பா, அம்மாவுக்குத் தெரிந்துவிடும். மனஸ்தாபத்தின் காரணம் என்னவென்று திட்டமாக யாருக்கும் தெரியாவிட்டாலும் அவர்களுக்கு இந்த விஷயம் உடனே தெரிவது அவ்வளவு சரியாகப் படவில்லை. நாளடைவில் இது சரியாகப் போகலாம்; அல்லது போகாமலுமிருக்கலாம். ஆயினும்

பெற்ருேர்களின் தாக்குதலையும் தற்போது சமாளிக்கும்படி நேருவது அவனுக்கு அசாத்தியம். சுவாமியிடம் இதையெல்லாம் காட்டிக்கொள்ள முடியுமா?

வெகு நேரங்கழித்து ஏதோ முடிவுக்கு வந்தவன் போல யார் எதை வேண்டுமானுலும் செய்யுங்கள் என்ற தொனியில், "சரி; நீயும் கிளம்புகிருயா? போவதானுல் போ" என்ருன்.

சுவாமிக்கு மன்னியிடத்தில் உயிர் என்பது அவனுக்குத் தெரியும். அனுதாப ஸ்டிரைக் செய்வதைப் போல இந்த லீவை அனுதாபப் பிரயாணம் செய்வதற்கு உபயோகப்படுத்திக்கொள்கிருன் என்பதும் அவனுக்குத் தெரியும். அவள் சொல்லிக்கொள்ளாமல் போனுள். இவன் சொல்லிக்கொண்டு போகிருன். இதைத்தவிர வேறு வித்தியாசம் எதுவும் விசுவத்துக்குத் தோன்றவில்லை.

வெறுமே அவனைச் சீண்டிவிட எண்ணி, "மன்னி ஏதாவது உன்னிடம் சொல்லிவிட்டுப் போனுளா?" என்ருன்.

"இல்லை—"

சுசீலாவுக்கும் தனக்கும் நிகழ்ந்த மனஸ்தாபம் எதுவும் வீட்டில் இருப்பவர்கள் யாருக்கும் தெரியாது என்பதை விசுவம் அறிவான். யாரும் அவள் கிளம்பிச் செல்லும்போதுகூட அவன் வாய்க்குப் பயந்துகொண்டு 'கீச்மூச்'சென்று சத்தம் காட்டவில்லை. அவனை எதிர்த்துப் பேசும் தைரியம் ஒருத்திக்குத்தான் இருந்தது. அந்த ஒருத்தியே இன்று கிளம்பும்போது வேறு யார் பேசமுடியும்? அவள்தான் குடும்ப நிர்வாகத்துக்கும், அவனுடைய வருவாய்க்கும் தகுந்த ஏற்பாடும் தொடர்பும் செய்து வைத்திருந்தாள். அவள் இல்லாமல் இனி [illegible] எது சரிவர நடக்கும்? எல்லாரிடமும் பிரியமாய் நடந்துகொண்டு, ஹிதமாய்ப் பேசி, காரியா காரியங்களை அவள் திறம்பட கவனித்து வந்தாள். இத்தனைக்கும் ஒரு துரும்பை எடுத்து அப்புறம் போட வேண்டிய அவசியம் அவளுக்கு இல்லை. எல்லாரிடமும் நெருங்கிப் பழகி, அவர்கள் குறைகளை நன்கு அறிந்து அனுகூலமான உபசாரங்கள் செய்வதில்தான் அவள் வெற்றியின் ரகசியம் இருந்தது. அப்படிப்பட்டவளிடம் இந்த சுவாமிக்கு மதிப்பு இருந்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. விசுவத்துக்கு இவைகள் யாவும் தெரியாமல் இல்லை. அவன் மனசிலே அவள் இல்லாத குறை ஒருபுறம் உறுத்திக்கொண்டேயிருந்தது. மேலுக்கு அவன் கவலையற்றவன்போலவும், எதையும் லட்சியம் செய்யாதவன்போலவும் நடந்துகொள்ள முயன்ருன்.

கடைசியாக, சுசீலா பேசியதிலிருந்து அவள் இனி தன் முகத்தில் விழிப்பது சந்தேகம் என்றே அவனுக்குத் தோன்றியது. அதனுல் ஏற்படும் விளைவுகள் எத்தகைய விபரீதங்களை உண்டாக்கும் என்பதை அவன் எண்ணிப் பார்க்கவே அஞ்சினுன்.

சுவாமி கீழே இறங்கிப் போன பிறகு தன் வாழ்க்கையில் வறட்சியும் வெறுப்பும் கலந்த புது அத்தியாயம் ஒன்று ஆரம்பமாவதுபோல அவனுக்குத் தோன்றியது. அவனுடைய யோசனைகளும் எண்ணங்களும் ஒரு வரம்பைத் தாண்டிச்செல்ல மறுத்துவிட்டன. எதிரே அமைதியும் அழகும் பொலியும் சுசிலாவின் படம் தொங்கிக்கொண்டிருந்ததை வெகுநேரம் பார்த்தபடி சாய்ந்துகொண்டிருந்தான். கல்யாணமான மறு வருஷம் எடுத்த போட்டோ அது. அவனுக்குத் தெரியும் அந்தப் படத்தை எடுக்க நேர்ந்த சம்பவம். அதை நினைத்துக்கொண்டதுமே அவன் உடலெங்கும் ஒரு வேதனை தோன்றியது அந்தப் படத்திலே லேசாக நெற்றியிலிருக்கும் திலகம் கலைந்திருந்தது. படம் எடுத்து வந்ததும் 'இதைக் கவனித்துச் சொல்லியிருக்கக் கூடாதா!' என்று அவள் கோபித்துக்கொண்டது அவனுக்குத்தான் தெரியும். அந்தக் கோபம்தான் அவனுக்கு எவ்வளவு குதுகுதுப்பாய் இருந்தது. அதற்காக மன்னிப்புக் கேட்பதில் அவனுக்கு எவ்வளவு மகிழ்ச்சியிருந்தது!

'நல்ல வேளை, நீங்களும் நிற்காமல் போனீர்களே குங்குமத்தைத் தீற்றிக்கொண்டு' என்று சொல்லிவிட்டுச் சிரித்ததில் முடிந்தது அவள் கோபம்—

அது ஒருகாலம்! விசுவம் மடமட

வென்று எழுந்து அந்தப் போட்டோவைத் திருப்பி மாட்டிவிட்டு வந்து படுத்துக்கொண்டான். அதன் பிறகுதான் அவனுக்குத் தூக்கம்வந்தது. தூக்கத்தில் என்ன என்னவோ தொடர்பில்லாத கனவுகள் காலையில் தூங்கி விழித்ததும் இரவு திருப்பி மாட்டியிருந்த படம் அவனைப் பார்த்துப் புன்னகை செய்வதுபோலச் சரியாக மாட்டியிருந்தது. ‘வேறு யாராவது இதைத் திருப்பி மாட்டி யிருப்பார்களோ’ என்று நினைத்தான். அப்படிச் செய்ய அந்த வீட்டில் யாருக்கும் துணிவு கிடையாது என்பது அவனுக்குத் தெரியும். தூக்கக் கலக்கத்தில்தானே அதைச் செய்திருக்கலாம் என்று பிறகுதான் தோன்றியது.

மனத்தில் புதுத் தெம்புடன் எழுந்து அவன் சுறுசுறுப்பாக எல்லாக் காரியங்களையும் செய்தான். ஆபீசுக்குப்போகுமுன் மேஜைமேலிருந்த கட்டுக்களை அவன் எடுத்துப்போக வந்தான். மேஜை மேலே ஒரு கடிதம் கிடந்தது. அதை எப்படி அவ்வளவு அஜாக்கிரதையாக மேஜைமேலேயே வைத்துவிட்டான்! அந்தக் கையெழுத்தைக் கண்டதுமே திடீரென்று அவன் திகைத்துப்போனான் “எவ்வளவு பைத்தியக்காரத்தனம்!” என்று பல்லைக் கடித்துக்கொண்டான் உறைக்குள் இருந்த கடிதத்தைப் பிரித்துப் படித்தான். முதல் நாள் மாலை சுசீலா கிளம்பிப்போன பிறகு வந்திருந்த கடிதம் தான் அது:

> **“உங்களுக்காகச் சரியாக ஏழு மணிவரை காத்திருப்பேன்—பானுமதி”.**

விசுவம் அந்தக் கடிதத்தை உறையிலிட்டு சட்டைப் பைகருள் பத்திரப்படுத்திக்கொண்டு மாடி முகப்புக்குப் போய், “ஏய், தாஸ்! தாஸ்!” என்று கடுமையாகக் கூப்பிட்டான்.

தாஸ் வந்து நின்றதும், உன்னை விடியற்காலையிலேயே வரச் சொன்னேனே!” என்று சீறி விழுவதுபோலக் கேட்டான்.

“காலையிலேயே நான் வந்துவிட்டேனே.”

“பின் ஏன்——” அவன் வார்த்தைகளை முடிக்கவில்லை. தூங்கும்போது எழுப்ப சுசீலாவைத் தவிர வேறு யாரால் முடியும் என்ற நினைப்பு வந்துவிட்டது.

“சரி போ— ஷெட்டிலிருந்து வண்டியைக் கொண்டு விட்டுப் போ.”

மணி பத்தடிக்கும்போது அவன் சாப்பிட்டு முடித்தான். காரில் ஏறி உட்கார்ந்ததும், சுவாமியைக் கூப்பிட்டு அனுப்பி, “இன்றைக்கா ஊருக்குப் போகப் போகிறாய்?” என்று கேட்டான்.

“ஆமாம்”

“எவ்வளவு பணம் வேணும்? முப்பது போதுமா?” என்று கேட்டுக்கொண்டே ஐம்பது ரூபாயை எண்ணிக் கொடுத்தான். சுவாமி பணத்தை வாங்கிக்கொண்டதும் விசுவம் தானே வண்டியை ஓட்டிக்கொண்டு கிளம்பினான்.

4

‘விசுவம்’ என்பது காரியலாயத்திலும் அவனுக்குச் செல்லப்பெயராக விளங்கியது. அவன் சம்பந்தபட்ட வரையில் அந்தத் தொழிற்சாலைக்கு அந்தஊரில் அவன்தான் தலைவன். அவனைப்போலவே மற்றும் மூன்று பிரிவுகளில் மூன்று பேர் இருந்தாலும் தலைமைப் பதவி விசுவத்துக்குத்தான். அவனுக்கு அங்கே நல்ல பெயரும், செல்வாக்கும் இருந்தன. அவனிடத்திலே இரண்டுவிதக் குணங்கள் தென்படுவதை அவனே ஒரொரு சமயம் சிந்தித்துப் பார்த்திருக்கிறான். வீட்டில் சுசீலாவைத்தவிர மற்றவரிடம் எப்படிப் பராமுகமாய் இருந்தானோ அதற்கு நேர் எதிரிடையாய் ஆபீசில் நடந்துகொண்டான். ஒவ்வொருவரையும் கூப்பிட்டு அவர்களைப் பவ்வியமாய் விசாரித்து அனுசரணையாக நடந்துகொண்டு, நல்ல பெயர் வாங்கிவந்தான். இவ்வளவு சீக்கிரம் உயர்ந்த பதவி அவனுககுக் கிடைத்ததற்கே இத்தகைய உழைப்பினால் அவன் காண்பித்த அபிவிருத்திதான் காரணமாகும். கீழ்த்தர சிப்பந்திகள் முதல் தலைமைக் குமாஸ்தா வரையில் ஒவ்வொரு காரியத்தையும் கலந்துகொண்டு அவன் வேலை செய்வதே பார்ப்பதற்கு அருமையாக இருக்கும். இத்தனைக்கும் அவர்களுக்கு அவனிடம் இருந்த மதிப்பும் மரியாதையும் நாளுக்குநாள் உயர்ந்துகொண்டே வந்தது. அவனாக அழைத்தாலொழிய யாருக்கும் அவனிடம் நெருங்கப் பயமாய்த்தான் இருந்தது. இதைக்கண்டு “சாதாரணமாக இருந்தால்கூட என்னிடம் யாரும் நெருங்குவதில்லையே. என் ராசி இது” என்று அவன் மனசுக்குள் கவலைப்பட்டுக்கொள்வான். அது ஒரு விதத்தில் அவனுக்குப் பெருமையாகவும் இருந்தது. பதவியும் அதிகாரப் பித்தும் எந்த மனிதனையும் மோகம் கொள்ளச்செய்யத் தவறுவதில்லை. விசுவம் அதற்கு ஒரு விலக்கல்ல. அவனுக்கு அந்தக் கெடுபிடி வேண்டித்தான் இருந்தது.

இவனுடைய வண்டி வருவது காரியாலய சிப்பந்திகளுக்கு மனப்பாடம். வண்டி வருகிற சப்தம் கேட்டால் போதும்; டைப் அடிக்கும் மெஷின்களின ஓசையும் வேலையின் பரபரப்பும் அதிவிரைவில் பரவும். பியூன்கள் இங்கு இருக்கும் பைல்களை எதற்காகவோ எங்கேயோ தூக்கிக்கொண்டு போய் வைத்துவிட்டு வருவார்கள். அல்லது எதையாவது அடுக்கி வைத்துக்கொண்டிருப்பார்கள். வேஷம் போடுவது விசுவத்துக்குப் பிடிக்காது என்று பெயர்தான். ஆனால் இதிலெல்லாம் எப்படித் தலையிட முடியும்? காரியாலயத்துக்கு அருகிலேயே தொழிற்சாலையும் இருந்தது. அங்கும் நிலைமை இதுதான்.

இன்று அவன் வருவதற்குச் சிறிது தாமதமாகிவிட்டது. எனவே வந்ததும் பரபரப்பாகத் தன் அறைக்குள் நுழைந்தான், பெல் அடித்து ஹெட் கிளார்க்கை அழைத்தான். பிறகு அக்கௌண்டென்டை அழைத்தான். காரியாலயமே அரை மணி நேரத்தில் பொறி பறப்பதுபோல் இருந்தது. ஓட்டமும் நடையுமாக குமாஸ்தாக்கள் போய்வந்துகொண்டிருந்தனர். இப்படி மாலை இடைவேளை வரையில் அவனுக்கும் ஒழியவில்லை; அவர்களுக்கும் ஒழிவு கிடைக்கவில்லை. தபால்கள் பிரித்துக் கொடுத்து சம்பந்தப்பட்டவர்களிடம் போய்ச் சேர்ந்து பூர்வாங்க வேலைகள் முடியும்வரையில் அவர்கள் திணறிப்போனார்கள். இடைவேளை சமயத்தில்தான் விசுவம், “அப்பாடா” என்று பெருமூச்சு விட்டான்.

வீட்டிலிருந்து டிபன் வருமா அல்லது கான்டீனிலிருந்து இங்கேயே வரவழைத்து விடலாமா என்று யோசித்துக்கொண்டிருந்தபோது தாஸ் வலைப்பையில்

பிளாஸ்கையும் டிபன் செட்டையும் எடுத்துக் கொண்டுஉள்ளே நுழைந்தான்.

"நடந்தா வந்தே?"

"ஆமாம்."

"உன்னை யார் நடந்து வரச் சொன்னது? நான் இங்கேயே ஒரு நாளைக்குச் சாப்பிட்டுக்கொள்ள மாட்டேனே? பைத்தியம்! இவ்வளவு தூரம் நடப்பானேன்?"

குளிர்ந்த ஜலமாக எடுத்து வைத்து மேஜை மேலிருந்ததஸதாவேஜிகளை ஒதுக்கி வைத்து விட்டு தாஸ் வெளியில் வந்தான்.

விசுவத்துக்கு டிபன்கூட இன்று ஒரு மாதிரியாய் இருந்தது வாய்க்குப்பிடிக்கவில்லை. யார் அன்புடன் தினம் எடுத்து வைத்து அனுப்புவாளோ, அவளுடைய கரஸ்பரிசம் இன்று அதன்மீது படவில்லை. எந்த இருதயம் அவன் நாவுக்கு ருசியாய் இருக்க வேண்டுமென்பதில் அக்கரைப்படுமோ,எதற்குஅவன் திருப்தியே மகிழ்ச்சியை ஏற்படுத்துமோ அந்த இருதயத்துடன் இவைகளை அனுப்புவார் யாருமில்லை. மிகவும் கஷ்டப்பட்டு அவன் டிபன் எடுத்துக்கொண்டிருக்கையில் தாஸ் மீண்டும் உள்ளே நுழைந்தான்.

"என்ன?"

"இதோ...இங்கே வெளியிலே வந்திருக்காங்க" என்று ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டு தாஸ விலகி நின்றான். விசுவும் அவசரமாக அதை வாங்கிக் கொண்டு இரண்டாக மடித்திருந்த கடிதத்தைப் பிரித்தான்.

"உள்ளே வரலாமா?"

அதன் அடியில் கையெழுத்திடவில்லை. ஆனால் அந்தக் கையெழுத்து யாருடையதென்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். இதைப் பார்த்ததும் அவன் திடுக்கிட்டானா, திகைத்தானா என்பது அவனுக்கே தெரியவில்லை. 'பானுமதி!' என்று அவன் உள்ளம் கூவியது. 'பானுமதியா?' என்று கேட்டு எதிரொலித்தது உள்ளத்தின் மறுகோடியில்—

"சரி, வரச் சொல்!"

சொர்ணப் பதுமையில் தந்தம் வைத்து இழைத்ததுபோல நான்கு மெல்லிய விரல்கள் கதவைத் திறந்து கொண்டு வந்தன.

"வரலாமா?" என்று தேநிலவின் இனிமையெல்லாம் பொழியும் குரலில் பூர்ண சந்திரன் உதயமாவது போல ஒரு முகம் தெரிந்தது.

"வரச் சொன்னேனே!"

கண்ணெல்லாம் சிரிப்புக் கொழிக்க பல்லெல்லாம் பளிச்சென்று பளபளக்க அந்த இளமங்கை உள்ளே வந்து அவன் எதிரே நின்றாள்.

"பானு!" என்று வாயை விட்டு அழைத்தான் விசுவம். எதிரே இருந்த நாற்காலியைச் சுட்டிக் காண்பித்து, "நிற்கிறாயே, உட்காரேன்" என்று கேட்டுக் கொண்டான்.

பானுவின் சிரித்த முகம் கமலமலர் குவிந்து கொள்வதைப்போல் குவிந்து கொண்டது. எதிரே கிடந்த நாற்காலியில் உட்காராமல் மேஜைமீது சாய்ந்தபடி நின்றாள்.

"என்ன பானு!"

"நேற்று ஒரு கடிதம் அனுப்பியிருந்தேனே அதைத் திருப்பிக் கொடுங்கள்" என்றாள் பானு அவன் முகத்தைப் பாராமல்.

விசுவத்திடமிருந்து பதிலே வரவில்லை. அதற்குப் பதில் கையில் வைத்திருந்த அல்வாத் துண்டின் ஒரு பகுதி அவள் வாயைநோக்கி மெதுவாக வந்தது. பேச வாய்திறந்தால் போதும், உள்ளே அல்வாத் துண்டு விழுந்துவிடும்.

அவள் அதற்காக, "—ம்—" என்று கடிதத்தைக் கொடுத்துவிடும்படி கையால் சைகை காட்டினாள்.

அல்வாத் துண்டு இலக்குத் தவருமல் நின்று கொண்டேயிருந்தது.

"எதற்கு சொல்லேன், எதற்கு அது என்று?" விசுவம் மெதுவாகவே கேட்டான். முதலில் அவனுக்கு அவள் அங்கே வந்தது அவ்வளவு சரியாகப்படவில்லை. ஆனால் வந்தவளோ கடிதத்தைப்பற்றிப்பேச ஆரம்பித்ததில் வந்ததுகூடச் சரியாகப்போய்விட்டது. கடிதத்தைக் கேட்டது சரியாகப்படவில்லை. மனம் வருந்திப்போயத்தான் அல்வாத்துண்டை வைத்துக்கொண்டு இதைக் கேட்டான் அவன்.

"நேற்று அதை நான் அனுப்பவில்லை என்று எண்ணிக் கொள்ளுங்கள். இன்றைக்கு அதை..."

அவளை மேலே பேசவிடாமல் டபக்கென்று அவள் வாயில் அல்வாத்துண்டு விழுந்துவிட்டது.

"இதென்ன விளையாட்டு" என்று அவள் அதை கீழே துப்பப்போனுள்.

"உம்" என்று அதட்டினுன் விசுவம்.

"பின்னே என்ன, பேச விடாமல்!"

"தின்றுவிட்டுத்தான் பேசேன், பேச வேண்டியதை."

"நான் பேச வரவில்லை."

"ஓகோ, டிபன் சாப்பிட வந்தாயா?"

அவள் திமிறிக்கொண்டு போவதுபோல் எழுந்திருந்து நாற்காலியைத் தூக்கி மேஜைக்குப் பக்கவாட்டில் அவனுக்குப் பக்கத்தில் போட்டுக்கொண்டு அதில் தொப்பென்று உட்கார்ந்தாள்.

"இன்றைக்கு அதை—என்று சொல்லவந்தாயே, அது என்ன?"

"இன்றைக்கு அதை அனுப்புகிறேன். நாளைக்காவது அதற்கு மதிப்புக் கிடைக்காதா என்று பார்க்கலாமே!"

விசுவம் இந்தப் பேச்சைக்கேட்டு பெரிய ஹாஸ்யம் ஒன்றை ரஸிப்பதைப்போலச் சிரித்தான். கொஞ்சம் உரக்கவே சிரித்துவிட்டதாகத் தோன்றியதும் திடீரென்று சிரிப்பதை நிறுத்திக்கொண்டான்.

"அது அது...இந்த டிரைவர்..." என்று ஏதோ சொல்ல வாயெடுத்தான்.

"இங்கேமட்டும் எப்படி வந்தீர்கள்?" என்று உடனேயே அவள் கேட்டாள்.

விசுவம் திணறிப்போனுன் "பானு, இன்று என்னை மன்னித்துவிடு. அது எப்படியோ வரமுடியாமல் போய்விட்டது. நாளைக்குக் காலையில் நிச்சயம்" என்று கூறிக்கொண்டே பிளாஸ்கைத் தூக்கினுன்.

"ஏன் பாக்கியையும் சாப்பிடவில்லையா?"

"உனக்கு—?"

"சரியாய்ப் போச்சு! நான் உத்தியோகம் பார்த்துக் களைத்துப்போய்விட்டேனு என்ன?" விசுவம் தன்னையே ஒரு தடவை பார்த்துக்கொண்டான். நகத்தில் அழுக்குப் படாமல், வியர்வை அரும்பாமல், ஆடைகள் கசங்காமல் அவனுக்குமட்டும் அந்த வேலைப் பார்த்து எப்படிக் களைத்துப் போயிற்று?

பானு இதற்குள் காபியை எடுத்து ஊற்றி அவனிடம் நீட்டினுள். அவன் சிறிது யோசித்தான். கையால் வாங்குவோமா என்றுதான் யோசித்தானே, என்னமோ!

"அது சரி; உனக்கும் வைத்துக்கொள்" என்று சொல்லிவிட்டுக் காபியை வாங்கிக் குடித்தான். இருவருக்குமே மேலே என்ன பேசுவதென்று தெரியவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு சிறிது நேரம் உட்கார்ந்திருந்தனர்.

மணி சரியாக இரண்டு அடித்தது.

"சரி; அப்புறம் என்ன? வேறு விசேஷம் ஏதுவுமில்லையே?" என்று புன்னகையுடன் கேட்டான் விசுவம்.

"விசேஷமா? என் அப்ளிகேஷன் என்ன ஆயிற்று என்று தெரியவேண்டாமா?"

"ஓகோ" என்று அவனும் சிரித்தான். அவளும் சிரித்தாள்.

"சரி; இரு. இந்தா இதை கையில் எடுத்துக்கொண்டு போ" என்று நீளமாக ஒரு பேப்பரை எடுத்துக்கொடுத்தான்.

"இது எதற்கு?" என்று அவள் பிரித்துப் பார்த்தாள். வெறும் பேப்பர் அது!

"கொண்டு போயேன். வெறும் கையுடன் போவானேன்?" என்ருன் அவன்.

(தொடரும்)

எனெஸ்கே பிலிம்ஸ் உமா பிக்சர்ஸ் தயாரிப்பு

நல்ல தம்பி

2 வது வாரம்

வேலூர்	...	தாஜ் டாக்கீஸ்
காஞ்சீவரம்	...	கண்ணன் டாக்கீஸ்
புதுச்சேரி	...	ரத்னு டாக்கீஸ்
சேலம்	...	அம்பிகா டாக்கீஸ்
புதுக்கோட்டை	...	வெஸ்ட் & ராஜா டாக்கீஸ்
காரைக்குடி	...	ஸ்ரீராம விலாஸ்
கோயமுத்தூர்	...	ஷண்முகா டாக்கீஸ்
விழுப்புரம்	...	சீதாராம் டாக்கீஸ்
தஞ்சாவூர்	...	டவர் டாக்கீஸ்
திருநெல்வேலி	...	பாலஸ் டி வேல்ஸ்
தூத்துக்குடி	...	ஜோஸப் டாக்கீஸ்

— விரைவில் வெளிவருகிறது —

திருச்சி	...	கெயிட்டி டாக்கீஸ்
கும்பகோணம்	...	விஜயலட்சுமி டாக்கீஸ்
கரூர்	...	அம்பிகை டாக்கீஸ்
துறையூர்	...	என்னெஸ்கே மூவிலண்ட்
மணப்பாறை	...	இந்திரா டாக்கீஸ்
திருவாரூர்	...	பேபி டாக்கீஸ்
மன்னார்குடி	...	கல்கி டாக்கீஸ்
நாகப்பட்டணம்	...	பேபி டாக்கீஸ்,
காரைக்கால்	...	நேஷனல் டாக்கீஸ்

மதுரை, விருதுநகர், திண்டுக்கல், ராஜபாளையம், சிதம்பரம், கடலூர், சித்தூர் இன்னும் இதர இடங்களிலும்

டைரக்ஷன்: கிருஷ்ணன் - பஞ்சு.

ஸ்டுடியோ: நியூடோன்

மதராஸ் ஸிடி, ஆந்திரா, வட இந்தியா & பர்மா:
எனெஸ்கே பிலிம்ஸ்,
மதராஸ் 17.

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி:
ஜி. பி. பிலிம்ஸ், பொரையார்

தஞ்சாவூர், திருச்சி:
கிரேட் இந்தியா பிலிம்ஸ், ஸ்ரீரங்கம்.

கோயமுத்தூர், நீலகிரி:
ரேவதி பிலிம்ஸ் லிமிடெட், பொள்ளாச்சி.

வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, சித்தூர், சேலம்:
வி. எஸ். நாயர், 22, பெங்களூர் ரோட், வேலூர்.

மைசூர் சமஸ்தானம்:
லட்சுமி பிலிம் கம்பெனி, பெங்களூர் ஸிடி.

Estd: 1920

சேலம் மூன்று தாமரை

பீடிகளை உபயோகித்து சந்தோஷமடையுங்கள்

S.A.H

Rgd. No. 2221.

Prop: S. அஹமத் உசேன்,
கோட்டை, சேலம். S.I.R.

"விஜய ரக்ஷணி"

(மூலகா யந்திர தாயத்து)

இந்த் கவசத்தை அணிவதால் கிரஹ சாராதி தோஷம் நீங்கும். ஆரோக்யம், குடும்ப க்ஷேமம், கலியாணம், வியாபார லாபம், பகை சமாதானம். உத்யோக உயர்வு, அதிகாரி விஸ்வாஸம், வியாஜ்ய வெற்றி, பண நிலைமையில் சௌகரியம், மற்றும் ஸகல வழியிலும் மேன்மையுண்டாகும். மாணவர்களுக்குப் பரீக்ஷை பாஸாகும். குழந்தைகளுக்கு பாலகிரஹ தோஷம் நீங்கி, ஆயுராரோக்யமுண்டாகும். ஜனன விவரம் அல்லது பெயர், சுமார் வயது, விலாஸம் குறிப்பிட்டு எழுதினல் கவசம் தயார் செய்தனுப்பப்படும்.

விஜய ரக்ஷணி கவசம் 1-க்கு ரூ. 7—8—0
விஜய ரக்ஷணி பிரத்யேக ரக்ஷை 1-க்கு ரூ. 72-8-0
தபால் செலவு தனி.

ஆரூடம் - ஜாதக பலன்

பண நிலைமை, தொழில் மாறுதல், லாப நஷ்டம், காதல், கலியாணம், குடும்பம், ஆரோக்யம், படிப்பு அதிருஷ்ட நாள், எண், நிறம், மற்றும் முக்யவிஷயங்களும் எழுதியனுப்பப்படும். ஜனன கால விவரம் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் தேவை. ஒன்று முதல் 5 எதிர்கால கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூ. 6. குழந்தைக்கு ஜாதகம் கணித்து ஆயுள், படிப்பு, முக்ய யோகாம்சம் சுருக்கமாக எழுத ரூ. 5. நடக்கும் ஒரு தசைக்கு புக்திவாரி பலன் ரூ. 10. வி. பி. செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
ஹனுமதுபாளி, திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

கர்பரக்ஷா மாத்திரை

பெண்கள் கர்ப காலங்களில் இதை சாப்பிட்டுவந்தால் எவ்வித கோளாறுமின்றி சுகப்பிரசவமாகும். கர்பச் சிதைவைத்தடுக்கும். நூறு மாத்திரை ரூ. **6—4—0.** ஐம்பது மாத்திரை ரூ. **3—8—0.**

★

தசமூலாரிஷ்டம்

பிரசவமான பிறகு உடம்பைத் தேற்றிக்கொள்ள இதுபோல் கைகண்ட ஔஷதம் வேறு கிடையாது. ஹிருதய பலவீனத்திற்கும், நரம்புத் தளர்ச்சிக்கும் ஆண்களும் உட்கொண்டால் பரிபூர்ண குணம் கிடைக்கும். 24 அவுன்ஸ் புட்டி ரூ. **6—0—0.**

விவரங்களுக்கு:—

ஆரிய வைத்தியன் பி. ஜி. வாரியரின்

ஆரிய வைத்தியாசிரமம், குமரன் வீதி, **திருப்பூர்.**

பிராஞ்சு : பல்லடம்.



சர்க்காரும் சினிமாவும்

[சாண்டில்யன்]

பட்டணத்து ஜட்கா வண்டிக்காரனைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா? தெரியாவிட்டால் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படித் தெரிந்துகொள்ளாவிட்டால் சர்க்காருக்கும் சினிமாவுக்கும் உள்ள சம்பந்தத்தைப்பற்றி நீங்கள் தெரிந்துகொள்ளவே முடியாது.

நல்ல கொழுத்த குதிரையை பட்டணத்துக்கு ஜட்கா வண்டிக்காரனிடம் கொடுங்கள். அதற்கு சேணம் போட்டு அடக்கி ஓட்டி சம்பாதிப்பதில் அவன் நிபுணன். ஆனால் வருகிற வருமானத்தில் குதிரையின் சம்ரட்சணத்துக்கும் ஒரு பங்கை செலவிட வேண்டும். அதைத் தட்டிக் கொடுத்து அன்பாக வைத்துக்கொள்ள வேண்டும். என்ற சிந்தை மாத்திரம் இருப்பதில்லை. கடிவாளம் அவன் கையிலிருப்பதால் தப்பி ஓடமுடியாத குதிரை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக இளைத்து. அதன் ஓட்டம் கெடுபிடி எல்லாம் தளர்ந்து, சாகவும் சாகாமல், இருந்தும் பிரயோசனமில்லாமல் ஊர்ந்து ஊர்ந்து ஜீவிக்கிறது. அந்த நிலைக்கு வந்த பிறகு அதற்குக் கடிவாளம்கூட தேவையில்லை. வண்டிக்காரன் கடிவாளத்தைத் தளரவிட்டு 'க்கெய், க்கெய்' என்றாலும குதிரை நகர்கிறது. ஆனால் அதை சட்டை பண்ணித் திரும்பிப் பார்க்கிறவர்கள் கிடையாது.

★

நமது சர்க்கார் கையில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் சினிமாத் தொழிலுக்கும் இந்தக் கதி ஏற்பட அதிகநாள் ஆகாது. ஏதோ சினிமாக் கம்பெனிகள் என்றால் அப்படியே தங்கச் சுரங்கம் ஆகவே அந்தத் தொழிலை விடக்கூடாது என்று 100-க்கு 55 வரி வாங்கும் சர்க்கார் அந்தத்தொழில் வளர்ச்சியில் எந்த விதமான சிரத்தையும் காட்டவில்லை. தொழிலில் என்ன வருமானம் கிடைக்கிறது? இந்தத் தொழில் ஒன்றையே நம்பிக் கிடக்கும் கம்பெனிகள் எத்தனை? இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் எத்தனைபேர்? அவர்களுக்கு மாதா மாதம் சம்பளம் கிடைக்கிறதா? கிடைத்தால் எவ்வளவு கிடைக்கிறது? முதலாளி போடும் பணத்தில் எவ்வளவு படத்துக்குச் செலவாகிறது? எவ்வளவு விரயமாகிறது? விரயமானால் எந்த வழிகளில் விரயமாகிறது? என்ற விவரங்களை சர்க்கார் கவனித்தார்களா? கவனித்தால் நிலைமையை சீர்திருத்த என்ன செய்திருக்கிறார்கள்? பணம் வைத்துக் கொண்டிருக்கும் பேர்வழிகளெல்லாம் படம் பிடிப்பது சாத்தியமா? அப்படி விவரம் தெரியாமல் இத்தொழிலுக்குள் புகுந்து வீண் போட்டி போட்டு கம்பெனிகள் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, கால் படம், அரை படம், என்று படத்தைப்பிடித்து இருக்கிற வெத்து பிலிமையும் வீணாக்கி 'சினிமாக் கம்பெனியை நம்பாதே' என்று ஜனங்களுக்கு வெறுப்பை உண்டாக்கும் பேர்வழிகளைக் கட்டுப்படுத்தி, அவர்களிடமிருந்து உண்மையாகப் படம் பிடிக்கும் கம்பெனிகளைக் காப்பாற்ற சர்க்கார் என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்?

சினிமாத் தொழில் செலுத்தும் வரிப் பணத்திலிருந்து ஒரு பகுதியை அத்தொழிலின் அபிவிருத்திக்கு அவர்கள் ஏன் செலவழிக்கவில்லை? ஆட்டைத் தூக்கி மாட்டில் போடு என்று எந்த நஷ்டத்தையோ ஈடுசெய்ய சினிமாவின் தலையில் கை வைப்பது நியாயமா? இப்படிச்செய்தால் பட்டணத்து ஜட்கா வண்டிக்காரன் கையிலகப்பட்ட குதிரையாக இந்தத் தொழில் ஆகுமா ஆகாதா?

தொழிலபிவிருத்திக்காக சென்னை சர்க்கார் ஏதும் செய்யாவிட்டாலும் சினிமாத் தொழிலின்

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

மீரா, மின்மினி, கங்கணம் முதலிய படங்களில் நடித்துள்ள நக்ஷத்திரம் மேனகா.

சர்க்காரும் சினிமாவும்

[முன் பக்கத் தொடர்ச்சி]

கடிவாளத்தை இறுககிப் பிடித்து சவாரி செய்யமட்டும் முயன்று வருகிருர்கள். படங்களைத் தணிக்கை செய்ய அவர்கள் தயாரித்திருக்கும் சட்ட திட்டங்கள் சினிமாத் தொழிலின் மென்னியை இறுக்கிப் பிடித்து விடும் என்பதில் சந்தேகமில்லை. ஏற்கனவே இந்த சென்ஸார் போர்டு செய்யும் முடிவுகளைப்பற்றி விஷயந் தெரிந்தவர்கள் நகைத்து வருகிருர்கள். அப்போர்ப்பட்டவர்கள் கையில் இந்தப் புது சட்ட திட்டங்களையும் கொடுத்து பூமாலையும் கொடுத்தால் மாலையின் கதி தெரிந்த விஷயந்தானே.

★

இந்த நாட்டில், அதுவும் முக்கியமாகத் தமிழ் நாட்டில் எதைச் செய்யலாம் என்பதைவிட எதைச் செய்யககூடாது என்பதைப்பற்றி திட்டங்கள் அதிகம் உதாரணமாக ஒரு கதாசிரியன் இருக்கிருன். அவன் சமூகத்தைப்பற்றிக் கதை எழுக முடியவே முடியாது ஏனென்ருல் நாவிதரை நாவிதர் என்று சொன்னுல் சிகை அலங்காரக் கழகத்துக்குக் கோபம் வரும். துணி வெளிப்பவனை வண்ணுன் என்று சொன்னுல் சலவைத் தொழிலாள சங்கம் சண்டைக்கு வந்துவிடும். இவர்களை சிகை அலங்காரி, சலவைத் தொழிலாளி என்று எழுதினுலோ பெருவாரியான ஜனங்களுக்குப் புரியாது. ஆகவே எழுத்தாளன் புரியாமல் எழுதுகிருன் என்றபெயரைஎடுக்கிருன். பிராம்மணனைப்பற்றி மாத்திரம் அந்தக் கட்டுப்பாடு கிடையாது. ஆனுல் அவன் தேவடியாள் வீடு போவதும், குடுமியில் பூகட்டிக்கொள்வதும் காட்டிக் காட்டி ஜனங்களுக்கு அலுத்துவிட்டது.

இப்படி சமூகத்தைச் சித்தரிப்பதில் ஏற்பட்டுள்ள செயற்கை கஷ்டங்களால் தமிழ்நாட்டில் இலக்கியம் செழிக்கமுடியவில்லை. இதே கட்டுப்பாடுகளை சர்க்கார் ஸென்ஸார் விதிகளிலும் புகுத்தியிருப்பதில் சினிமாத் தொழிலும் குட்டிச் சுவராகத்தான் ஆகும். சமூகப் படத்தில் இந்தக் கஷ்டங்கள் இருக்கின்றனவேயென்றுதான் படமுதலாளிகள் கடவுள்களிடம் சரணுகதி யடைந்தார்கள். கடவுள் காலிலா விழுகிருய், இங்கே வா என்று படுத்துக் கிடப்பவன் காலைப்பிடித்து சர்க்கார் கர கரவென்று இழுக்கிருர்கள். கடவுளிடம்கூட சினிமாப்படம் பிடிப்பவன் இனிமேல் தன்னிஷ்டப்படி நடந்துகொள்ள முடியாது. கடவுள் மனிதனை ஆட்டிவைப்பது போக, கடவுள் சினிமாக்காரன் இரண்டு பேரையும் என்னிஷ்டப்படிதான் ஆட்டுவேன் என்று சர்க்கார் பிடிவாதம் செய்கிருர்கள்.

★

இந்தத் தொல்லையெல்லாம் வேண்டாம் என்று பட முதலாளி 'ரொமான்'ஸில் (காதல் கட்டத்தில்) நுழைந்தாலோ 'அடே பெண்களை அப்படிநடத்தாதே அப்பா, நான் சொல்லித்தருகிறேன்' என்று சர்க்கார் அங்கும் வந்து கையைப் பிடித்து இழுக்கிருர்கள்.

இப்படி எல்லா விஷயத்திலும் பூர்ண ஞானமுள்ள சர்க்காரிடம் இப்பொழுது சினிமாத் தொழில் சிக்கிக்கொண்டிருக்கிறது. பட்டணத்து ஜட்காவண்டிக்காரனிடம் சிக்கிய குதிரையின்கதிதான் இதற்கும் ஆகுமா என்பது சர்வ வல்லமையுள்ள கடவுள் ஒருவருக்குத் தெரியும். அட இதற்குள் மறந்துவிட்டேனே கடவுளையுந்தான் அவர்கள் பிடித்துக்கொண்டு விட்டார்களே. எண்டௌமெண்ட் போர்டு மசோதாவை இதற்குள் மறக்கலாமா!

'ஸ்வப்ன சுந்தரி'

வாஹினி ஸ்டூடியோவில் பிடிக்கப்படும் ஸ்வப்பன சுந்தரி என்ற கதையை டைரக்டர் பலராமய்யா தயாரிக்கிருர் இதில் சில பாட்டுகள் மட்டும் ரிகார்டு செய்யப்பட்டிருக்கின்றன.

ஸ்டுடியோக்களில் என்ன நடக்கிறது?

வாஹினி ஸ்டுடியோ ஏற்பட்டதற்கும் ஜெமினி ஸ்டுடியோ ஏற்பட்டதற்கும் ஒரு பெருத்த வித்தியாசமுண்டு. திடீரென்று பிலிம் தொழிலில் இறங்க வேண்டுமென்று ஸ்ரீ வாசன் நினைத்தார். அவ்வளவுதான் ......

ஏன் இப்படி திடீரென்று வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்திவிட்டேன் என்று நீங்கள் கேட்கலாம். வாஸன் நினைத்தார் என்றால் செய்துவிட்டார் என்றுதான் அர்த்தம் அவர் நினைப்பதற்கும் செய்வதற்கும் இடையில் அவகாசத்தை வளர்விடும் வழக்கம் கிடையாது. நினைத்த காரியம் நடக்கவேண்டும்; உடனே நடந்தாகவேண்டும். செலவைப் பற்றியோ பலனைப் பற்றியோ கவலை இல்லை. ஆகையால் ஆயிரம் விளக்கு மாதாகோவில் எதிரில் கடனில் மூழ்கி தத்தளித்துக் கொண்டிருந்த ஒரு சிறு ஸ்டுடியோ திடீரென்று பெரிதாக முளைத்துக் காட்சியளித்தது. பட்டணத்துக்கு யாராவது ஒரு அலாவுதீன் வந்து விளக்கைத் தேய்த்து வரம் கேட்டானோ என்ற ஸ்திதியில் ஜெமினி திடும்பிரவேசமாகக் கிளம்பிவிட்டது.

வாஹினி அப்படிக் கிளம்பவில்லை. வாஹினியைத் தலைமை தாங்கி நடத்தும் ஸ்ரீ பி என் ரெட்டி மிகவும் கணக்கு பார்க்கிற பேர்வழி. ரொம்ப நாள்வரை "நாம் கம்பெனியைச்சரியாய் நடத்தினால் போதாதா? ஸ்டுடியோவை வேறு கட்டிக்கொண்டு மாரடிக்க வேண்டுமா?" என்று சொல்லி வந்தார். ஆனால் ஸ்வர்க்க ஸீமாவைப் பிடித்தபொழுது கிடைத்த சௌகரியங்களையும், ஆன செலவையும் பார்த்தபொழுது, "அட ராமா! இந்தச் செலவுக்கு ரெண்டு ஸ்டுடியோ கட்டலாமே" என்று சிறுது மாறினார் சொந்த ஸ்டுடியோ இருந்தால் நம் இஷ்டப்படி படம் பிடிக்கலாம், தவிர சொல்ப செலவிலும் பிடிக்கலாம் என்ற உத்தேசத்துடன் ஸ்டுடியோ கட்டும் வேலையில் முனைந்தார். இப்பொழுது வித்தியாசம் தெரிகிறதா? ஜெமினி ஸ்டுடியோவாகக் கிளம்பி படம் பிடிக்கும் வேலையையும் மேற்கொண்டது. வாஹினியோ படம் பிடிக்கும் தொழிலை முதன்மையாகக் கொண்டதால் ஸ்டுடியோவாக மாறவேண்டிய அவசியம் நேரிட்டுவிட்டது.

இப்படி அவசியத்தை முன்னிட்டு ஆரம்பித்த ஸ்டுடியோவாகையால் வாஹினி ஸ்டுடியோ ஜெமினியைப் போல் திடுதிடுவென்று வளரவில்லை. நிர்வாக வேலையில் கருத்துள்ள ஸ்ரீ பி.என். ரெட்டி முதன் முதலில் ஸ்டுடி

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

'ஹிந்தி மீரா'வாக வட இந்தியாவில் பிரக்கியாதிபெற்ற ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி. இவருடைய அடுத்த படம் என்ன என்பது. மர்மமாக இருக்கிறது



ஒலிவியா டி ஹாவிலண்ட்: ஸ்நேக் பிட் (பாம்புக்குழி) என்ற படத்தில் இந்த பிரமை தட்டும் விழிகளுடன் நடித்ததற்காக அமெரிக்க பட விமர்சன போர்டார் இவருக்கு 1948 வது வருஷத்திய நக்ஷத்திர பதவியை அளித்திருக்கிறார்கள்.

ஸ்டுடியோக்களில் என்ன நடக்கிறது?

[முன்பக்கத் தொடர்ச்சி]

யோவில் படப்பிடிப்புக் கூடங்களை அமைப்பதைவிட்டு ஆபீஸை ஒழுங்காகக் கட்டினார் பிறகு படம் பிடிக்கும் கூடம் ஒன்றை மாத்திரம் கட்டினார். தமது படங்களை மட்டும் பிடிக்கக்கட்டிய அந்த ஒரு கூடத்தில் மற்றும் சிலருக்கும் இடங்கொடுத்தால் என்ன முழுகிப்போய்விடும்? வருகிறமட்டும் வரட்டுமே யென்று வாடகைக்கும்விட ஆரம்பித்தார்.

ஆகையால்தான் இன்றுவாஹினியில் மூன்று படங்கள் உற்பத்தி யாவதையும் அவற்றில் இரண்டு வெளிக்கம்பெனிக்காரர்களின் படங்களாக இருப்பதையும் காண்கிறோம்.

குண சுந்தரி கதை

வாஹினிக் கம்பெனியார் எடுக்கும் சொந்தப் படம் 'குண சுந்தரி கதை தெலுங்கில் சொல்லவேண்டுமானால், இதை குண சுந்தரி கதா என்று சொல்லவேண்டும் இது வாஹினிக் கம்பெனியின் படம் என்று சொல்வதையும் காரணமாகத்தான் சொன்னேன். வாஹினியின் வளர்ப்பில் வாஹினி புரொடக்ஷன்ஸ் என்றும் வாஹினி ஸ்டுடியோ என்றும் இரண்டு கம்பெனிகள் பிறந்ததும் ஒரு கதை பையன்கள் புத்தகத்தில் மயில் குட்டி போடும்வித்தையைப்பற்றித் தெரிந்தவர்கள் வாஹினி பிரிந்த வித்தையையும் தெரிந்து கொள்ளலாம். மயில் குட்டி போடுவது என்பது எப்படி ஒரு அனுவசிய பிரமையோ அப்படிப்பட்ட ஒரு பிரமைதான் வாஹினி பிரிந்த கதையும். ஒரு மயிலை பையன்களாகப் பிரித்து வைத்துக் கொள்வதுபோல் ஸ்ரீ பி என் ரெட்டி தலைமையில் ஏற்பட்ட டைரக்டர்கள் குழாமும் தாங்களாக இன்னொரு ஸ்தாபனத்தைப் பிறப்பித்துக் கொண்டார்கள்.

வாஹினி புரொடக்ஷன்ஸ் சார்பில் தயாராகும இந்த குண சுந்தரி

ஜான் ஹஸ்டன் — ட்ரெஷர் ஆப் ஸீரா' (ஸீராவின் தனம்) என்ற திரைக் கதையை எழுதியதற்காக 1948 வருஷத்தில் சிறந்த கதாசிரியர் பதவி இவருக்கு அமெரிக்க போர்டால் அளிக்கப்பட்டிருக்கிறது.

கதை ஒரு ராஜாராணிக் கதை. இப்பொழுதெல்லாம் 'போக்லோர் என்று சொல்கிறார்களே அப்படி ஒரு அத்தைப் பாட்டி கதை. இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டுமானால் ஆந்திர நாட்டில் ஷேக்ஸ்பியரின 'இங் லியர்' கதையைத் தழுவி குண சுந்தரி கதா என்று ஒரு கதை உலாவுகிறது. சாக்ஷாத் அந்தக் கதைதான் இந்தக்குண சுந்தரி கதையும்.

இந்தப்படத்தை போதனா, வேமனா, படங்களை டைரக்ட் செய்த ஸ்ரீ கே. வி. ரெட்டி டைரக்ட்செய்கிறார். ஜெமினி பாலநாகம்மாவில் மாயால மராட்டியாகத் தோன்றிய டாக்டர் ஜி. வி. சுப்பராவ், காமடியன் சிவராவ், சாந்தகுமாரி. மாலதி முதலியோர் இதில் நடிக்கிறார்கள்

'லாவண்யா'

கீழ்த்திசைக் கலா லாவண்யம் முழுமையையும் இந்தப்படத்தில் பார்க்கலாம் என்று தோன்றுகிறது. ஈஸ்டர்ன் ஆர்ட் புரொடக்ஷன்ஸ் (கீழ்த்திசைக்கலா உற்பத்தி நிலயம்) கம்பெனியார் இந்தப் படத்தை எடுக்கிறார்கள். இதுவும் ஒரு கிராமியக் கதைதான். ஆள் மாயமாய் மறைவது முதலிய டிரிக்வேலைகளுக்கு இப்படத்தில் இடமிருக்கின்றன. முதலில் மிஸ் என். ஏ. சுந்தரத்தைக் கதாநாயகியாகக் கொண்டு ஆரம்பித்த இப்படப்பிடிப்பில் பேபி கமலாவின் நாட்டியக் காட்சிகள் மட்டுமே பிடிக்கப்பட்டிருக்கின்றன டி. கே. பட்டம்மாள், பெரியநாயகி, இவர்களின் பாட்டுகளை ரிகார்டு செய்திருக்கிறார்கள் மிஸ் என். ஏ, சுந்தரம் இதில் தோன்றுவது சந்தேகமானபடியால் கதாநாயகி யார் என்ற விஷயம் இன்னும் மர்மமாகவே இருக்கின்றது. கதாநாயகன் கதாநாயகியைத் தேட கதையில் பட்ட கஷ்டத்தை படப்பிடிப்பில் படமாட்டான் என்று நம்புவோம்.

ஸர் லாரன்ஸ் ஆலிவர்: 1948-வது வருஷத்தில் 'ஹாம்லட்' என்ற ஷேக்ஸ்பியர் நாடகத்தை சிறப்பாகப் படம் பிடித்ததுபற்றி சிறந்த படப்பிடிப்பாளர் பட்டம் இவருக்குக் கிடைத்திருக்கிறது.

கிறுக்கு...



விந்தியா

கடிதத்தில் வந்திருக்கும் செய்தியைச் சொன்னார் ராமசாமி.

"என்ன? மறுபடியுமா?" என்று பதறிப்போய்க் கேட்டாள் ஜானகி.

"ஆமாம்! அதுகளுக்கு ஏது புத்தி! என்னமோ படிக்கிறதுகளாம் பெரியபெரிய படிப்பு! உதவாக்கரைப் பயல்கள்! நானும் மூளைகெட்டு அவனுக்கு சுளை சுளையாகப் பணம் அனுப்பிப் படிக்க வைக்கிறேனே! என் புத்தியைத்தான்—"

"எங்கே—கடுதாசியைத் தாங்கோ—நான் பார்க்கிறேன்! தமிழில் எழுதியிருக்கானா—இங்கிலீஷில்தானா—" கடிதத்துக்காக கை நீட்டினாள் ஜானகி

"இங்கிலீஷ்தான்! எழுதியிருக்கிறதும் உன் பிள்ளையில்லை! உன் அண்ணா பிள்ளை கணி! மானம் போறது! எல்லோருக்கும் தெரிஞ்சு போச்சு!..." என்று கூறிக்கொண்டே, கையிலிருந்த கடிதத்தை ஜானகி கையில் விழாதவாறு விசிறிவிட்டு. பிள்ளைமேல் ஏற்பட்ட கோபத்தைமனைவியிடம் வீசிவிட்டு நகர்ந்தார் ராமசாமி.

கடிதத்தை தரை மீதிருந்து எடுத்துக்கொண்டு, கணவரைப் பின் தொடர்ந்தாள் ஜானகி.

"கொஞ்சம் விவரமாச் சொல்லுங்கோ! எனக்குப் புரியுமா இந்தக்கடிதம்?" என்று வினவினாள் சாந்தமாக.

"என்ன விவரம் சொல்லுகிறது? சேர்ந்திருக்கானாம் இவன் சத்தியாக்கிரகத்துலே! இப்போ அரெஸ்டு ஆகியிருக்கும்!... அதான் இவன் கிட்டயிருந்து காணோம் கடுதாசு! கஷ்டம், கஷ்டம்!' என்றார் அவர், தலையில் லேசாக நாலு தட்டு தட்டிக்கொண்டு.

"ஐயையோ... அப்படியா? அரெஸ்டு ஆகியிருப்பானா?" என்று அரற்றிக்கொண்டே அங்கிருந்த நீளப்பெஞ்சுமேல் அசந்து உட்கார்ந்துவிட்டாள் ஜானகி.

"பிள்ளைன்னு இவனைச் சொல்லிக்க அவமானமாயிருக்கேன்னு அழு!...பிள்ளைக்காக அழாதே! அது வேறே மானக்கேடு!" என்று சீறிவிட்டு விடுவிடென்று போய்விட்டார் ராமசாமி.

ஐந்து நிமிஷங்கள் பிரமை பிடித்தாற்போல் இருந்த ஜானகி, ஒருவாறு மனம் தெளிந்து எழுந்தாள்.

அடுப்படியை ஒரு ஐந்து நிமிஷங்கள் கவனித்தாள். குமுட்டியிலிருந்த—பத்மாகியிருந்த—உண்டியை கீழே இறக்கி வைத்துவிட்டு வெளியில் வந்த ஜானகி, கணவரின் மனதைப் பதம்படுத்தக் கிளம்பினாள்

"கொஞ்சம் கோபதாபமில்லாமேதான் சித்தே கவனியுங்களேன்! என்னயிருந்தாலும் விட்டுவிட முடியுமா பிள்ளையில்லைன்னு! ராஜுவுக்கேதான் எழுதிக்கேளுங்கோளேன்! 'சேர வேண்டாம!'னு சொல்லுங்களேன்!...அண்ணாவுக்கும் எழுதிக் கேளுங்கோ! கணி தன் அப்பாக்கும் எழுதியிருப்பான்...நமக்கு எழுதாத விவரத்தை தன் அப்பாககு எழுதினாலும் எழுதியிருப்பான்!...அரெஸ்டு ஆச்சு, இல்லைன்னு தெரிந்திருக்கலாம்!'

"அதெல்லாம் முடியாது!...உங்கள் அண்ணாவைப்போய் நான் வலுவிலே இந்த வெட்கக்கேட்டைப்பற்றிக் கேட்கமாட்டேன்!... இந்தக் கில்லாடிப் பிள்ளைக்கு இவ்வளவு பாசமென்ன! சை!'

"போகிறது! அண்ணாவுக்கு எழுதவேண்டாம்! ராஜுவுக்கு மட்டும் எழுதிடுங்கோ! கெஞ்சிக் கேட்டுக்கறேன்னு சொல்லுங்கோ"

"கெஞ்சிக் கேட்டுக்கறதென்ன இந்தப் போக்கிரியை? என்னாலே முடியாது இந்தக் கெஞ்சலும் கொஞ்சலும்!" என்று விறைத்தார் அவர்

"நான் கெஞ்சிக் கேட்டுக்கிறதாகச் சொல்லுங்கோன்னேன்! அம்மா கெஞ்சறான்னு எழுதுங்கோ..."

"அதுக்கு நீயே எழுதிக்கோ உன் பிள்ளைக்கு! அம்மா கெஞ்சறான்னு" நான் அவனுககுச் சொல்லிக் கெஞ்சறதென்ன? நான் 'அடரஸ்' தந்துடறேன்... உன் கிறுககெழுத்துலே நீயே சொல்லிக்கோ உன் கிறுக்குப் பிள்ளைக்கு! வெடகம், வெட்கம்! மானம் போகிறது எனக்கு! கணி என்ன எழுதியிருக்கான் தெரியுமோல்லியோ? ..." என்று கூறி நிறுத்தினார் ராமசாமி

"என்ன எழுதியிருக்கான்?" துடித்தாள் ஜானகி

"கொஞ்ச நாளாய் ராஜு தன்னுடைய சகபாடிகளோடயே, 'ஆர். எஸ். எஸ்' கூட்டத்தா

ரோடேயே திரியருன் .எங்கள் பக்கம்வருகிறது கூட இல்லை. சத்தியாக்கிரகத்துலே சேராமல் இருந்தாலும் இருப்பான் ... படிப்பு முடிகிற சமயம் கெடுத்துக் கொள்ள வேண்டாம்னு அறிவு இருக்கலாம் ஆனாலும் நிச்சயமில்லை கிறுக்குப் புத்தி திடீர்னு வந்தாலும் வந்தது தானே !''ன்னு எழுதியிருக்கான் கணி! உன் பிள்ளைக்குத்தான் தெரியவில்லை, 'ஆரேஸ்ஸெஸ்' கிறுக்குச் சங்கம்னு ! போன வருஷம் பட்ட கவலை போதாதுன்னு, இந்த வருஷம் இந்த தொல்லை! சனியன் எக்கேடு கெட்டுப் போகட்டும் !'' எனப் படபடத்தார் ராமசாமி.



"உம், முரட்டுப் பிடிவாதத்துக்கு அப்பாவைத்தான் கொண்டிருக்கான் பிள்ளை! வேறென்ன?'' என்று ஜானகிக்கும் கோபம்தான் வந்தது அப்போது, கணவர்மேல்!

"எனக்குக் காகிதமும் பென்சிலும் தந்துடுங்கோ !...அரெஸ்டு ஆகிறதுககு முந்தியே எழுதிப் போட்டுடறேன்... நான் சொன்னால் கேட்பான்...'' என்று சொன்னாள் கோபத்தைக் கொஞ்சமும் வெளிப்படுத்தாமல்.

"கேட்ப்பான் கேட்ப்பான் !... கேட்கட்டும்.. ஆனால் கடுதாசிக்கு இப்போ அவசரமில்லை! முன்னாடி சமைச்சுப்போட்டு என்னை ஆபீசுக்கு அனுப்பப்பார் ! அப்புறம் மத்தியானமெல்லாம் உட்கார்ந்து எழுது உன் பிரலாபத்தையெல்லாம் ! ஆறு மணிக்குத்தான் தபால் கட்டு எடுபடும!..... இப்போம்வபோய்ச் சேர்ந்துடாது உன் கடுதாசு !'' என்ருர் ராமசாமி...''இதோ வச்சுட்டேன் இங்கே காகிதமும் பென்சிலும் !'' என்று மேஜை மேல் அவற்றை வைத்துவிட்டு, துண்டைத் தோளில் வீசிப்போட்டுக்கொண்டு வெங்நீர் அறைக்குக் கிளம்பினார். அவளைப் பின் தொடர்ந்த ஜானகி மௌனியானாள்.

* * • *

அதே சமயத்தில் ஜானகியின் அண்ணன் சேஷாத்ரி ஒரு கிறுக்கு யோசனையில் மூழுகியெழுந்து கொண்டிருந்தார் தம் வீட்டில்!

"இதென்ன சீதா! கணி இப்படி எழுதியிருக்கானே! பாவம்,— ஜானகி இனிமேல் அழுத கண்ணும் சிந்திய மூககுமாய் அலட்டிக் கொண்டேயிருப்பாள் நித்தியம்!'' என்றார் அவர்.

விவரமறிந்த அவர் மனைவி சீதாவும் பரிதாபப்பட்டாள். 'அடப் பாவமே! ... என்ன கஷ்டமோ, என்ன வேதனையோ? நம்ப கணிக்குத் தெரிஞ்சது கூடவா ராஜுவுக்குத் தெரியாது? நம்ம கணி இன்னும் சின்னவன் கூட ...இவனுக்குத் தெரிஞ்சது கூடவா அவனுக்குத் தெரியாதுபோகணும்!'' என்று சொன்னாள் சீதா— அப்படிச் சொல்கையிலே அவள் பேச்சில் பிள்ளையைப்பற்றிய விம்மித உணர்ச்சியும் நெளிந்தோடியது! தன் நாத்தியின் பிள்ளையைவிட தன் பிள்ளை ஆழ்ந்த சிந்தனையும் பரந்த நோக்கும சிறிய அறிவும் உள்ளவன் என்று அல்லவா தெரிகிறது.........!

"உம். என்னவோ... படிக்கிற பசங்களுக்கு இதுமாதிரி அரசியல் விஷயங்களிலே இவ்வளவு தீவிரம் வேண்டாம்!...கணி ரொம்பக் கவலையா எழுதியிருக்கான்...இப்படியெல்லாம் சகபாடி கூட்டத்தோட திரியருனே, சத்தியாக்கிரஹத்துலே சேர்ந்தானால், இனிமேல் அவ்வளவுதான்! வாழ்க்கையே பாழாகிவிடும்! கடைசி வருஷப் படிப்பை இப்படிக் கெடுத்துககலாமான்னு நம்ம கணிகவு அங்கலாய்ப்பாயிருக்கு! ராமசாமிக்கும் எழுதியிருக்கானும் கணி! என்னையும் மருமானுக்குப புத்தி சொல்லி எழுதச் சொல்லியிருக்கான் நம்ம பிள்ளை !'' என்று கூறி ஒரு

சோகப்புன்னகை புரிந்தார் சேஷாத்ரி.

“உம், எழுதுங்கோ!—பாவம்—நம்ம பிள்ளை இப்படியெல்லாம் இருந்தால் நமக்கு எவ்வளவு வேதனையாயிருக்கும்! அப்படித்தானே இருக்கும அங்கே ஜானகிக்கும் அவருக்கும்!'' என்றாள் சீதா.

“என்னம்மா?'' என்று கேட்டுக்கொண்டே அங்கே வந்து நின்றாள் ஆவலாக, அவர்கள் புதல்வி உமா

“அத்தான் ராஜுவை அரெஸ்டு பண்ணிடுவாபோல் இருக்காம், அண்ணா எழுதியிருக்கான்!'' என்றாள் சீதா.

'அச்சச்சோ! எங்கே, கடுதாசியைக் காட்டு!'' என்று துடிப்பாய்க கேட்டாள் பதின்மூன்று வயது நிரமபாத அந்த இளம் பெண் வேடிக்கையாக இருந்தது அவள் பெற்றோர்க்கு.

“பாவம்பா,அத்தான்!''என்றாள் உமா, தந்தைக்கு நியாய உணர்ச்சி ஊட்டிவிடடாள்!

“பாவம், அத்தான் ஜெயிலுக்குப் போயிடுவான்!'' என்று சொல்லிவிட்டு முகத்தைத் தொங்கப் போடடுவிட்டாள் உமா

பெண்ணை வேடிக்கையாகப் பார்த்தாள் தாய்; “எல்லாம் ஒரு வாரம் பத்து நாள்ளே விட்டுடுவா!'' என்றாள்

“ஒரு வாரமா? அரெஸ்டு பண்ணி. லாரிகள்ளே எடுத்துண்டு போய் படடணத்து எல்லைக்கப்பாலே விட்டுட்டு வந்துடறாளாம்! மறுநாளே படடணத்துலே ஆஜராகிவிடலாம் பசங்கள்!'' என்று சிரித்தார் சேஷாத்திரி சீதாவும உமாவும் கூட சிரித்தார்கள்.

ஆனால் சிரிப்புடன் நிற்கவில்லை கடிதத்தின் பலன்.

“அத்தானை அரெஸ்டுபண்ணிடுவாளாண்டா!'' என்று பெண் உமா தம்பியிடம் கூறிக்கொண்டதை, தம் அறையில் அதே யோசனையுடன அமர்ந்திருந்த சேஷாத்ரி கவனித்தார்.

“உமா! இங்கே வா!'' என்று அழைத்தார் மகளை. வந்தாள் உமா.

'ஒரு காரியம்... ஒத்தாசை, பண்ணறயா? அத்தானை ஜெயிலுக்குப் போகாமல் தடுககலாம்!'' என்றார் அவர்.

உமாவின் உற்சாகத்தை அளவிட முடியுமா?

“இந்தா, உட்காரு நாற்காலியிலே! நான் சொல்கிறதை எழுது!'' என்றார் அவர், காகிதத்தாளையும் பேனாவையும் எடுத்துக்கொண்டே.

ஊர் பெயர், தேதி...குறிக்கச் சொன்னார். உமா எழுத வேண்டியது அத்தானுக்குக் கடிதம்.

“என்னமோ எழுதுகிறாளே, அப்பா சொல்லிக் கொடுக்கிறாரே!'' என்று உணர்ந்த சீதா வந்தாள் அந்த எழுத்தறைக்கு.

அவளுடைய வினாவுக்கு. “இரு, பார், என் யோசனையை! பொறு கொஞ்சம்!'' என்ற பதில் வந்தது சேஷாத்திரியிடமிருந்து

“இதென்ன கூத்து!'' என்று உள்ளே நின்றுகொண்டிருந்தாள் சீதா அவளுககு அடஙகா ஆவல்; “உமா எழுதுவது என்ன?''

ஒரோரு வார்த்தையாகப் பிடடுப் பிடடுச் சொல்லிகொண்டே போனார் சேஷாத்ரி எழுதினாள் உமா.

“நீ லீவுக்கு வந்துவிட்டுப் போனப்புறம் நான் உன்னைப் பார்க்கவேயில்லை, அத்தான்! நீ ஜெயிலுக்குப்போனால் எஙகளை, என்னைக்கூட, மறந்துவிடுவாயா? நீ அரெஸ்டு ஆகிவிடுவாய் என்றால் எனக்கு அழுகையாக வருகிறது!''

இநதக்கடைசி வாக்கியத்தின் முடிவு தூக்கிப்போட்டது சீதாவை. கணவரின் கருத்து என்ன?

“என்னது? என்ன எழுதச் சொல்றேள்?......'' என்றாள் சீதா பதற்றத்துடன்

“என்ன எழுதச் சொல்றேன்? கடிதம்!'' என்றார் சேஷாத்திரி.

“கடிதம்'', சரிதான்! என்ன கடிதம்?'' என்றாள் சீதா கோபமாக.

“அத்தானுக்குக்கடிதம்!'' என்றார் அவர் சிரிப்பினூடே. அவருடைய சிரிப்பைககண்டு கோபம் அதிகமாயது சீதாவுக்கு.

'அழகுதான்! அறியாக் குழந்தையைக் கைப்பொம்மையா வச்சுண்டு... ...கொண்டாங்கோ....... கிழிச்சுப்போடறேன் ......''என்று மேஜையண்டை வந்தாள் சீதா.

சடாரென “லெட்டர் பாட்'' மேஜை டிராயருக்குள் புகுத்தப் பட்டது! சேஷாத்திரி மேஜை டிராயர்மேல் சாய்ந்துகொண்டும் விட்டார்!

“எழுந்து வாடி!'' என்றாள் சீதா, பெண்ணைப்பார்த்து.

“நீ இரும்மா!.........இல்லை, போகிறதுன்னாலும் போ! இப்போ எழுதினது போறும். கையெழுத்தை நானே போட்டுடறேன் உன் கையெழுத்துமாதிரி! போஸ்ட் பண்ணிடறேன்!'' என்றார் சேஷாத்திரி குறும்பாக.

“ஒரு தப்பு பல தப்புகளுக்கு இழுக்கிறது! வேறென்ன? ஏன் தான் இந்தமாதிரி கிறுக்குத்தனமோ? போர்ஜரிதான் பாக்கி ......உம, என்ன வேணுமானாலும் செய்யுங்கோ! இவ்வளவுக்கப்புறம் கையெழுத்தும் அவளே தான் போடட்டுமே,

என்ன மோசம்?''என்று சினந்துவிட்டு, அடுப்பங்கரைக்கு வந்துவிட்டாள் சீதா. வந்தாலும், மனம் அலை பாய்நதது காது கொடுத்தாள் எழுத்தறைக்கு. இன்னும் ஓரிரண்டு வாக்கியங்கள் சொல்லிக்கொடுத்து, எழுத வைத்துவிடடுத்தான் கையெழுத்துப் போடச்சொன்னார் உமாவை என்பதைக் கவனித்தாள் சீதா

“உன் நினைவாகவேயிருக்கும, உமா!'' என்று அவளைக் கையொப்பம் இடச்சொல்வதை மட்டும் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருக்க முடியவில்லை, அவளால். வேகமாக வந்தாள் மீண்டும் கணவரண்டை.

“என்ன இது...எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கல்லே உங்கள் போக்கு!'' என்றாள் உக்ரமாக.

“காந்தியோடப் போக்குப் பிடிக்காமல்தான் வந்தது “ஆரெஸ்ஸெஸ்'' விபரீதம்!'' என்றார் சேஷாத்ரி நிதானமாக.

“காந்தி இப்படித்தான் அறியாப் பொண்ணை விடடு. இது மாதிரி கடிதம் எழுதச்சொல்லி காரியம் சாதிக்கச் சொன்னார் போலிருக்கு!-இதுதான் சத்தியம் போலிருக்கு நீங்க செய்யறது! நேர்மையாய் நீங்களே மருமானுக்குப் புத்திமதிக் கடிதம எழுதி மனசை மாற்ற 'துப்புக்காணோம்! இப்படி......''

“காதற் கடிதம்'' என்று கூற வாய் கூசியது சீதாவுக்கு.

“இப்படி சின்னப்பொண்ணு கூட எழுதுகிறதே என்றால்தான் ராஜு கேட்பான்!'' என்றார் சேஷாத்ரி முறுவலோடு.



"இப்படி உமா எழுதிய காதற் கடிதம், அன்புக் கடிதம்தான் அவன் மனசைத் திருப்பக்கூடியது!" என்று பளிச்சென்று சொல்ல அவருக்கும் தயக்கம்!

"ஐயோப்பா!......அப்படின்னால் வேண்டாம்! கிழிச்சுடு!" என்று குதிப்பாளே உமா, காதற்கடிதம் என்று உணர்ந்ததும்! பதின்மூன்று வயதுப்பெண், அன்பை, காதல் என்று உணரமுடியாத நிலைமையில் இருக்கும் அவள், அத்தான்மீது கொண்டுள்ள பாசத்தை எப்படிச் சொல்லக்கூடுமோ, அப்படி எழுதுமாறு கவனம் எடுத்துக்கொண்டிருக்கிறார் சேஷாத்ரி. காதல் என்பதை புலப்படுத்தாமல் அவளைக் குழந்தைத்தனமாகப் பேசவைத்து, ராஜுவின் மனதில் குறுகுறுப்பும் நெருநெருப்பும் உண்டாகுமாறு அவளை எழுதவைத்து விட்டார் தந்தை. அதை அவளே உணர்ந்தவளல்லவே! "காதற் கடிதம்" என்பதை உமா அறியாள்!

* * * *

மறுநாள் சேஷாத்திரிக்கு ஒரு கடிதம் வந்தது. கடிதம் எழுதியவள் ஜானகி.

"உனக்கு ஏதாவது விவரம் தெரியுமா இன்னும், அண்ணு? வேதனையில் புழுங்குகிறேன்!" என்று எழுதியிருந்தாள் அவள். "நானும இன்று ராஜூவுக்கு ஒரு கடிதம் எழுதுகிறேன் நீயும் புத்திமதி சொல், அண்ணு" என்று கெஞ்சியிருந்தாள் அதிலே.

கடிதம் கண்டு ஒரு அலாதிக் குளர்ச்சிக்குள்ளானுர் சேஷாத்திரி.

"இன்று ஜானகி கடிதமும். உமா கடிதமும் ஒருங்கே போய்ச் சேரும் ராஜூவிடம்! எந்தக் கடிதம் அவன் மனசை மாற்றும் கடிதம் என்பதைக் கண்டுபிடிக்க முடியாதே!" என்பது அவர் கவலையாயிற்று.

"கட்டாயம் மனம் மாறிவிடுவான்!" என்றுதான் அவர் நம்பினுர். ஆனுல் ஒரு நாள் முந்திப் பிந்தியாக இந்தக்கடிதங்கள் அவனை அடைந்தால், எந்தக் கடிதம் முதலில் வேலைசெய்தது அவனுள்ளத்தில் என்பதை மெள்ள துப்பறிய முடியும்! இரண்டும் ஒரே நாளில் போனுல்......? சீதா சிரித்தாள், பொருமினுள் இவர் வேதனை கண்டு "மனம் மாறணும்ங்கிற லட்சியம் நிறைவேறினுல போதாதாம! அழகுதான் கவலைப்படுகிற லட்சணத்தைப் பார்க்கல்லே! சுவாமி. பகவானே! உமாவைவிட்டு இவர் எழுதச் சொன்ன கடுதாசு எங்கேயாவது தவறியே போகட்டும்! ராஜூவுக்குப் போய்ச்சேரவே வேண்டாம். அவனோட அம்மா கடுதாசி மட்டும் போய்ச் சேரட்டும! அவன் மனசு திருந்தட்டும்!" என்று சொல்லிக் கொண்டாள், சிரித்தாள்.

"உமாவோட கடுதாசி தவறிப் போகட்டும்னு வேண்டிக்கறேன் நான...அப்போ நிச்சயமாகத் தெரியுமோன்னே, மனசு மாறினது எந்தக் கடிதத்துனுலேன்னு!" என்ருள் குறும்பாக கணவரிடம்

"உமா,...ஒட்டைச்சாண் பெண் இதுமாதிரிகடிதம் எழுதினுள் ஒரு வயசுப் பையனுக்கு!" என்று வெளியே தெரியவநதால் நாலைக்கு நாலு பேரிடை என்ன அவமானம்!" என்று அவள் கவலை பாவம், அவளுக்கல்லவா தெரியும்?

அதை அறியாதவர்போல் சேஷாத்திரி பேசினுர். "போடி, கிறுக்கு! புருஷனுக்குச் சாதகமாய், ஜானகி கடுதாசி தவறணும்னு வேண்டிப்பாயா...இப்படி தலை கீழா வேண்டிப்பாயா?" என்று சொல்லி சிரித்தார் அவர், கவலையினூடே!

* * * *

நாலுநாள் காக்கவேண்டி வந்தது ராஜூவின பதிலைப் பெற்றுக் கொண்டு ஆறுதல் உணருதற்கு... இரண்டு குடும்பத்தாருக்கும் தான்!

"சேரலாம் என்று நான் உறுதி செய்துகொண்ட சமயம, மாறிவிட்டது என் மனம். சத்தியாக்கிரகத்தில் சேர்ந்தால் 'கிறுககுப் புத்தி' என்கிருர்கள் பிறர். சேராவிட்டால், 'கிறுக்கு'! என்கிருர்கள் சங்கத் தோழர்கள்! ஆனுல், நான் என் உடனெத்தவர்களின் ஏச்சைப் பொறுத்துகொள்கிறேன்! கடைசி வருஷப் படிப்பைக் கெடுத்துக்கொண்டு வீணுக, பெரியவர்களுக்கும், என்னிடம் மாபெரு அன்பைச் சொரிபவர்களுக்கும் வருத்தம் உண்டாக்குவதை நான் விரும்பவில்லை. தவிர்க்கிறேன்!" என்று கூறியது ராஜூவின் கடிதம்

அங்கே பெற்ருேர்களுக்கும் இதே பதில், இங்கே மாமா,மாமிக்கும் இதே பதில்!

ஜானகியின் எழுத்து கிறுக்கு எழுத்துத்தான். சிதைந்த தமிழ்ச் சொற்களைக் கொண்டுதான், கொச்சை வார்த்தைகளை வாரியிறைத்துத்தான், எழுதினுள் அவள், கடிதம் ஆனுல் ஒரு குறுக்குக் கேள்வியும் பிள்ளை கேட்டுவிட முடியாதபடி அத்தனை விவரமாக, ஆழமாக, அவள் தன் மனக் கருத்தை அதில் பதித்துவிட்டிருந்தாள். பிள்ளையிடம் பேசுவது போல, குழைய எழுதியிருந்தாள். அவள் கடிதம்தான் ராஜூவின் இத்தகைய நல்லுறுதிக்குக் காரணமோ?

"எனக்குத் தெரியும், பிள்ளை அம்மாவின கெஞ்சுதலுக்குத்தான் லட்சியம் வைப்பான் என்று! தாயின் கடிதம்தான் இளக்கும் உள்ளத்தை என்றுதான், நான் கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன், நான் எழுதி முடியாது என்று! பிள்ளைமேல் நான் சீற்றமாகயிருந்து ஒரு அக்கரையும் கொள்ள மாட்டேன் என்று பிடிவாதமாக இருந்ததனுல்தான், அவள் தன் கிறுக்கு எழுத்தைத் தங்குத் தடை இல்லாமல் வீசிவிட்டிருக்கிருள்... பலனும் உடனே கிட்டியது!" என்று ராமசாமி, "கிறுக்கா"கத் தோன்றக்கூடிய தம் பிடிவாதத்துக்கும் கோபத்திற்கும், வியாக்கியானம் கூறி எழுதினுர் சேஷாத்திரிக்கு.

சேஷாத்திரிக்குப் பாவம், வருத்தம், ஏமாற்றம்.

"வைரத்தை வைரங்கொண்டு அறுக்கணும் என்று சொல்லுவார்கள். சங்கக் கிறுக்குப் போக்கடிக்க, காதல்...கிறுக்குப் புகுத்தினேன் ராஜூவின் மனதிலே!" என்று சொல்லிக்கொண்டு பெண்ணுக்கு வரன் தேடும் யோசனையே இல்லாது தவிர்க்க உறுதி பிறக்கவில்லையே. இப்போதே!

உமாவின் கடிதத்தால் மனம் மாறியதென்ருே, தன் நல்ல எண்ணம் உறுதிப்பட அவள் கடிதம் உதவியது என்ருே ராஜூ சேஷாத்திரிக்கு எழுதவில்லையே!... எப்படி எழுதுவான்? உமா ரகசியமாக அத்தானுக்கு எழுதுவதாக அல்லவோ தொனிக்கும்படியாக எழுதப்பட்டது அது? அவருக்கு எழுதும் கடிதத்தில் எப்படி உமா கடிதத்தைக் குறிப்பிடுவான் ராஜூ!

சேஷாத்திரியின் குழப்பம் சீதாவுக்கு வேதனையளிக்கவேயில்லை! ஏன் ..உமாவுக்குக்கூட வேதனையோ யோசனையோ இல்லை! அடுத்த வாரம்...

"அப்பா!" என்று பாவாடை அலைபுரள ஓடோடி வந்தாள் உமா. "அத்தான் எழுதியிருக்கான் எனக்கு!" என்று ஆனந்தக் கூத்தாடினுள். அவள் கையில் ஒரு கார்டு.

"என் படிப்பு முடிந்து வரும் போது உனக்குப் பொம்மைகள் ஒரு பெட்டி நிறைய வாங்கி வர நினைத்திருந்தேன்! ஆனுல், இப்போது வேறு யோசனை..ஒரு அழகிய சிற்றுடை வாங்கி வரட்டுமா, உமா?"

ராஜூ, உமாவுக்கு, இப்படி, ஒரு கார்டு எழுதுவானேன? காரணம் விளங்கிற்று!

குறுக்குச் சங்கம் ஒழிந்துவிட்டது! ஆனுல் ராஜூ, உமா இருவரிடையே காதல்...கிறுக்கை வளர்த்துப் பிறகு சீர்படுத்த பெரியவர்களிடையே யோசனை!



17

சுதந்திரக் கப்பலும் சௌந்தரியக் கப்பலும்

★

'வ. உ. சிதம்பரம் பிள்ளை' என்ற பெயரால் தூத்துக்குடியில் வியாபாரக் கப்பலை மிதக்கவிடுவது எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது விமலா!' என்று கேட்டுக்கொண்டே வந்தாள் கமலா.

'கப்பலோட்டிய தமிழன் பெயரால் சுதந்திரத் தமிழ்நாடு தெற்குக் கோடியாகிய தூத்துக்குடியிலிருந்து வியாபாரக் கப்பல் ஓட்டுவது பொருத்தமானதுதான். இந்தக் கப்பலை வ. உ. சி. யின் பழைய நண்பரான ராஜாஜி ஓட்டுவதும் பொருத்தம்தான்' என்றேன் நான்.

'ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை ஓட்ட முயன்ற கப்பல் ஓட்டைக் கப்பல் என்று அந்த நாளில் பரிகசித்தார்களாமே?' என்று கேட்டாள் ஸரோஜா.

நாட்டில் சுதந்திரம் இல்லாததே அந்த நாளில் எந்த முயற்சியையும் ஓட்டைக்கலம் ஆக்கியிராதா? என்று எதிர்கேள்வி போட்டாள் கமலா.

'அந்தக் கப்பல் ஓட்டியதே வெள்ளைக்காரர்களை நாட்டிலிருந்து ஓட்டிவிடத்தான் என்று கூடப் பேசிக்கொண்டார்களாமே அந்நாளில்?' என்று கேட்டாள் ஸரோஜா

'இப்படி எத்தனையோ கதைகளும் கற்பனைகளும் உற்பத்தியாவது இயற்கைதான். தாம் ஒன்றோ இரண்டோ வியாபாரக் கப்பல் ஓட்டுவதால் அன்னிய அரசாங்கமே ஓடிப்போகும் என்று கனவு காணக்கூடியவரல்ல சிதம்பரம்பிள்ளை உலகம் தெரிந்த 'அறிவாளி அவர். அந்நாளில் நம்மவர்களுக்கு அடிமைப் புத்தி அதிகம் ஒரு பெருங்காரியம் செய்வதிலும் அதிக நம்பிக்கை கிடையாது. "நம்மால் என்ன செய்ய முடியும்? வெள்ளைக்காரரே சர்வ வல்லமையுள்ளவர்" என்று நம்மக்கள் நம்பிய காலம் அது. அப்போது "சுதேசிகளாவது, கப்பலோட்டுவதாவது" என்று சில வெள்ளைக்காரர் பரிகசிக்கப் பல சுதேசிகளும் "ஆம்" என்றும் "ஓம்" என்றும் ஒப்பம் போட்ட காலம் அது. அத்தகைய அவநம்பிக்கைக்கு ஒரு மருந்தாக வ. உ. சி. அவர்களும் அவருடைய தோழரான சுப்பிரமணிய சிவமும் "கப்பலும் ஓட்டுவோம்; அதில் சுதேசிகளின் விரோதிகளான பரதேசிகளையும் ஓட்டிக்கொண்டு போவோம்!" என்று காரசாரமான தங்கள் பிரசங்கங்களிடையே சொல்லுவதுண்டாம். இந்தச் செய்தியை அடிப்படையாகக் கொண்டுதான் பாரதியார்,

ராஜாஜி

> கப்பல் ஏறு வாயோ அடிமை?
> கடலைத் தாண்டு வாயோ?

என்று திருநெல்வேலிக் கலெக்டரான விஞ்சுதுரை கேட்டதாகவும், அதற்குச் சிதம்பரம் பிள்ளை,

> பொழுதெல் லாம்எங்கள்
> செல்வக் கொள்ளைகொண்டு
> போகவோ? நாங்கள் சாகவோ?

என்று பதில் சொன்னதாகவும் பாடி வைத்திருக்கிறார்? என்றேன் நான். அப்போது அங்கே வந்த ராமு 'மாடு தின்னும் புலையா! உனக்கும் மார்கழித் திருநாளா?' என்ற வர்ண மெட்டில்,

> கப்பல் ஏறு வாயோ? அடிமை
> கடலைத் தாண்டு வாயோ?

என்று பாடத் தொடங்கிவிட்டான். அவனை நோக்கி ஸரோஜா 'இது யார் பாடியிருக்கிறார் தெரியுமா ராமு?' என்று கேட்டாள்.

அதற்கு ராமு 'ஆங்கில உத்தியோகஸ்தன்' என்று பதில் சொன்னான்.

'ஆங்கில உத்தியோகஸ்தனா" "உனக்கும் மார்கழித்திருநாளா?" என்ற மெட்டில் பாடியிருக்கிறான்? ஆங்கில உத்தியோகஸ்தனுக்குத் தமிழில் பாடத் தெரியுமா?' என்று கேட்டாள் கமலா.

'ஏன் தெரியாது? "சுயராஜ்யம் வேண்டுமென்ற பாரத வாஸிக்கு ஆங்கிலேய உத்தியோகஸ்தன் கூறுவது. நந்தனார் சரித்திரத்திலுள்ள 'மாடு தின்னும் புலையா!—உனக்கும் மார்கழித் திருநாளா?' என்ற பாட்டின் வர்ணமெட்டு' என்று 'பாரதி பாடல்கள்' என்ற புத்தகத்தில் போட்டிருப்பதை அப்படியே ஒப்பித்தான் ராமு.

'சரி; இந்த வர்ணமெட்டில் கலெக்டர் துரை பாடச் சிதம்பரம்பிள்ளை

தண்டகம்—ஆதிதாளத்தில் தம்முடைய பதில் பாட்டைப் பாடினரோ?' என்று கேட்டாள் ஸரோஜா ராமுவைப்பார்த்து

அதற்குள் ராமு வேறொரு பாட்டைப் பாடத் தொடங்கி விட்டான்

வெள்ளை நிறத்தவர்க்கே ராஜ்யம்—அன்றி
வேறெவருக்கும்அது தியாஜ்யம்

என்று பாடிக்கொண்டே போய் விட்டான்.

'இதுதான் அந்தக் காலத்தாரின் மனநிலை "சுதந்திர நினைவுக்கும் தண்டனையுண்டு. இந்தியன் பீனல் கோட் மட்டுமல்ல மறுலோகத்திலே அந்த யமலோகப பீனல்கோடும் தண்டிக்கக்கூடுமோ?" என்று ஒரே பயப் பிராந்தியாக இருந்த அந்தக் காலத்திலே வீர சிதம்பரம் பிள்ளை சுதந்திரக் கப்பலோட்டவும் துணிந்தார்' என்றேன் நான்.

ராமுவும் சோமுவும் மறுபடியும் பாடிக்கொண்டு வந்தார்கள். அதே "உனக்கும் மார்கழித் திருநாளா?" என்றவர்ண மெட்டில்தான்

அச்ச நீங்கி னுயோ?-அடிமை!
ஆண்மை தாங்கி னுயோ?

'கேட்டீர்களா? அத்தகைய அச்சத்தை அறவே நீக்கி ஆண்மை தாங்கித் தேசியக் கடலில் கப்பல் ஓட்டியவர் சிதம்பரம் பிள்ளை அரசியல் கடலில்தான் அந்த நாளிலே என்ன கொந்தளிப்பு!' என்றேன் நான்

'தாம் அச்சம் நீங்கியது மட்டுமா? தென் கோடியிலுள்ள தமிழ் மக்களும் அச்சம் நீங்கி ஆண்மைதாங்கச் செயல் புரிந்தவரல்லவா? அந்தக் கப்பலும் ஓட்டைக் கப்பலாகுமோ?' என்று வியந்தாள் கமலா.

'அந்நாளில் திருநெல்வேலி தமிழர்களெல்லாம் அச்சம் நீங்கி ஆண்மை தாங்கிச் சிதம்பரம் பிள்ளையைப் பின்பற்றினர்களா?' என்று கேட்டாள் ஸரோஜா

'அது எப்படி முடியும்? சிதம்பரம் பிள்ளை சுதந்திரதேவியையே சௌந்தரிய தேவியாகக் காட்டிக்கொண்டிருந்த காலத்திலே திருநெல்வேலித் தமிழறிஞர்கள் தமிழ்மொழியின்

பாரதியார்

மென்மை, மேன்மை முதலான அழகுகளையெல்லாம் கரடுமுரடான தமிழில் வருணித்துக்கொண்டிருந்தார்கள்

முன் அறியாப் புது வழக்கம்-நீர்
மூட்டி விட்ட(து) இந்தப் பழக்கம்

என்றுதான் ஏதோ முகாரி ராகம் பாடினர்கள் சிதம்பரம் பிள்ளையை நோக்கி "பாமர ஜனங்கள்" என்று சொல்லப்படும் தமிழ்ப் பெருமக்களே சிதம்பரம் பிள்ளையைப் பின் பற்ற ... என்றேன்.



வ உ. சிதம்பரம் பிள்ளை

ராமுவுக்கும் சோமுவுக்கும் எங்கள் பேச்சு ரஸிக்கவில்லை அவர்கள் ஒரே குரலில்,

சாதிச் சண்டை போச்சோ-உங்கள்?
சமயச் சண்டை போச்சோ?

என்று பாடினர்கள். மறுபடியும்,

சேர்ந்து வாழு வீரோ?-உங்கள்
சிறுமைக் குணங்கள் போச்சோ?

என்று பாடினர்கள்—நந்தன் சரித்திரமெட்டில்தான்

'தமிழின் சௌந்தரியத்தைப் பிரசாரம் செய்வதாகச் சொல்லிச் சுதந்திரம் வேண்டாமென்று சொல்லிக் கொண்டிருந்தவர்களும் இப்போது ராமுவும் சோமுவும் பாடிய கலெக்டர் துரையின் ஏசலைத் தங்கள் இனித்த வசனத்தில் அமைத்துச் சோகரஸமாய்ப் பாடிக்கொண்டிருந்தார்கள் ஆனால் சிதம்பரம்பிள்ளை சுதந்திர தேவியின் அருள் பெருமல் சௌந்தரியதேவி நமது நாட்டில் பிரத்யட்சமாகவேமாட்டாள் என்பதைத் தெளிவாகச் சொல்லிவிட்டார் அந்தக் காலத் தமிழ்ப் பண்டிதர்களின் பாஷையில் ஐயந்திரிபற அறைந்துவிட்டார்' என்றேன் நான்

'ஓஹோ. பிள்ளையவர்கள் பேசுவதும் அப்படித்தான் இருக்குமாமே' என்ருள் கமலா.

'பிள்ளையவர்கள் உள்ளத்திலே விஷத்தை வைத்துக்கொண்டு அழுதெ முகப் பேச அறியாதவர் "வெட்டென்று துண்டுரெண்டு" என்று பேசித் தீர்த்துவிடுவார் என்றேன் நான்

'சிதம்பரம் பிள்ளையின் பேச்சின் தமிழின் மென்மையைக் காட்டிலும் தமிழின் வன்மை அதாவது தமிழின் சக்திதான் அதிகமாய் இருக்கும் என்கிருர்களே' என்ருள் ஸரோஜா.

'சிதம்பரம் பிள்ளையும் ஒரு நல்ல தமிழறிஞர்தான், தமிழின் சௌந்தரியத்தை வழிபட்டவர் தான். ஆனால் சிதம்பரம்பிள்ளை தமிழில் கண்ட சௌந்தரியம் சக்தியமயமான சௌந்தரியம்; வீர சுதந்திர சௌந்தரியம்' என்றேன்

'ஆனால் சாதிச் சண்டையும் சமயச் சண்டையும் நீங்கிச் சேர்ந்து வாழும் கலையில் நாம் இன்னும் பயிற்சி பெற்றோமில்லையே!' என்று பெருமூச்சு விட்டாள் கமலா.

உண்மைதான் இதற்காகச் சுதந்திரமேவேண்டாமென்றுகூடச்சொன்னார்கள் சிதம்பரம் பிள்ளையின் காலத்தில் இருந்த சில அறிவாளிகள். ஒற்றுமை பெற்றபின் சுதந்திரம் கிடைத்தால் போதும் என்றார்கள். சிதம்பரம் பிள்ளையோ சுதந்திரம் வந்து நிலைபெற்றபின்புதான் சாதிசமயச சண்டைகளெல்லாம் போகும் என்றார்' என்றேன் நான் 'சுதந்திரம் வந்தும் சாதிசமயச் சண்டை ஓயவில்லையே' என்றாள் கமலா.

'சமயச்சண்டை இந்நாளில்தான் கிடையாதே சமயங்களோடுதானே சண்டைபோடுகிறார்கள் சமய நம்பிக்கை இல்லாதவர்கள். வடநாட்டில் ஏற்பட்ட இந்து—முஸ்லிம் பூசல்களும் உண்மையில் சமயச் சண்டைகளல்ல சமய நம்பிக்கை இல்லாத சில சுயநல அரசியல் வாதிகளின் சூழ்ச்சியின் விளைவாக ஏற்பட்ட ஏசல்களும் பூசல்களும்தான் அவை சுதந்திரதேவி தன் சௌந்தரியத்தைக் கெடுக்கும் இந்த வடுக்களை எல்லாம் விரைவில் களைந்துவிடுவாள் என்பது திண்ணம்' என்றேன்.

'ஆனால் அதற்கு' இசைந்தபடி நாமும் அறிவோடு புதிதாய்க் கிடைத்திருக்கும் சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டாமா?' என்று கேட்டாள் கமலா.



ஜவாஹர்லால் நேரு

அப்போது ராமுவும் சோமுவும் வெளியேயிருந்து.

நாடு காப்பதற்கே—உனக்கு
ஞானம் சிறிதும் உண்டோ?

என்று பாடியது எங்கள் காதில் விழுந்தது. 'ஆசியாவுக்கே இந்தியாவைத் திலகமாக்கவேண்டுமென்று பண்டிதநேரு அரும்பாடு பட்டுவரும் இந்நாளில் அந்த அபவாதத்திற்கு இடமே கிடையாது நாடு காக்கும் ஞானம் என்பது நீச்சல்—ஞானம் போன்றது நீஞ்சத் தெரிந்தால்தான் தண்ணீரில் இறங்கலாம் என்பதுபோல் நாடு காக்கும் ஞானம் இல்லாத உங்களுக்கு எப்படிச் சுதந்திரம் கொடுப்போம் என்றார்கள் வெள்ளைக்காரர்களும் அந்நாளில் நம்மவர்களிலும் சலாம் - கும்பல்கள், நாடுகாக்கும் ஞானம் இல்லாமல் சுதந்திரம் பெற்றுத்தான் என்ன பயன் என்று ஒத்துப் பாடின. சுதந்திரம் வந்ததும் நாடுகாக்கும் ஞானம் நன்றாக வந்துகொண்டிருக்கிறதல்லவா?' என்றேன் நான்.

அச்சமயம் பிள்ளைகள்,

சேனை நடத்து வாபோ!

என்று பாடிக் கொண்டிருந்தார்கள். 'இந்த அபவாதம் ஹைதராபாத்துப் படையெடுப்பிலும் காஷ்மீரப் போரிலும் நீங்கிப்போய் விட்டது. சேனை நடத்தும் தலைமைப் பெரும்பகுதி தென்னிந்தியரான கரியப்பாவுக்குக் கிடைத்திருப்பதே நமது சுதந்திர முன்னேற்றத்திற்கு ஒரு நல்ல அறிகுறி' என்றேன்

'சரிதான் ஆனால் அந்த நாளிலேயே சுதந்திரக்கப்பல் ஓட்ட முயன்ற தமிழர் இப்போதுள்ள நிலைமையைக் கனவிலாவது கண்டிருப்பாரா?' என்று கேட்டாள் கமலா.

'அவரா? பெரும்பெருங் கனவுகள் கண்டார் அந்த நாளிலேயே இந்தியா ஒன்றுபட்டு மூச்சுவிட்டாலும் போதும்; சுதந்திரப் பேச்சும் வேண்டாம், சுதந்திரம் வந்துவிடும் என்று கனவு கண்டார். சுதந்திர ஆசைக் கனலை மூட்டிவிட்டால் சாதிச் சண்டை. சமயச்சண்டை, மொழிச் சண்டை எல்லாம் வெந்து நீறாகிப் போகும்; நெருப்பிலே முழுகியெழுந்த நந்தனார்போல் அடிமைப் பேடிகள் சுதந்திர சௌந்தரிய மனிதர்களாக எழுந்து நிற்பார்கள் என்று கனவு கண்டார். இப்படியெல்லாம் கனவுகண்ட சிதம்பரம் பிள்ளையைக் "கப்பலோட்டிய தமிழர்" என்று நாம் குறிப்பிடும்போது, வியாபாரக் கப்பலை ஓட்டிய தமிழர் என்று மட்டும் கருதுவதில்லை, சுதந்திரக்கப்பலையும், "தமிழர் புது வாழ்வு" என்ற சௌந்தரியக்கப்பலையும் ஓட்டமுயன்ற பெருந்தமிழர் என்றே மகித்து இன்று நினைந்துப் பார்க்கிறோம் இந்தப் பெருந்தமிழர். தமிழ்ப்பெண்களும் வீரப்பெண்மணிகளாய் வீடுகாக்கும் ஞானத்துடன் நாடுகாக்கும் ஞானமும் பெற்றுச் சுதந்திர சௌந்தரிய தேவியின் பிரதிபிம்பம்போல் புதுவாழ்க்கை நடத்தவேண்டுமென்று விரும்பினார்' என்றேன்.



[சென்றவாரத் தொடர்ச்சி]

அந்த வருடம் கோடை விடுமுறையின்போது நிர்மலாவும், கமலாவும், விமலாவோடு குற்றாலத்திற்குப் போயிருந்தார்கள். சந்துருவுக்கு விமலாவோடு போக முடியவில்லை. அவன் மானேஜராயிருந்த மில்லில், தொழிலாளர்கள் 'வேலைநிறுத்தம்' செய்திருந்தார்கள். ஆரம்பித்து இரண்டு மாதமாகியும் 'ஸ்டிரைக்' முடியும் வழியாகக் காணோம். இழுத்துப் பறித்துக்கொண்டு நடந்தது. போலீஸ் தடியடியும் அதுவும் இதுவுமாக ஏககலாட்டாவாக இருந்தது. அதனால் சந்துரு, மில்லைக் கவனிக்காமல், குற்றாலம் போக முடியாமற் போய்விட்டது. அவனுக்குப் பதிலாக, நிர்மலாவும் கமலாவும், விமலாவோடு சென்றிருந்தனர்.

கொஞ்ச நாளாக ஓய்வு கிடைத்திருந்தது விமலாவிற்கு. அதுவரையில் சந்துருவிடம் தப்பிய வைத்தியனோ, சாமியாரோ, தெய்வமோ கிடையாது என்றே சொல்லவேண்டும். எங்கேயாவது கண் வைத்தியத்தில் சிறந்த வைத்தியரோ, சாமியாரோ, இருப்பதாகக் கேள்விப்பட்டால் போதும். கையில் இருக்கும் காரியத்தை அப்படியே போட்டுவிட்டு தன் தங்கையைக் கூட்டிக்கொண்டு அவரிடம் முதலில் ஆஜராகிவிடுவான். "அந்தச் சாமி சக்தியுள்ள சாமி! 'கண் மலர்' வாங்கி சாத்தி ஒரு மண்டலம் பூஜை செய்து, பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து வந்தால் கண் பார்வை வந்து விடுகிறது," "அந்த கோயில் புஷ்கரணியில் ஸ்நானம் செய்தாலே போன பார்வையைப் பெற்றுவிடலாம்" என்று யாராவது சொல்லிவிட்டார்களானால் போதும். ஒரு நிமிஷம்கூட தாமதம் செய்யாமல் அதைச் செய்துவிடுவான். "எதைத் தின்றால் பித்தம் தெளியும்" என்பது போல, எந்தவழியிலாவது, என் அருமைத் தங்கை இந்தப் பாவியின் காரணமாய் இழந்த கண் பார்வையைப் பெற்றாளானால் போதும்" என்று தவியாய்த் தவித்து தண்ணீராய் உருகினான், சந்துரு. அவன் மில்லிற்குப் புதிதாய் வேலைக்கு வந்த உதவி மேனேஜர் சொன்ன நாட்டு வைத்தியர் சந்திரநாதனிடம் சிகிச்சை செய்துகொள்ளத்தான் விமலாவைப் போகும்படி நச்சரித்துப் பிராணனை வாங்கினான் சந்துரு.

"எனக்கென்னமோ ஒன்றிலும் நம்பிக்கையேயில்லை அண்ணா. எவ்வளவோ தண்டச் செலவு செய்தாச்சு. நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்று என் மனதைத் திடப்படுத்திக்கொண்டுவிட்டேன். என்னை வீணில் தொந்திரவு செய்யாதே" என்று சலித்துக்கொண்டாள் விமலா.

"விமலா! என் கண்ணில்லையா நீ! இந்த ஒரு தடவை மட்டும் போய்விட்டுவா. என் மனத்திற்கு இந்தத் தடவை உன் கண்கள் குணமாய்விடும் என்று ஏதோ ஒன்று சொல்லுகிறது என் வார்த்தையைத் தட்டாமல், தடங்கல் ஒன்றும் சொல்லாமல் போய்வா!"

"அப்பப்ப! நீ பிடித்த முயலுக்கு மூன்று கால்னு! நச்சு நச்சு என்று ஆளைப் பிடுங்கிவிடமாட்டாயா! இன்னும் போன ஜன்மத்தில், நான் பட்டிருக்கிற கடனை கொடுத்துத்தானே ஆக வேண்டும்."

"விமலா! நீ இப்படிச்சொல்லக் கூடாது."

"அது சரி, நீ இல்லாமல் நான் மட்டும் தனியாக எப்படி போவது?"

"சின்ன குழந்தையா நீ! உனக்கு வயது ஆகவில்லையா? சமையல்காரியம்மா தங்கம் உனக்குப் பெரிய துணை ஆய்விட்டது. நிர்மலா அப்பாவும், கமலா அப்பாவும் "எப்படியாவது டீச்சர், கண் தேவலையானால் போதும், அடிக்கிற வெயில் இதுகள் தலையில் அடிக்காமல், உங்கள் தங்கைக்கு உதவியாக அனுப்புவதில் எங்களுக்கு ரொம்ப சந்தோஷம்னு" சொன்னா, நீ அவா இரண்டு பேரையும் பொழுது போக்குக் கூட்டிக்கொண்டு போ. இந்த ஏற்பாடு போதாதா? இதற்கு மேல் என்ன வேண்டுமாம் உனக்கு?" என்றான் சந்துரு.

"ஸ்டிரைக்"கும் 'கிய்க்'குமா, ஒரே ரகளையாயிருக்கும்போது, உன்னைத் தனியாக விட்டுவிட்டு என்னால் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்?"

"பத்து நாளைக்கு ஒரு தரம் உன்னை வந்து பார்த்துவிட்டு வருகிறேன், வருகிறேன் என்று எத்தனை தரம் உனக்குச் சொல்வது?"

"ஏமாற்றமாட்டாயே? உன்னைப் பிரிந்து நான் இதுவரை இருந்ததே இல்லையே அண்ணா?"

"ஐயோ! விமலா! நீ இன்னும் 'பாப்பா'வாத்தான் இருக்கே, போ!"

அவளை வந்து அடிக்கடி பார்ப்பதாக சந்துரு வாக்குக் கொடுத்த பிறகு விமலா தன் இரு மாணவிகளோடும், சமையல் காரியோடும், குற்றாலத்திற்குப் பக்கத்தில், ஒரு குக்கிராமத்தில் இருந்த சந்திர

நாதனிடம் தன் கண்களுக்கு நாட்டு வைத்தியம் செய்துகொள்ளச் சென்ருள்.

* * * * *

நாதன் குரு காட்டிய வழிகளின் படியே பல மூலிகைகளைக் கொண்டும், அவைகளினின்று வடிக்கப்பட்ட சாறுகளினுலும், எண்ணெய்களைக் கொண்டும், சந்திரநாதன் வைத்தியம் செய்து வந்தான். வயது முப்பதே ஆன போதிலும் வைத்தியத்தில் அவனுக்கு நல்ல அனுபவம். அவன் தந்தையே குருவாக விளங்கினுர் நாதனுக்கு, பிள்ளைப்பிராயத்திலிருந்தே, அவன், தந்தைக்கு உதவியாய் இருந்து வந்தான். அவர் மூலிகைகள் கொண்டு வர காட்டுக்கும், மலைக்கும் செல்லும் போது கூடவே செல்வான் வைத்தியத் தொழிலுக்கே, பிறந்தவன் போல, இங்ஙனம், இளமையிலே பழக்கப்பட்டான் அவன். நாள் செல்லச் செல்ல அதில் தேர்ச்சியும் பெற்ருன். தந்தையைக் காட்டிலும் அவனுக்கு நல்ல கைராசியிருந்தது. அதனுல் அவன் தந்தையே, அவன் கையினுலேயே பல பேருக்கு மருந்துகொடுக்கச் சொல்வதுண்டு. நாளடைவில் அவர் அதிலிருந்து விலகிக் கொண்டு தன் மைந்தனிடமே முழுப் பொறுப்பையும் விட்டுவிட்டார். தன் தந்தையின் வாழ்நாளிலேயே நல்ல பெயர் அடைந்துவிட்டான். 'சித்தர்கள்' கண்ட முறையோ "வித்தகர்கள்" விண்ட முறையோ, அவன் வைத்தியமுறை என்று அவனிடம் வைத்தியம் செய்து கொண்டவர்கள் அறியார்கள். அறியவும் விரும்பவில்லை. 'மண்ணைக் கிள்ளி' அவன், கையால் கொடுத்தாலும் அது வியாதியைப் போக்கிவிடும் என்று அவர்களுக்கு நம்பிக்கை, அதுதானே முக்யம்?

சந்திரநாதன் ஒப்புக்கொண்டான் விமலாவிற்கு வைத்தியம் செய்ய. அவளுடைய துக்ககரமான வரலாற்றைகேட்டு மிகவும் வருந்தினுன். "ஒரு மண்டலம் இதற்குக் கட்டு கட்டவேண்டும். நான் கொடுக்கும் மருந்து எண்ணெயை தினமும் தேய்த்து அரைமணி நேரம் ஊறிய பிறகு ஸ்நானம் செய்யவேண்டும். உள்ளுக்கும் எண்ணெய் கொடுக்கிறேன். கண்களில், தூசிகள் (வெடி வெடிக்கும்போது சிதறிய மருந்தாகத்தான் இருக்கவேண்டும்) சிக்கிக்கொண்டிருக்கிறது. அதை ஜாக்கிரதையாக, பக்குவமாக, அப்புறப்படுத்தவேண்டும். கண்கள் குணமாகிவிடும் என்று பூர்ண நம்பிக்கை எனக்கு இருக்கிறது. பிறகு ஆண்டவன் செயல்" என்று கூறினுன்.

மாலை வேளைகளில், நிர்மலாவோடும், கமலாவோடும். விமலா அவ்வூரிலிருந்த ஏரிக்குச் செல்வது வழக்கம். 'ஜிலு ஜிலு' என்று ஜலக்காற்று அவர்களை தினந்தோறும் வரவேற்கும். மூவரும் ஏரிக்கரையில் உட்கார்ந்து கொண்டு பாடுவார்கள். கதை பேசிக்கொண்டிருப்பார்கள். தங்கம்மாளும், வீட்டு வேலைகளை சீக்கிரமாக முடித்துவிட்டால் இவர்களோடு செல்வாள். ஏரியில் ஜலம் எடுக்கவரும், பழக்கமான கிராமத்து ஸ்திரீகளும், விமலாவோடு சில சமயம் கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டுச் செல்வார்கள்.

ஒருநாள் மாலை இவர்கள் மூவரும் பாடிக்கொண்டிருக்கும்போது பச்சிலை கொண்டுவரப் போயிருந்த சந்திரநாதன் தன் வேலையாள் பின்தொடர வந்தவன், தூரத்தில் யாரோ பாடுவது காதில் விழுந்து திரும்பிப்பார்த்தான். இம்மூவரையும் கண்டதும் தன் வேலையாளைப் போகச் சொல்லிவிட்டு இவர்களை நோக்கி வந்தான்.

"டீச்சர்! டாக்டர் வருகிறுர்" என்ருள் சந்திரநாதன் வருவதைப் பார்த்த கமலா.

"நீங்கள்தானே இப்போது பாடிக்கொண்டிருந்தீர்கள்" என்று கேட்டுக்கொண்டே வந்தான் சந்திரநாதன்.

"ஏன் டாக்டர்? கண்களுக்கு வைத்தியம் செய்துகொண்டால் பாடக்கூடாதோ?" என்ருள் பொல்லாத நிர்மலா.

"யாரம்மா! பாடக்கூடாது என்று சொன்னது?" என்று கேட்டான் நாதன்.

"வழியோடு போய்க்கொண்டிருந்தவர் 'இப்போது நீங்கள் தானே பாடிக்கொண்டிருந்தீர்கள்' என்று அதட்டிக் கேட்டால் என்ன நினைப்பது? கண் வைத்தியம செய்துகொண்டால் பாடக் கூடாதாக்கும் என்றுதானே எண்ணவேண்டியிருக்கிறது"

"நல்ல பெண்ணம்மா நீ! இல்லாத வம்புக்கெல்லாம் இழுக்கிருய்! உங்கள் பாட்டு காதில் விழுந்தது. இங்கக் கிராமத்தில் இவ்வளவு இனிமையாகப் பாடக்கூடியவர்கள் யாருமில்லையே என்று பாட்டு வந்த திக்கில் திரும்பிப் பார்த்தேன். நீங்கள் மூவரும் உட்கார்ந்திருப்பதைக் கண்டேன்.

எனக்குத் தெரிந்தவர்களாக இருக்கவே, இன்னுமொரு பாட்டு கேட்டு விட்டுப் போவோம் என்று வந்தேன். நீயோ வருவதற்கு முன்பே வலுச் சண்டைக்கு இழுக்கிருய். பட்டணத்துக்காரங்களே இப்படித்தானு? நான் போகிறேனம்மா......வீண் சண்டைக்கு நான் ஆளல்ல......''

“நிபந்தனையின்றி நீங்கள் பணிந்துவிட்டதால், நான் யுத்தத்தை நிறுத்திவிட்டேன்'' என்ருள் நிர்மலா.

சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தனர். கமலாவும், நிர்மலாவும் பாடினுர்கள். விமலாவும் கூடப் பாடினுள், நாதன் ‘பச்சிலை இடிப்பது, எண்ணெய் வடிப்பது. மாத்திரை உருட்டுவது, புடம் போடுவது'' அது, இது என்றுதான் இதுவரை தன் கவனத்தையெல்லாம், பொழுதையெல்லாம் போக்கியிருக்கிருனே அன்றி. இத்தகைய சுந்தர கானத்தைக் கேட்டதே கிடையாது. குக்கிராமத்தில் யார் இப்படிப் பாடக்கூடியவர்கள் இருக்கிருர்கள் ? அதிலும் எல்லோர் காதிலும் விழும்படியாக, உரக்க, ஒரு பொது இடத்தில் உட்கார்ந்து கொண்டு துணிச்சலாகப் பாடுவார்களா ? ஆகவே, நகரவாசிகளான அம்மூவரும் பாடினது சந்திரநாதனுக்கு தேவகானம் போலிருந்தது. ஆமாம்! தேவகானமேதான் ! எழில் மிகுந்த விமலாவே ஒரு அப்ஸரஸைப்போல்தானே அவனுக்கு காட்சி கொடுத்தாள்.

அதிக நேரம் அக்கானத்தைக் கேட்க முடியவில்லை நாதனுக்கு. கிராமத்து வெட்டியான் தன் மகனுக்குக் காய்ச்சல் அதிகமாக இருக்கிறது ஒரே பிதற்றலாகப் பிதற்றுகிருன் என்று வைத்தியரைத் தேடிக்கொண்டு வந்துவிட்டான். அதனுல் நாதன் அவனேடு போகவேண்டி வந்தது.

வைத்தியர் போனதும் “உன்னைப்போல வாயாடியாகத்தான் இருக்கிருர்'' என்ருள் விமலா.

“உங்களைப்போல அழகுள்ளவராகவும் இருக்கிருராக்கும். உங்கள் இரண்டு பேருக்கும் ஜோடி எப்படி இருக்கும் தெரியுமா? '' என்ருள் வெடுக்கென்று நிர்மலா.

“ஏய் ! நிர்மலா !'' என்று அதட்டினுள் விமலா.

“நான் பொய் சொல்கிறேனுக்கும். கமலாவை வேண்டுமானுல் கேட்டுப்பாருங்களேன். ஏன் ? உங்கள் கண் கட்டை அவிழ்த்ததும் நீங்களே பார்த்துக்கொள்ளுகிறீர்கள்.''

“அதிகப் பிரசங்கி! போதும்டி ! உன் வர்ணிப்பு ! '' என்ருள் மறுபடியும் விமலா.

இப்படிச்சொன்னபோது,அவள் நிர்மலாவை கடிந்துகொண்டதாக எண்ணக்கூடாது. சிறு பெண் அதிகப்பிரசங்கித்தனமாக பேசக்கூடாது என்றே அப்படி அதட்டினுள். நாதனின் குரலிலிருந்தே அவன் காளைப்பருவத்தினனுய் இருக்கவேண்டும் என ஊகித்துகொண்டாள். கல கலவென்ற அவன் அன்பான பேச்சும், வெண்கல மணியின் நாதம் போன்ற சிரிப்பும் அவளை மயக்கின. மருந்து போடும் போதும், அவன் பச்சிலைகள் வைத்து கட்டும் போதும், கரங்கள் அவளைத் தீண்டும்போது இன்ப வேதனை உண்டாயிற்று அவளுக்கு. இதற்கு முன் எவ்வளவோ டாக்டர்களிடம்-வாலிபர்களும்கூட அந்த டாக்டர்களில் சிலர்— மருந்து போட்டுக்கொண்டிருககிருள். சிகிச்சை செய்துகொண்டிருக்கிருள். அப்பொழுதெல்லாம் ஏற்படாத புதிய உணர்ச்சி இப்பொழுது அவள் உள்ளத்தில் ஏற்பட்டது மங்கை பருவத்தை அடைந்துவிட்டதால் உண்டான உணர்ச்சியோ இது? கடல் சந்திரனைக் கண்டால்தானே பொங்கி, ஆனந்தக்கூத்தாடுகிறது? விமலாவும் தன் வாழ்வில் பிரகாசிக்கப் போகும் ‘சந்திரனை' சந்தித்து விட்டதால் இத்தகைய இன்ப உணர்ச்சிக்கு ஆளானுல்போலும்! அநேக நாட்கள் இவ்வேதனைக்காகவே, மருந்துபோடும்வேளையை அவள், ஆவலோடு, நோக்கி சாதக பக்ஷியென இருந்திருக்கிருள் தெரியுமா? அவள் மனத்தில் ஆழ்ந்து கிடந்த ஆசையைத் தூண்டிவிட்டது இன்று, நிர்மலாவின் வர்ணனை.

* . * . * . * .

அன்றுதான்விமலாவிற்கு நன்ஞள். அவள் வாழ்விலேயே அதைவிட இன்பநாள் வருமோ வாராதோ! கண் கட்டுகளை அவிழ்க்கவேண்டிய தினம். பார்

மகாத்மாகாந்தியின் சிராத்த தினத்தன்று ராஜ்காட்டில் பிரார்த்தனை நடைபெற்றது. அப்போது இந்தியாவிலுள்ள அயல்நாட்டுத் தூதர்கள் அனைவரும் பிரசன்னமாயிருந்தனர்.

வையை அடைய அவள் பாக்யம் பண்ணியிருக்கிறளா, இல்லையா என்பதை தீர்மானிக்கும் நாள்.

கட்டுகள் நீக்கப்பட்டன. சந்திரநாதனும், எத்தனையோ கண்களுக்கு சிகிச்சை செய்திருக்கிறன். சிகிச்சை முடிந்து கட்டை நீக்கியதும், எவ்வளவோ கண்கள் பார்வையைப் பெற்றிருந்தும், பூ விழுந்தவைகளாகவோ, ஓரப் பார்வையாகவோ, இன்னும் எவ்வளவோ, தோஷங்கள் உள்ளதாய் இருநதிருக்கின்றன. விமலாவின் கண்களோ, அப்பொழுதே மலர்ந்த தாமரைப் புஷ்பம்போலிருந்தன! கொஞ்சின! மயக்கின! இல்லை. நாதன் உயிரை வைத்துக் கொல்லும் கூர்மையான வேல்களாயிருந்தன.

"நீங்கள் தெய்வம்தான். பதினைந்து வருஷங்களாக நீங்காத என் பழியை போக்கினீர்கள். என்னல் இதற்கு என்ன ஈடு செய்யமுடியும்?" என்று நன்றி கலந்த குரலில் நா தழு தழுக்க கூறினன் விமலாவின் தமையன் சந்துரு.

"ஒரு பிரதியுபகாரத்தையும் எதிர்பார்த்து நான் வைத்தியம் செய்யவில்லை. எல்லாம் ஆண்டவன் செயல். எங்கோ இருந்து என்னைத் தேடி வந்த நீங்கள் ஏமாற்றத்தோடு திரும்பிச் செல்லாததே எனக்குப் பேரானந்தம். உங்கள் தங்கை என்றல் பார்வையைத் திரும்பிப் பெற்றதற்காக எனக்குச் சந்தோஷம்" என்றன் சந்திரநாதன்.

"எட்டாக்கனியாக நீங்கள் இங்கே இருக்கக்கூடாது. எவ்வளவோ, ஏழை, எளியவர்கள் இங்கு வரமுடியாமல் தவிக்கிறர்கள். பணமுள்ளவர்களும் அநேக காரணங்களால் இங்கு வர சௌகரியப்படுவதில்லை. என் தந்தை ஏதோ சொற்ப திரவியம் வைத்துவிட்டுப் போயிருக்கிறர். பட்டணத்தில் எங்களுடன் வந்திருந்து கண் வைத்தியத்தை நடத்துங்கள். என் சகோதரியின் கண்களைக் கொடுத்த நீங்கள் வாழ்வையும் கொடுக்க வேண்டும்." என்று வினயமாகவேண்டிக் கொண்டான் விமலாவின்மனதை நன்கு தெரிந்துகொண்டிருந்த சந்துரு.

அவளைப் பிரிந்த பின்னர் தன்னல் ஒன்றும் செய்யமுடியாது என சந்திரநாதன் தீர்மானித்து விட்டான். தான் வைத்தியத் தொழிலை மேற்கொண்டது விமலாவின் கண்களுக்கு சிகிச்சை செய்யத்தான்போலும் என எண்ணினன். ஆகவே அது முடிந்ததும் அவனுக்கு வைத்தியத் தொழில் சப்பென்று தோன்றியது. தன் வாழ்க்கைப் பாதை இனி இருண்டுவிடும் என்று சந்திரநாதன் எண்ணிக் கொண்டு மனதில் சந்துஷ்டியின்றி இருந்தபோது விமலாவும் சந்துருவும் சொன்னது இருள் சூழ்ந்த பாதையில் வழி காட்டவே உதயமான சந்திரன்போலத் தோன்றியது.

தனக்காக, அல்லும், பகலும் பாடுபட்டு தன் நலத்தையே அவனுடையதாக எண்ணின சந்துருவின் பெயராலேயே 'கண்' "வைத்தியசாலை"யை நிர்மாணித்தாள் விமலா. ஏழை எளியவன், பணக்காரன் என்ற வித்தியாசமில்லாமல் சிகிச்சை செய்தார்கள். கண்ணை பெற்றேர், விமலாவையும், நாதனையும் தெய்வமாகக் கொண்டாடினர்கள். விமலா பள்ளியை விட்டு விட்டு, கணவனுக்கு சித்தாள்போல உதவி செய்தாள் வைத்தியத்தில். "வைத்திய ரத்தினம்" என்ற பட்டமும் அவனைத் தேடி வந்தது.

(தொடரும்)

கனவும் நினைவும்

—ப. ராதாகிருஷ்ணன்—

'டிக் டிக்' கென்ற சப்தத்துடன் ஓடிக்கொண்டிருந்தது சுவரில் மாட்டியிருந்த அந்தப் பழைய கடிகாரம் மெதுவாகப் பன்னிரண்டை நெருங்கி வந்துகொண்டிருந்தது சிறிய முள் அதை முந்த விட மனமில்லாமல் பின்னால் வெகு வேகமாக ஓடி வந்துகொண்டிருந்தது பெரிய முள் அம்மி போன்ற தடித்த புஸ்தகங்களைத் தன்முன்னால் கிடந்த மேஜையில் பரப்பிக்கொண்டு கணக்கெழுதிக் கொண்டிருந்த ராமசாமி பேனாவைக் கீழே வைத்துவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான் ஒரு தடவை சோம்பல் முறித்து விட்டுக் கைவிரல்களைச் சொடுக்குப் போட்டுக்கொண்டான். சொடுக்குப் போடுவதென்றால் என்ன மாதிரிச் சொடுக்கு! சாதாரணமாக ராமசாமி சொடுக்குப் போட்டால், அது குறைந்த பட்சம் சீனவெடி வெடிக்கும் சப்தத்தையாவது ஒத்திருக்கும். இப்போது அதன் சப்தம் இன்னும் ஒரு படி மேலேயே போய் ஆரம்பப் பள்ளிக்கூட வாத்தியார் பையன் முதுகைப் பதம் பார்க்கும் சப்தத்தை நினைவூட்டியது!

ராமசாமியின் கைவிரல்கள் மசியில் பேனாவைத் தோய்த்து எவ்வளவு நேரமாய் எழுதிக் கொண்டிருந்திருக்க வேண்டும்—நிமிஷத்திற்கு நிமிஷம் எவ்வளவுகளைப்பு அவற்றில் ஏறிச் சேர்ந்திருக்கவேண்டுமென்பதை இந்தப் பிரம்மாண்டமான சொடுக்கின் சப்தமே நிரூபிக்கிறதல்லவா? அதுமட்டுமா? ராமசாமியின் கழுத்து ஒருபுறம் முதுகு ஒருபுறம்—அவன் குனிந்து நிமிர முடியாமல் வலியெடுத்தன. கண்களில் தூக்கம் சொக்கிய துமட்டுமல்ல—மிளகாய் பொடி தூவின மாதிரி எரிந்துகொண்டிருந்தன அக்கண்கள் "மணி பன்னிரண்டாகப் போகிறது" என்று தன் வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டான் அவன்

'பன்னிரண்டு மணியென்றால் பகல் பன்னிரண்டு மணியல்ல அர்த்த ராத்திரி பன்னிரண்டு மணி. அதிகாலையிலிருந்து இப்படியே எழுதிக் கொண்டுதானிருக்கிறான் ராமசாமி. அதிலும் இது இன்றைய நேற்றையப் பாடல்ல அவனுக்கு. அவன் கருப்பண்ணக் கவுண்டனிடம் வேலைக்கமர்ந்து ஏழு வருடங்களாகின்றன கருப்பண்ணக் கவுண்டர் பேரில் கறுப்பு மார்க்கட்டின் தயவு விழுந்து ஆறு வருடங்களாகின்றன இந்த ஆறு வருடங்களாகத்தான் ராமசாமிக்கு வலியவரும் நித்திராதேவியைக் காலால் உதைத்துத் தள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

அவன் செய்துவந்தது கவுண்டரின் அந்தரங்க வேலை. அதுபோன்ற வேலைக்கு மிகுந்த கற்பனாசக்தியும் தேவை. முப்பதை மூன்றாக்குவதற்கும் வாங்கினதைக் கொடுத்ததாகக் காட்டுவதற்கும் கற்பனாசக்தியில்லாவிட்டால் முடியுமா என்ன? எப்போதோ ராமசாமியை வேலையை விட்டு விரட்டியிருக்கவேண்டிய கவுண்டர் அவனிடம் அந்தக் கற்பனா சக்தியிருப்பதைத் தெரிந்துகொண்டுதான் அவனைத் தம்மிடமே அமர்த்திக்கொண்டுவிட்டார் அவரது கொள்ளை லாபக் கணக்குப் புத்தகங்களைப் பார்த்து அதிலிருந்து கொஞ்சம் கண், மூக்கு வைத்து ஒரு கள்ளக் கணக்குப் புத்தகம் தயார் செய்ய வேண்டியது அவன் வேலை. எதிர்பாராதபடி சர்க்கார் தம் கணக்குகளைச் சோதனை செய்ய வந்தால் என்ன செய்வது என்ற பயம் மாத்திரமல்ல—வருமான வரிப் பணத்தை அமுக்கிக்கொள்ளும் சௌகரியமும் இருந்தபடியால்தன் ராமசாமிக்கு மாதம் முப்பது ரூபாய்க் காசை வீசி எறிய வேண்டிய சிரமத்தைக் கவுண்டர் பொருட்படுத்தவில்லை

அவன் கணக்குப்புத்தகங்களில் எழுதிவைக்கும் பொருத்தமான பொய்களை—தினுசு தினுசான பொய்களைப் பார்த்து கவுண்டர் அகமகிழ்வார். "ஆஹா! ராமசாமி உன்னைப் போல் உண்டா?" என்று அவன் முதுகில் தட்டிக்கொடுப்பார் கவுண்டரின் இரும்புக் கைகள் முதுகில் பட்டதும் வலி பொறுக்கமுடியாமல் ராமசாமி துள்ளிக் குதிப்பான். கவுண்டரோ அதை வேறு விதமாக எண்ணிக்கொண்டு விடுவரோ என்னமோ! சந்தோஷம் பொறுக்க முடியாமல்தான் அவன் துள்ளிக் குதிக்கிறானென்றே அவர் எண்ணியிருக்கவேண்டும். காசு செலவில்லாமல் அவனைச் சந்தோஷப்படுத்துவதற்கு வழியை அறிந்துகொண்ட அவர் கடைசிவரை அதே முறையைக் கையாண்டு வந்தாரேயன்றி, அவனது முப்பது ரூபாய் சம்பளத்திற்கு ஒரு காலணா அதிகமாக இதுவரை கொடுக்க எண்ணியதில்லை. ராமசாமியின் மனதில் அதிருப்தி குடிகொள்ளத் தொடங்கியது. இந்தச் சமயத்தில்தான் 'நியாயம்—அநியாயம்' என்ற உணர்ச்சி வேறு அவன் மண்டைக்குள் வந்து புகுந்து கொண்டது. 'கறுப்பு மார்க்கெட்டில் ஏழைகளைக் கொள்ளையடித்துப் பணம் சேர்க்கும் இந்தக் கவுண்டருக்குத் தான் கையாளாக இருப்பது எத்துணைப் பெரும் பாவம்!' என்று சிந்தித்தான் அவன்

நித்திராதேவியை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த அவன் கண்கள் தற்செயலாய்ச் சுவரில் மாட்டப்பட்டிருந்த கவுண்டரவர்களின் திருவுருவப்படத்தின் மீது பார்வையைச் செலுத்தின பெரிதாக்கப்பட்டு 'பிரேம்' செய்யப்பட்ட போட்டோ அது சுருட்டை மயிருடனும் முறுக்கிவிட்ட மீசையுடனும் ஸாக்ஷாத்கவுண்டரே காட்சியளிப்பது போன்றிருந்தது. அதை ராமசாமி தினந்தினம் தான் பார்த்துக் கொண்டு வருகிறான் ஆனால் இன்று அதைப் பார்த்ததும் அவன் மனதில் என்றுமில்லாத ஆக்ரோஷம் உண்டாகிவிட்டது. பலலை 'நெற நெற' வென்று கடித்தவண்ணம் அந்தப் படத்தை முறைத்துப் பார்த்தான் அவன் அவனது கண்களில் தூக்கக் கலக்கம் மறைந்து நெருப்புப் பொறி பறந்தது.

தன் சம்பளத்தை உயர்த்த முடியுமா முடியாதா என்று கவுண்

டரை மறுநாளே கட்டாயமாய்க் கேட்டு விடுவதென்று ராமசாமி தீர்மானம் செய்துகொண்டான். பொது ஜன விரோதமான, கொடிய பாவமான ஒரு காரியத்தை (அவ்வளவு குறைந்த சம்பளத்தினிமித்தம்) தான் செய்து வருவது அவன் மனச்சாக்ஷிக்கு ஒத்துக்கொள்ளவில்லை. கோரிக்கைக்குக் கவுண்டர் இணங்காவிட்டால்......நல்லது அவருக்கும் தனக்கும் சம்பந்தம் வேண்டாம்—அவரது பாவத்தில் அவனுக்கும் பங்கும் வேண்டாம், அவ்வளவுதானே! விஷயம் எவ்வளவு சுளுவாய்ப் போய்விட்டது!

இந்தச் சமயத்தில்தான் ராமசாமிக்குத் தன்னிடமுள்ள ஒரு பலவீனம் நினைவிற்கு வந்தது தனிமையில் அவன் என்னதான் வைராக்யத்துடன் தீர்மானம் செய்துகொள்வதாயிருந்தாலும் கவுண்டரை நேரில் கண்டதும் அவன் தைரியமெல்லாம் பஞ்சாய்ப் பறந்து விடுகிறதே ஏன்?.........ஆனால் இந்தத் தடவை......எதற்கும் தான் கவுண்டரிடம் என்னென்ன பேச வேண்டும் எப்படி எப்படிப் பேசவேண்டுமென்பதை ஒரு முறை ஒத்திகை செய்து பார்த்துக் கொள்வது நலமல்லவா? அதற்கு இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் ஏது? இப்போதுதான் அவன் ஆபீஸில் தனியாயிருக்கிறான் கவுண்டர் வீட்டில் தூங்கிக்கொண்டிருப்பார் ஆனால் அவரது படம் தத்ரூபமாய் எதிரே தொங்குகிறது. அதை வைத்துகொண்டே இபபோது ஒத்திகையை முடித்துக் கொண்டால் நாளைக்கு நிஜமாகவே கவுண்டரின் எதிரில் நின்று 'சவால்' போடுவதற்குச் சௌகரியமாயிருக்குமல்லவா?

பூர்வ பீடிகையாகத் தொண்டையை ஒரு முறை கனைத்து கொண்டு முகத்தைக் கடு கடு'வென்று வைத்துக் கொண்டான் ராமசாமி 'டாண் டாண்' என்றுமணி பன்னிரண்டடித்தது கவுண்டரின் அந்தப் பழைய கடிகாரம். ஒத்திகை தொடங்க நல்ல சகுனமாகிறதென்று மனதில் எண்ணிக்கொண்ட ராமசாமி, படத்தை நோக்கி, "முதலாளி நான் இந்த 'பிஸினெஸ்' ஸையே விட்டுப் போய் விடலாமென்று யோசிக்கிறேன்." என்றான்.

அந்த நிமிஷத்தில் ராமசாமியின் ஸ்தானத்தில் நீங்களாவது, நானாவது இருந்திருந்தால் அப்படியே நடுங்கி வெலவெலத்துப் போயிருப்போம் ஆனால் ராமசாமியோ கேவலம் இந்த ஒத்திகையிலேயே அபாரமான தைரியத்தைக் காட்டினான் சுவரில் அசையாது தொங்கிக்கொண்டிருந்த அந்தப்படம் மெல்ல அளவில் பெருகத் தொடங்கியது கிட்டத்தட்டக் கவுண்டரவர்களின் நிஜ அளவுக்கு வந்தபின் அதில் காணப்பட்ட முகம் ராமசாமியை நோக்கி ஒரு புன்முறுவல் செய்தது மறு கணம் அப் புன்சிரிப்பு மலர்ந்த சிரிப்பாகவும் மாறியது என்ன ஆச்சர்யம்! அச்சிரிப்பில் கவுண்டரது வாயிலுள்ள நான்குமுன் வரிசைப் பற்கள்—அவ்வளவும் நிஜத் தங்கப்பற்கள்—அவைகூட அப்படியே காணப்பட்டன!

இவ்வளவு தூரம் அவனைக் கடாக்ஷித்த அவ்வுருவம் தன் வாயைத் திறந்து ஏதாவது பேசுமென்று ராமசாமி எதிர்பார்த்தது நியாயம் தானே? அவனை ஏமாற்றமடையச் செய்யாமல் பேசியது அவ்வுருவம்—இனி அதையும் கவுண்டர் என்றே அழைக்கலாம்.

"என்னப்பா ராமசாமி, ரொம்பப் பதட்டமாகச் சொல்கிறாயே உனக்கு இங்கே என்ன குறை?" என்று பரிவுடன் கவுண்டர் வினவினார்

ராமசாமியும் சுடச் சுடப் பதில் கொடுத்தான் "முதலாளி பின் பதட்டப்படாமல் என்ன செய்வது? போன ஏழு வருஷங்களாய் நானும் பார்த்து வருகிறேன் என் உண்மையான வேலையையும் விசுவாசத்தையும் மெச்சி நீங்கள் எனக்கு எவ்வித மான நன்மையும் செய்யவில்லை. அன்று வாங்கின முப்பது ரூபாய்ச் சம்பளத்தைத்தான் இன்றும் வாங்கிக்கொண்டிருக்கிறேன் இது உங்களுக்குத் தெரியாதா?"

"..................இன்னது செய்கிறோம் என்று தெரியாமலே..............."

"என்ன தம்பி! உலகத்திலே இந்தப் பணம் ஒன்றுதானா பிரதானம்? நான் உன்னிடம் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேன், எனக்குத்தான் பெண்டு பிள்ளைகள் யாரும் கிடையாதென்று உனக்குத் தெரியுமே உன்னை என் மகன்போல் நினைத்திருக்கிறேன் நான். நீ என்னடா வென்றால்......"

"முதலாளி, என்னிடம் இந்தப் பசப்பு வார்த்தைகளெல்லாம் வேண்டாம். உங்கள் அன்பை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். நான் சாப்பிடும் அரை வயிற்றுச் சாப்பாடு நீங்கள் கொடுக்கும் முப்பது ரூபாயில், மீதி வயிற்றை நிரப புவது உங்கள் அன்பல்ல. இனியும் என்றால் அரைப் பட்டினி, கால்

பட்டினி கிடக்க முடியாது நான் கல்யாணம் வேறு செய்து கொள்ள வேண்டும் இன்னும்... என்ன சிரிக்கிறீர்கள்? ஆமாம். என் சம்பாத்யம் தற்சமயம் எனக்கே போதாதது தான் ஆனால் ஆசை யாரை விட்டது? பிச்சைக் காரர்கள் கூடத் தம்பதிகளாகத்தானே திரிகிறார்கள்? நான் மாத்திரம் ஏன் கல்யாணம் செய்து கொள்ள யோக்யதையற்றவனாக வேண்டும்?'' என்று கம்பீரமாகக் கேட்டான் ராமசாமி



"............ என் பாவம் என்னோடு போகட்டும்............"

"ராமசாமி என்னைக் கேட்டால் நமக்குக் கல்யாணமே தேவையில்லை என்றுதான் சொல்லுவேன் என்னைப் பார். நான் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறேனா? ஏன் இல்லை? இந்த வாழ்வே அநித்தியம் எப்பொழுது நாம் இந்த பிளாக் மார்க்கட் தொழிலில் இறங்கிவிட்டோமோ அப்போதிலிருந்து நமது சுதந்திரமும் அநித்தியம் என்றாவது ஒரு நாள் நம் அரசாங்கத்தார் விழித்துக் கொள்ளத்தான் போகிறார்கள். உன் கையிலும், என் கையிலும் விலங்கு ஏறாது என்று எப்படி நாம் உறுதியாக நம்ப முடியும்? அப்போது நாம் ஜெயிலுக்குப் போவதல்லாமல் நம் பெண்டு பிள்ளைகள் வேறு என்னத்திற்குக் கஷ்டப்பட வேண்டும்? இதையெல்லாம் நீ யோசனை செய்து பார்த்தாயா?........."

என்று கவுண்டர் முடிப்பதற்குள்ளேயே "அட பாவி!" என்று அலறினான் ராமசாமி. கவுண்டர் கைதியாவாரானால். கூடவே தானும் ஜெயிலுக்குப் போக நேரும் என்ற எண்ணமே அதுவரை அவன் மனதில் தோன்றியிருக்கவில்லை இப்போது கவுண்டர் வாயிலிருந்தே அந்த வார்த்தை வந்ததும் அவன் குலை நடுங்கியது. அத்துடன் குரோதமும் அதிகரித்தது. மறுபடி அவன் கவுண்டரிடம் பேசும்போது அவன் தன்வசமிழந்துவிட்டான்.

"என்ன அநியாயம்! நீ கொள்ளை லாபம் அடித்து ஊதிப் பருப்பதற்காக நான் ஜெயிலுக்குப் போக வேண்டுமா? உனக்காக இவ்வளவு ஆபத்தான சட்ட விரோதமான வேலைகளை இவ்வளவு காலமாகச் செய்து வந்ததற்கா நீ எனக்கு அரை வயிற்றுச் சாப்பாடு போட்டு வந்தாய்? இதோ இந்த நிமிஷமே இந்தப்பாழும் உத்தியோகத்தை உதறித் தள்ளிவிடடு.........'' என்று கிளம்பினான் ராமசாமி.

"இந்தா ராமசாமி! நான் சொல்வதைக் கேள். உன்னைவிட இந்த வேலைக்குத் தகுதியான ஆள் எனக்குக் கிடைக்க மாட்டான் உனக்கு எவ்வளவு சம்பளம் வேண்டுமோ கேள், நான் தருகிறேன். ஆனால் நீ போகாதே..............'' என்றார் கவுண்டர்.

"வேண்டாம். எனக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் தந்தால்கூட நான் தயாரில்லை. என்னால் ஜெயிலுக்குப் போக முடியாது.'' என்று ராமசாமி கத்தினான்.

"கடைசியாக ஒரு வார்த்தை...... உன் நன்மைக்காகச் சொல்கிறேன் மரியாதையாக நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டு இங்கேயே இருந்துவிடு. இல்லாவிடில் நீ என்னைக் காட்டிக் கொடுப்பதற்குமுன்பே. ஏன், நீ உன் வீடுபோய்ச் சேருவதற்குமுன்பே உன் கையில் காப்பு மாட்டவைப்பதற்கு எனக்குத் தெரியும், என்ன சொல்கிறாய்?' என்று மிரட்டினார் கவுண்டர். ராமசாமிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

"அடே! அப்படி என்ன செய்துவிடுவாயாம்?'' என்று பதிலுக்கு ராமசாமி அதட்டினான்

"நீ என்னிடமிருந்து பணத்தைக் கையாடிக் கொண்டு போகிறாயென்று நான் போலீஸுக்கு ஒரு வார்த்தை சொன்னால் போதாதா? நீ என்னதான் மன்றாடினாலும் உன் சொல் அம்பலம் ஏறுமா?'' என்று கம்பீரமாகக் கேட்டுவிட்டுக் கவுண்டர் ஒரு ஏளனச் சிரிப்புச் சிரித்தார்.

இதைக் கேட்டதும் ராமசாமியின் கோபம் உச்சியையெட்டியது. இன்னது செய்கிறோம் என்று தெரியாமலே மேஜையில் வைத்திருந்த இரும்பு ரூலரைக் கையிலெடுத்தான். "ஹூம். அப்படியா?'' என்ற உறுமல் அவன் வாயிலிருந்து கிளம்பியது. அதே கணத்தில் அந்த ரூலர் தடியும் கிளம்பியது. அவனது உறுமல் என்னமோ காற்றில் கலந்துபோய்விட்டது ஆனால் அவன் வீசிய ஆயுதம்மட்டும் குறி தவறாமல் சென்று கவுண்டர் மீது பாய்ந்தது.

அவ்வளவுதான் 'டபார்' என்ற ஒரு சப்தம் கவுண்டர் தூள் தூளாகச் சிதறினார்! ராமசாமியும் சுயப்பிரக்ஞை வரப்பெற்றான் தான் கண்டது கனவா என்று யோசனை செய்தான் அவன் அது கனவென்றும் நம்பமுடியவில்லை. படத்தினுள்ளிருந்து கவுண்டர் தன்னுடன் பேசியது அப்போது அவனுக்கு அற்புதமாகப்படவில்லை. அது படம் என்று தெரிந்திருந்தால் அப்படி ரூலரை எறிந்து அதை உடைத்திருப்பானா? வீண் தண்டம்தானே அது?

சரி. அது கனவோ நனவோ எப்படியாவது இருந்துவிட்டுப்போகிறது. ஆனால் இப்போது உடைந்து கிடக்கும் படத்தைப்பற்றிக் காலையில் கவுண்டருக்கு என்ன பதில் சொல்லுவது? சரி கையிலிருந்தாவது காசை அழுது அதை. மீண்டும் 'பிரேம்' செய்துகொண்டுவந்து ஒழுங்காக அதன் இடத்தில் மாட்டிவிட வேண்டியதுதான் அதையும் இப்போதே செய்தால்தான் உண்டு.

அதிகாலையில் கவுண்டர் ஆபீஸிற்கு வந்து விடுவார்.

ராமசாமி கடிதாரத்தைப் பார்த்தான் மணி 12-15. அவனது ஒத்திகை சரியாக பன்னிரண்டு மணிக்குத் தொடங்கி 12-15க்கு மங்களகரமான முடிவைப் பெற்றிருந்தது ஆனால் இந்த நள்ளிரவில் எந்தக் கண்ணாடிக் கடைக்காரன் கடையைத் திறந்து வைத்துக் கொண்டு ராமசாமிக்குப் பிரேம் போட்டுத் தருவதற்காகக் காத்துக் கொண்டிருக்கப் போகிறான்? அவன் மனம் தளர்ந்தது.

தன் அவசரபுத்திக்காக நொந்து கொண்டு தலையில் ஓங்கி நாலடிவைத்துக்கொண்டபின் கீழே குனிந்து கண்ணாடிச் சில்களைப் பொறுக்கத் தொடங்கினான். அவன் அவ்வேலையில் ஈடுபட்டிருக்கும்போதுதான் ஆபீஸின் கதவு திறந்து, யாரோ ஓடிவரும் சப்தம் கேட்டது. பொறுக்கிய கண்ணாடித் துண்டுகளை மறைத்து வைத்துவிட்டு நிமிர்ந்தான். ஓடி வந்தது கவுண்டரின் வேலையாள் கண்ணப்பன் நல்லவேளையாக அவனும் ராமசாமி செய்திருந்த காரியத்தைக் கவனிக்கவில்லை.

'ராமசாமிகவுண்டர் சாகக் கிடக்கிறார், உன்னைப் பார்க்கவேண்டும் என்று சொன்னார் உடனே கிளம்பு'' என்றான் கண்ணப்பன். ராமசாமிக்கு ஒன்றும் புரியவில்லை

''என்னப்பா இது? இன்று சாயங்காலம்வரை நன்றாகத்தானிருந்தார் முதலாளி, அதற்குள் என்ன ஆய்விட்டது?'' என்று ராமசாமி கேட்டான்.

''அட! பெரிய மனுஷங்க ரோகத்தை யெல்லாம் பத்தி நம்பளுக்கென்னப்பா தெரியும்? அதெல்லாம் வரும் போகும். ஆனா இன்னிக்கு என்னமோ கவுண்டர் கிடக்கிற கிடையைப் பாத்தா எனக்கே கவலையாத்தானிருக்கு ராத்திரி படுக்கும்போது மார்வலின்னாரு டாக்டருங்கள்ளாம் வந்து பார்த்தாங்க பன்னிரண்டு மணி வரையிலே ரொம்ப அவஸ்தைப்பட்டுக்கிட்டிருந்தாரு. சரியாய் பன்னிரண்டு மணியிலேயிருந்து ஏதேதோ பிதற்றத் தொடங்கிட்டாரு பிரக்ஞையில்லாமே...'' என்று சொல்லிக் கொண்டே வந்தான் கண்ணப்பன்

''என்னப்பா பிதற்றினார்? உனக்கு ஏதாவது புரிந்ததா?'' என்று ஆவலுடன் ராமசாமி கேட்டான்.

''என்னென்னவோ தெரியாது. பிதற்றினாரு. எங்களில் ஒருத்தருக்கும் புரியலை. டாக்டருங்களுக்குக்கூடப் புரியலை. ஆனா, அடிக்கடி ''ராமசாமி, ராமசாமி''ன்னு ஏதோ சொல்றதுமட்டும் தெரிஞ்சுது நாங்க நினைச்சபடியே பிரக்ஞைவந்ததும் ராமசாமியைப் போய்க் கூட்டிக்கிட்டு வாடான்னு சொன்னாரு. அதோடு உயிலெழுத வக்கீலுக்குக்கூட ஆள் போயிருக்கு. தான் பொளைக்கிறதிலே கவுண்டரையாவுக்கே நம்பிக்கையில்லைபோலத் தோணுது .. இருக்கட்டுமப்பா. நாளியாகுது. நீ கிளம்பு என்று துரிதப்படுத்தினான் கண்ணப்பன்.

கவுண்டர் வீட்டை நோக்கி விரைந்து நடக்கும்போது ராமசாமியின் மனம் பலவிதமாய் எண்ணமிட்டது. சற்று முன் நடந்த அந்த ஒத்திகைக்கும் கவுண்டர் வீட்டில் நடந்துவரும் அச்சம்பவங்களுக்கும் இவ்வளவு நெருங்கிய ஒற்றுமை எப்படி இருந்திருக்கமுடியும்? சாதாரணப் பார்வைக்கு இதெல்லாம் அமானுஷ்யமாகவல்லவா தோன்றுகிறது?

கவுண்டரது படுக்கையைச்சுற்ற டாக்டர்களும். வக்கீல்களும் அமர்ந்திருந்தனர் அந்த வேலை முடியட்டும் என்று சில நிமிஷங்கள் காத்திருந்தான். அவர்களை சற்று வெளியே போகச் சொல்லிவிட்டு ராமசாமியைத் தன்னருகில் அழைத்து உட்காரச் செய்தார். கவுண்டர் அவர் என்ன சொல்லப்போகிறாரோ என்று நடுங்கிக்கொண்டு ராமசாமி உட்கார்ந்தான் மெல்லிய குரலில் நிறுத்தி நிறுத்தி சொல்லத் தொடங்கினார் கவுண்டர்

'அபபா ராமசாமி, நான் இந்தக் கறுப்பு மார்க்கெட்டில் இறங்கினது முதல் எவ்வளவோ பாவங்கள் செய்திருக்கிறேன் என்று உனக்குத்தெரிந்ததுதான் ஆனால் அவை எல்லாவற்றிலும் மிகக் கொடியது உனக்கு நான் செய்துவந்த அநியாயமே என்று என் மரணத் தருவாயில் எனக்குத் தோன்றுகிறது. எனக்காக நீ அல்லும் பகலும் உழைத்திருக்கிறாய்—என் பாவங்களிலெல்லாம் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறாய். என்னதான் கஷ்டப்பட்டபோதிலும் வாய்திறவாமல் பொறுமையுடன்—அரைவயிறு. கால் வயிறு சாப்பிட்டுக்கொண்டாவது வேலை செய்து வந்த உனக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்?

''சற்று முன்பு வரையில் என் மனச்சாக்ஷிக்கும் எனக்கும் பெரும் போராட்டம் நிகழ்ந்துகொண்டிருந்தது உன்னுடன் பேசுவதாகக் கனவுகூடக் கண்டேன். கனவிலும் என் கல் நெஞ்சம் என்னை விட்டு அகலவில்லை. உன்னுடன் கடுமையாக நடந்து கொண்டதாகவே என் நினைவு சொல்லுகிறது.

''கனவிலிருந்து விழித்ததும் என் நிலைமை ஞாபகம் வந்தது என் உயிர் உடலில் ஊசலாடிக்கொண்டிருக்கிறது எனக்கோ பெண்டாட்டி பிள்ளைகள் இல்லை—நீ செய்திருக்கும் சேவைக்குப் பிரதியாக என் சொத்துக்களை உனக்கு அளித்துச் செல்கிறேன். அப்படிக்கு உயிலும் எழுதச் செய்தாயிற்று. இனி நீதான் எனக்கு வார்சு.

'ஆனால் ஒன்று. நான் சம்பாதித்த—அல்ல — ஏழைகளிடமிருந்து சுரண்டிய பணமெல்லாம் நான் சாகும்போது எனக்கு மனச் சாந்தியை அளிக்கவில்லை உன் விஷயத்திலும் அபபடி நேராமல் பார்த்துக் கொள்ளுவது உன் பொறுப்பு. என்னைப் பின்பற்றாமல் நியாயமான வழியில் பணத்தைப் பெருக்க முயற்சி செய். என் பாவம் என்னோடு போகட்டும்,'' என்று கூறிவிட்டுக் கண்ணை மூடினார் கவுண்டர்.

இப்போது கவுண்டரின் ஸ்தானத்தை ராமசாமி வகித்து வருகிறான் தானும் 'கொள்ளை லாப' வழியில் ஏன் இறங்கக்கூடாது என்ற எண்ணம் எப்போதாவது அவன் மனதில் உதித்தால், அவன் எதிரே சுவரில் தொங்கும் தங்க பிரேம் போட்ட படத்திலிருந்த கவுண்டரே அவனை, ''நான் சாகும்போது சொன்னது ஞாபகமிருக்கட்டும்.'' என்று எச்சரித்து வருகிறார்.

நாமொன்று நினைக்க-----!

ய. மகாலிங்க சாஸ்திரி, எம்.ஏ.பிஎல்.

அன்று சிவராமன் வீட்டிற்கு வரும்போது பிற்பகல் துவக்கமாகி விட்டது. மாரியேஜ் ரிஜிஸ்டிரார் ஆபீஸில் தன் ஜோலியை முடித்துக்கொண்டு அவர் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் என்ன நடக்கிறதுஎன்று எட்டிப் பார்த்தார். ராமனுதன் தன் வக்கீல், வக்கீல் குமாஸ்தா முதலியவருடன் ஒரு பக்கமும், போலீஸ் வசத்தில் கதிர்வேல் ஆசாரியும், அழகிரியும், அவருடைய அனுதாபிகளான பொன்னுசாமி பிள்ளை முதலியவர்கள் மற்றொரு பக்கமும் கோர்ட்டில் காத்துக்கிடப்பதை அவர் கண்டார். அழகிரி கண்களில் பட அவருக்குச் சங்கடமாயிருந்ததால் ராமனுதனை ஜாடையாக வெளியே வரவழைத்து இரண்டொரு வார்த்தை பேசிவிட்டு அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டார் எதிர்பார்த்தபடி அழகிரி ஜாமினில் விடுதலையடையப் பிரயத்தனப்படுவதாயும், ராஜிப் பிரஸ்தாபங்கள் நடப்பதாயும். பொன்னுசாமி பிள்ளை ஒரு கௌரவமான முடிவுக்கு உடனே வரத் தன்னுல் இயன்றமட்டும் பாடுபடுவதாயும் ராமனுதனிடமிருந்து சிவராமன் அறிந்துகொண்டார்.

சிவராமன் சுமார் இரண்டு மணிக்கு போஜனம் செய்துவிட்டு கோபிநாத்துடன் மாடியில் சற்று பேசிக்கொண்டிருந்துவிட்டு அயர்ந்து நித்திரைபோனுர்.

தூக்கம் மனுஷ்யனுடைய மனோநிலைமைக்கும் தேகஸ்திதிக்கும் ஒரு அறிகுறியாகும். மனதில் வியாகூலமிருந்தால் தூக்கம் வராது. சரீரத்தில் வியாதியிருந்தாலும் தூக்கத்திற்கு பங்கம் ஏற்படும். உடம்பு ஸ்திதியை விசாரிக்கும் வைத்தியர் பல கேள்விகளின் நடுவே "தூக்கம் எப்படி" என்று கேட்கிருர். மனதிலிருந்து ஒரு கவலை நீங்கினுல் உடனே நல்ல தூக்கம்வரும். "நான் அன்றையக் கொள்முதலை விற்றுக் காசாக்கிய வியாபாரியைப் போல் சுகமாய்த் தூங்கப் போகிறேன்" என்று மிருச்ச கடிகத்தில் விதூஷகன் சொல்லுகிருன். சிவராமனது அன்றைய தூக்கம் பகல் தூக்கமானுலும் நிம்மதியும் ஆச்வாசமும் நிறைந்த அற்புதமான சுவையுள்ள ஆனந்தத்தூக்கம் என்பதில் சந்தேகமில்லை. உஷாவைப் பற்றிய வரையில் காரியங்கள் கைகூடும் கட்டத்திற்கு விரைந்து வந்துகொண்டிருந்தன. அந்தப் பொறுப்புகள் எல்லாவற்றையும் அத்திம்பேரே மேற்கொண்டது ஆச்சரியம். தன்னை மடக்க நினைத்த எதிரி இபபோது தான் கோரிய நிபந்தனைகளை நிறைவேற்றவும், சரணுகதியடையவும் சித்தமாயிருக்கிருன். உஷா மீட்கப்பட்டாள். ராமநாதன் அவளை மணக்க அவன் தகப்பனுரிடமிருந்து யாதொருஆக்ஷேபணையும் எழவில்லை. அதுமட்டுமல்லாமல் ஸ்ரீ வேங்கிட சுப்பையர் ராமநாதனை தாராள சித்தத்துடன் நல்ல ஐஸ்வரிய புஷ்டியுள்ள நிலமையிலேயே விலக்கிவிடப் போவதால்தான் உஷாவுக்கு இவ்வளவுதான் கொடுத்தாகவேண்டுமென்று யாரும் வற்புறுத்தப் போவதில்லை. அழகிரி கொடுக்க வாக்குதத்தம் செய்ததைக் கைவிலங்கு தெறிக்கவேண்டுமானுல் அவன் உடனே கொடுத்தாகவேண்டும். செல்லத்தின் கல்யாணமா—.? அதையும்தான் அத்திம்பேரே தான் பொறுப்பாக நினைத்து ஏதோ பிளான் போட்டுக் கொண்டிருக்கிருரே ?

சிவராமன் நிச்சிந்தையாய்த் தூங்கினுர்.

கீழே கோமதியும் காந்திமதியும் செல்லத்தின் ரூமில் உஷாவுடன் சல்லாபித்துக் கொண்டிருந்தார்கள். உஷா தன் தாத்தாவுடனும் பெரியம்மாவுடனும் ஒரு வருஷமாய் வசித்து வந்ததில் தன் அனுபவங்களை வருணித்துக்கொண்டிருந்தாள். தனக்கு அக்குடும்பத்தில் ஒருபடி குறைச்சலான ஸ்தானம் அளிக்கப்பட்டதையும், பத்மா தன்னிடம் தந்திரமாய்ப் பழகி வந்ததையும், பெரியம்மா தன் தாயாரைப்பற்றி ஒவ்வொரு சமயம் இழிவாயும் குத்தலாயும் வாய்கூசாமல் பேசியது பற்றியும் கூறினுள். தன் பெரியம்மா, வருகிறவர்களுடன் பேசுவது, பழகுவது பற்றிச் சற்று ஹாஸ்யம் செய்தாள் உஷா. அவளுக்கு அபிநயக் கலைச்சொல்லிக் கொடுத்து வந்ததாகத் தோன்றவில்லை. அது சகஜமாகவே இருந்ததாகத் தோன்றிற்று. அவள் பேசும் மொழிகள் பத்தென்ருல் அவள் முகத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளக்கூடிய தாத்பரியம் நூறு உஷாவின் முத்துப்போன்ற, ஒன்றிரண்டாக உதிரும் அருமையான கொஞ்சும் குழந்தை மொழிகள் அவளுடைய அழகிய முகத்தில் ததும்பும் நவரஸ பாவங்களில் தோய்ந்து அமிர்தம்போல் இனித்தன. தன் பெரியம்மா பாக்கிய லக்ஷிமிக்கு உஷா ஒரு பெயர் கொடுத்திருந்தாள். அதைப்பற்றி அவள் சொல்லக் கேட்டு எல்லோரும் சிரித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது பங்களாவிற்குள் ஒரு கார் நுழைந்தது. அது வேங்கிட சுப்பைய்யர் கார் அல்ல. அவர் ஆபிஸிலிருந்து வர நேரமாகும் கார் சற்று அப்பாலே நிறுத்தப்பட்டது. "யாரோ புதிதாக வருபவர்போலிருக்கிறது"

அதிலிருந்து இறங்குபவர் யார் என்று கோமதி முதலியவர்கள் சற்று வியப்புடனும் ஊக்கத்துடனும் கவனித்தார்கள்

"பெரியம்மா!" என்ருள் உஷா.

"காட்டுப்பூனையா" என்ருள் செல்லம்

காந்திமதி கொல்லென்று சிரித்தாள். மறு நிமிஷம் எல்லோரும் விளையாட்டு குணத்தை விடுத்து முகத்தில் உபசாரக் குறியை வரவழைத்துக்கொண்டார்கள். பெரியம்மாவுடன்கூட ஒருவரும் வராதது கண்டு உஷாவும் ஒளியவில்லை.

பாக்யலக்ஷிமி கையில் பழங்கள் நிறைந்த வெள்ளித் தாம்பாளம் ஒன்றை வெகு நிதானத்துடன் தாங்கி எடுத்துக்கொண்டு வந்தாள். கார் டிரைவர் ஒரு ஸ்டீல் டிரங்குப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு பின்னே வந்தான்

இந்த அபூர்வ வரவு எதைக் குறிக்கிறதென்று ஒருவரும் நிர்ணயிக்க முடியவில்லை. ஏதாவது தன்னைக் கைப்பற்றக் கபட நாடகத்தின் ஆரம்பமாயிருக்குமோ என்று உஷா அஞ்சினுள். உள்ளே பதுங்கிவிடலாமா என்று யோசித்தாள். ஆனுல் பாக்யலக்ஷிமியின் சிரித்த முகம் கூரிய பார்வையுடன் முதலிலேயே

உஷாவை இலக்கு வைத்துவிட்ட படியால் அவள் ஓடி ஒளிந்துகொள் வது சந்தர்ப்ப விரோதமாகிவிட்டது.

சிரித்த முகத்தைச் சிரித்த முகங் கள் வரவேற்றன. பாக்ய லக்ஷிமி முன் வாசற்படியை மிதித்ததும், "நான்தான் உஷாவின் பெரியம்மா" என்று முன்னின்ற பெண்களிடம் தெரிவித்துக்கொண் டாள். உஷா பின் தங்கி நின்ருள் மற்றவர் வந்தவளை வரவேற்று உள் ளே அழைத்துச் சென்ருர்கள் பாக்ய லக்ஷிமிதான் தாங்கி வந்த தட்டை ஒரு ஸோபாவின் பேரில் வைத்து விடடு உஷாவிடம் சென்று இரண்டு கைவிரல்களையும் அவள் கன்னங் களில் வைத்து நெரித்து "என் கண்ணே!" என்று செல்லம்கொஞ்சி உச்சி முகர்ந்தாள் உஷா ஒருதரம் பெரியம்மாவை நிமிர்ந்து பார்த்து விட்டுத் தலைகுனிந்து நின்ருள் "இவ் வளவுதாஞ? இன்னும் ஏதாவது உண்டா?" என்று அவள் யோசிப்ப வள்போல் காணப்பட்டாள். பின்பு எல்லோரும் முன் ஹாலில் உள்ள ஸோபாக்களில் அமர்ந்தார் கள் பாக்யலக்ஷிமி பழத்தட்டை அங்கீகரிக்கும்படி காந்திமதியிடம் நகர்த்திஞள்

பாக்யலக்ஷிமிக்கு காந்திமதி தன் தமக்கையையும் செல்லத்தையும் அறிமுகப்படுத்திஞள்.

ராமஞதன் முகஜாடை காந்தி மதிக்கு இருப்பதால் அவள் அவ னுக்கு உடன் பிறந்தவள் என்று தான் முதலிலேயே ஊகித்துவிட்ட தாயும் உஷாவிற்கும் செல்லத்திற் கும் அதேமாதிரி முக அமைப்பில் ஒற்றுமை இருபபதாயும் பாக்ய லக்ஷிமி வருணிக்கத் துவங்கிஞள். ஆஞல் ஒருவரும் செல்லத்திற்கும் உஷாவுக்கும் முகச் சாயையில் ஒற் றுமையிருப்பதாய் நம்பமுடியவில்லை. மற்றவர்கள் சந்தேகப்பட வே பாக்ய லக்ஷிமி முன்னிலும் அதிகமாகப் பார்வை, புருவம். மூக்கின் அமைப்பு, முகத்தின் வட்டம் உதட டின் ரேகை கள் பல் வரிசை முதலிய தனித் தனி அம்சங்களின் ஒற்றுமையைப்பற்றி விஸ்தரிக்கலாஞள் அப்படி விஸ்தரிக் கும் அளவில் அடிக்கடி உஷாவின் முகத்தை வீணைத்தந்தியைத் தட்டு வதுபோய் விரல்களால் தட்டிக் காண்பித்தாள் பற்களைப்பற்றி நிரூ பிக்கும் கட்டத்தில் உஷாவுக்கு எழுந்திருந்து ஓடிப்போய்விடலாமா என்று ஆத்திரம் வந்தது மற்றவர் கள் சிரிப்பை அடக்கிக்கொண்டு சுவாரசியமாய் கவனிப்பவர்கள் போல் அபிநயித்தார்கள்.

"இவள் என்ன உத்தேசத்தின் பேரில் வந்திருக்கிருள்?" என்ற

சபாக்காரியதரிசி:—என்ன சாமா வெக்கக்கேடா இருக்கு! மனுஷன் கச்சேரியை ஆரம் பிச்சுட்டான். நம்ப மெம் பர்ஸை கூட காணுமே! வெளிலே போய் பார்த்துட்டு வாயேன்.

சாமா:-இப்போதான் பார்த்துட்டு வந்தேன். நம்ப சபா சுத்தி வட்டாரத்திலே ஒரு மைலுக்கு ஒரு நரப்பிராணியைக் கூட காணும்!

பிரச்னை எல்லோர் மனதிலும் ஒரு புதிராக விருந்தது

பாக்யலக்ஷிமி டிரைவர் கொண்டு வந்த பெட டியை ஒரு ஓரமாய் வைக் கும்படி அவனுக்கு உததரவு போட் டாள். உத்திரவிடும் குரல் கணிப் பாயும் கம்பீரமாயுப இருந்தது. வீட டில் வேறு யாராவது இருந்தால் அவர்களும் தன் வரவை அறிந்து கொண்டு வெளியே வரவேண்டும் என்று அவள் எண்ணியதாய்த் தோன்றிற்று. மறுபடி எதையோ எடுத்துவரக் கார் டிரை வர் திரும்பிப் போனபோது பாக்யலக்ஷிமி. "படுக்கை எங்கே" என்று உரத்த குரலில் ஒரு அதட்டல் போட்டாள் ஏதோ திருடடுப்போய்விட்ட தாய் சந்தேகப் பட்டதைப்பற்றிக் கூச்சல் போடுவது போலிருந்தது அவள் கொடுத்த த்வனி

"அதை எடுக்கத்தான் போகி றேன்" என்ருன் கார் டிரைவர் இந்த விரட்டலைச் சகிக்காதவன் போல்.

உஷா பெட்டியும் படுக்கையும் தன்னுடையவை என்று தெரிந்து கொண்டாள் பொன்னுசாமி பிள்ளை யுடன் பரஸ்தானம் வைக்கப்பட்ட தன் பிரயாண சாமான்கள் தன் னிடம் அப்போது சேர்க்கபபடுவ தன் தாத்பர்யம் என்ன என்று அவள் யோசிக்கலாஞள்

பாக்கியலக்ஷிமியின் வரவை சங்கரி அம்மாள் கவனிக்காமலில்லை அவ ளுடைய தோற்றம், பேச்சு, நட வடிக்கை இவைகளிஞல் அவள் யார் என்று ஊகித்தறிவதிலும் அவளுக்கு சிரமம் ஏற்படவில்லை தான் வெளியே வந்து விசாரிக்கவேண்டிய அவசியம் ஏற்படும்வரை வெளியே வருவ்தற்குச் சங்கரி அம்மாள் சம்மத மில்லாமல் உள்ளேயிருந்தபடியே கவனத்தை மட்டும் வெளியில் செலுத்திவந்தாள்.

ஆஞல் மதுரப்பாடடி அதிசயங் களை அனுபவிக்கும் ஆர்வமுடைய வள் ஆதலால், வந்தவளை ஆராய்ந் தறிய ஒரு பக்கமாக வாசற்படியில் நின்றுகொண்டு காட்சியளித்தாள். பாக்யலக்ஷிமி மதுரப்பாட்டியைப் பார்த்ததும் அவளே வீட்டு யஜமானி என்று ஒருக்கணம் பிரமித்து ஆஸ னத்தை விட்டெழுந்து கை கூப்பித் தலை அசைத்து மரியாதைச் செலுத்த முற்பட்டாள் இது கண்டு சுற்றி யிருந்த பெண்கள் நகைக்கவே பாக்யலக்ஷிமி தன் தவறுதலை உணர ஆரம்பித்தாள் அப்போது கோமதி - "அம்மா உள்ளே காரிய— மாயிருக்கிருள். இந்தப பாடடி— (மேலே சொல்லச் சற்று தயங்கி-) மதுரப்பாட்டி" என்று முடித்தாள்.

பாக்கிய லக்ஷிமி கடகட வென்று சிரித்து நிலைமையைச் சமாளித்துக் கொண்டு தன் ஸோபாவிற்குத் திரும் பிஞள் மதுரப்பாட்டி கடுகடுத்த முகத்துடன் சரேலென்று அந்தர் தானமானதை அவள் கவனிக்க வில்லை அதை கவனித்த மற்றவர் கள் மடடும் வெகு நேரம் சிரித்தார் கள் உஷாவும் சப்தமில்லாமல் சிரிப்பை அடக்கி அடக்கிக்கொண்டு சிரித்தாள். பாக்யலக்ஷிமி தன் தவறு தலையே சிறு பெண்கள் நினைத்து நினைத்துக்கொண்டு நகைக்கிருர்க ளாக்கும் என்று எண்ணித் தானும் அவர்களுக்குப் பின் வாங்கக்கூடாதென்று தொடர் ந்து தொடர்ந்து சபதம்போட்டுச் சிரித்து அவர்களுடன் சிரிப்புப் போட்டியில் வெற்றிபெற விடா முயற்சி எடுத்துக்கொண்டாள்.

முன்கட்டில் இவ்வளவு சிரிப்புக் கோலாகலம் நடப்பதைத் தாங்க முடியாமல் அஸூயை பிடித்துச் சங்கரி உள்ளேயிருந்து முணுமுணுத் துக்கொண்டு "கோமதி! என்னடி கூடத்தில் அமர்க்களம்?' என்று சற்று உதாசீனமும் நிராகரிப்பும் தோன்றும் குரலில் ஒன்றும் அறி யாதவள்போல் ஒரு கேள்வியை ஆகாசவாணியில் அனுப்பிஞள்.

(தொடரும்.)

சருமா & தலை நோய்களை



உலகப் புகழ் பெற்ற ஜாம்-பெக் குணப்படுத்தும்

ஜாம்-பெக்கிலுள்ள அற்புத மூலிகை மருந்து வஸ்துக்கள் சருமத்தினூடே புகுந்து வேலை செய்வதால் நமைச்சல், ரணம் போய், ரத்தக் கசிவு நின்று நோய் கிருமிகள் நாசமாகி பாதிக்கப்பட்ட சருமத்தை ஜாம்-பெக் சீக்கிரம் குணப்படுத்தி ஆரோக்கியமாகவிருக்கவும் செய்யும். மிருக கொழுப்பில்லாததற்கு உத்தரவாதம்

எப்பொழுதும் உபயோகியுங்கள்

Zam-Buk

சருமநோய்கள் காயங்கள், பூச்சிகடிகள், புண்ணுகி வலிக்கும் கால்கள், தசை வலி தேக குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது.

சமனமுட்டி ,வாரணமளிக்கும் கிருமிநாச மருந்து

ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி மதராஸ்.

சகல விதமான பட்டு நூல் ஜவுளிகளுக்கு
கைராசியும் நம்பிக்கையுமுள்ள
புதிய ஜவுளிக்கடை

ராம்ராஜ்யா ஹால்

N.R.ராமசந்திர செட்டி & கோ. கடைவீதி...சேலம்

குகன் சோப்புகள்

சுதேசி தயாரிப்பு சலவைக்கு மிகவும் சிறந்தது.

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

சக்தி ஆரூடம்!

தபால், தந்தி இலாகா ஆபீசர் Sri K. S. சுப்பய்யா B. A., 23—5—48ல் எழுதுகிறார்:—"தாங்கள் கூறியபடியே நான் பிரமோஷனுடன் கெஜட் பதவி உத்தியோகம் பெற்றேன்."

3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ 1. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம கணிக்க ரூ. 2. சக்தி கவசம ரூ. 7—8—0. வி. பி. பி. தனி. ஜாதகம அல்லதுகடிதம் எழுதும் நேரம் தேவை. N. B:—வெளி நாட்டிறகு முன் பணம் தேவை.

சக்தி ஹோம்,
விருத்தாசலம் P. O. (S. I.)

ஆனந்த குஸுமாகர லேகியம்.

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டுவருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல். உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத் தளர்ச்சி, பசியில்லா திருத்தல், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு. பித்தம், காசம். க்ஷயம்போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும். உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக்கூடியது பத்தியமில்லை

20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெறறுக்கொள்ளலாம், விவரமான காட்லாக் இனம்

மலையாள மெடிகல் ஹால் (Regd.)
189, வக்கீல் புது தெரு
Post Box No. 27. — மதுரை.

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்கமெடல்கள் பரிசு பெறறவர். ஒரு வருஷ பலன் எழுத ரூபா 5. ஆரூடம் மூன்று கேள்விகளுக்கு ரூபா 2 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித காழியூர்
ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
தபோ நிதி, தியாகராய நகர்,
மதராஸ் 17.

A. B. C Talks.	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0

மானேஜர்:
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட்ரோட், மதராஸ்.

பாலுவின் சாமார்த்தியம்



— தில்லைவாசி —

பாலு பத்து வயசுப் பையன். அவன் தன்னந் தனியாகப் போய்ச் சினிமா பார்த்துவிட்டு வரவேண்டுமென்று ஒரு நாள் நினைத்தான். இந்த ஆவல் அவனுக்கு வெகுநாட்களாக இருந்து வந்தது.

அவன் அண்ணன் கிட்டு தனியாகப் போய்ச் சினிமா பார்த்து வந்தான். அவனைப் போல் பாலுவும் தனியாகப் போய் சினிமா பார்க்கவேண்டும். "எனக்கும் அந்த சாமர்த்தியம் இருக்கிறது" என்று பாலு அடிக்கடி எண்ணுவான்.

அன்று ஒரு நல்ல சினிமா வந்திருந்தது. முதல் தடவையாக அந்த ஊருக்கு வந்திருந்தது.

பாலு அந்தப் படத்தையே போய்ப்பார்க்க விரும்பினான். அன்று அம்மா சொன்னபடி எல்லாம் கேட்டு வந்தான். அவள்சொன்ன வேலையைத் தட்டாமல் செய்தான். அம்மாவிடம் தான் சினிமாவுக்குப் போகப் போவதாகச் சொல்லிவைத்திருந்தான். அவனிடத்தில் அவளுக்கு கிட்டுவைவிட அதிகப் பிரியம். அவனுக்கு எட்டணா காசு கொடுத்தாள்.

"இன்று முதல் நாள். ஒரே கும்பலாகயிருக்கும். இன்னும் இரண்டு மூன்று நாட்கள் கழித்துப் போகலாம். கிட்டுவுடன் சேர்ந்தே போகலாம்" என்று அம்மா சொன்னாள்.

பாலுவோ "இன்றைக்கேதான் போவேன்" என்று பிடிவாதம் பிடித்தான். அவளும் "சரி" என்று சொல்லி விட்டாள்.

பாலுவுக்கு காசை மணிப் பர்சில் வைத்துக்கொண்டு சினிமாவுக்குப் போகவேண்டும் என்று ஆசை உண்டாயிற்று. அம்மாவிடம் இன்னும் அதிகம் கெஞ்சி அப்பாவின் மணிப்பர்சை எடுத்துத் தரும்படி கேட்டான்.

அவள் அதை முதலில் எடுத்துத்தர மறுத்துவிட்டாள். பாலு அதையே பிடிவாதமாகக் கேட்டான். கடைசியில் அப்பாவின் மணிப்பர்சை அவனிடம் எடுத்துக் கொடுத்தாள்.



கொடுக்கும்போது "இதை அப்பா இருபது வருஷங்களாக வைத்துக் கொண்டிருக்கிறார். பத்திரமாகக் கொண்டு வரவேண்டும் தொலைத்துவிட்டு வந்தாயோ உன் முதுகுத்தோலை உரித்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்" என்று எச்சரிக்கையுடன் அந்த மணிப்பர்சை எடுத்துக் கொடுத்தாள்.

பாலுவுக்கு ஒரே குஷியாகி விட்டது. மணிப்பர்சை வைத்துக் கொண்டு குதியாய்க் குதித்தான். எட்டணாவை மணிப் பர்சில் போடுவதும், எடுப்பதுமாக இருந்தான். நல்ல சட்டையும் நிஜாரும் போட்டுக்கொண்டான். மணிப்பர்சை சட்டைப் பையிலும், நிஜார் பையிலும் வைத்து வைத்து அழகு பார்த்துக் கொண்டான்.

அம்மா "மூன்று மணி ஆட்டத்துக்குப் போடா" என்று சொன்னதையும் அவன் கேட்கவில்லை. ஏழு மணி ஆட்டத்திற்குத்தான் போனான்.

கொட்டகையில் ஒரே கூட்டம். ஜனங்கள் முண்டியடித்துக் கொண்டிருந்தார்கள். டிக்கட்டு வாங்குவதற்கே முடியவில்லை.

பாலு எப்படியோ சமாளித்து கூட்டத்தில் புகுந்தான். மணிப்

பர்சை எடுத்தான். எட்டணுவைக்கொடுத்து நாலணுவுக்கு ஒரு டிக்கட் வாங்கிக் கொண்டான். பாக்கி நாலணுவை மணிப் பர்சில் போட்டுக் கொண்டான். அதைப் பத்திரமாக சட்டைப் பையில் வைத்துக் கொண்டான்.



கொட்டகைக்கு உள்ளேயும் ஜனங்கள் நெருக்கியடித்துக் கொண்டிருந்தார்கள். பாலு அந்தக் கூட்டத்திற்குள்ளும் புகுந்து, உள்ளேபோய் ஒரு இடத்தில் உட்கார்ந்து கொண்டான்.

ஆட்டம் ஆரம்பிக்க இன்னும் கால் மணி நேரமிருந்தது. பாலு ஆவலுடன் உட்கார்ந்திருந்தான்.

அத்தனை கூட்டத்திலும் டிக்கட் வாங்கி உள்ளே புகுந்துவிட்டோமே என்று அவனுக்கு மகிழ்ச்சியாயிருந்தது தனக்குத் தனியாக வந்து சினிமா பார்க்க சாமர்த்தியமிருக்கிறது என்று கூட கர்வப்பட்டான். தன் அண்ணன் கிட்டுவுக்குத்தான் எந்த விதத்திலும் தான் குறைந்தவனில்லை என்று எண்ணினுன்.

படக்காட்சி ஆரம்பிக்க கடைசி மணியடித்தாகி விட்டது.

"சோடா, சோடா" என்று கூவிக்கொண்டே ஒரு பையன் இங்குமங்குமாகப் போய்க் கொண்டிருந்தான்.

"காட்சி ஆரம்பிப்பதற்கு முன் ஒரு சோடா வாங்கிக் குடித்துவிட வேண்டும்" என்ற ஆசை பாலுவுக்கு உண்டாயிற்று இப்பொழுது வாங்கிக் குடிக்காவிட்டால் 'இன்டர்வல்' வரைக்கும காத்திருக்க வேண்டும் சோடாவாங்க மணிப்பர்சை எடுக்கச் சட்டைப் பையில் கையை விட்டான். மணிப்பர்சு காணவில்லை. நிஜார் பையிலும் பார்த்தான் அங்கும் காணவில்லை உட்கார்ந்திருந்த இடத்தில் மேலேயும் கீழேயும் சுற்றிச் சுற்றிப்பார்த்தான். கிடைக்கவில்லை மணிப்பர்சு எங்கேயோ கூட்டத்தில் விழுந்துபோயிருந்தது.

அதற்குள் கொட்டகையில் ஒரே இருட்டு. படக்காட்சியும் ஆரம்பமாகிவிட்டது.

பாலுவுக்கு சினிமாக் காட்சியில் கவனம் செல்லவேயில்லை. மணிப்பர்சு எங்கு, எப்படி விழுந்து போயிருக்கும் என்ற கவலையில் மூழ்கிவிட்டான்.



"வீட்டுக்குப் போய் அம்மாவுக்கு என்ன பதில் சொல்வது? அப்பா மணி பர்சை தொலைத்துவிட்டதற்காக நன்ருக அடித்துவிடுவாரே. அம்மா பேச்சையும் கேட்காமல் ஏன் அதைக்கொண்டு வந்தோம்" என்ற நினைப்பு உண்டாகும் பொழுது அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது.

படத்தைப் பார்க்க அவனுக்குக் கொஞ்சம் கூட இஷ்டமில்லை. அப்படியே வீட்டுக்குத் திரும்பிப்போய்விடலாமா என்றுகூட எண்ணினுன். வீட்டுக்கு எப்படிப் போவது? போனுல் உதை விழுமே!

பல்லைக் கடித்துக்கொண்டு ஆட்டம் முடிகிறவரைக்கும் அங்கேயே உட்கார்ந்திருந்தான். இரவு ஒன்பதரை மணிக்கு சினிமாக்காட்சி முடிந்தது.

* * * *

இரவு பத்துமணிகூட ஆயிற்று. சினிமாவுக்குப் போனபாலு வீட்டுக்குத் திரும்பவேயில்லை. அப்பாவும் வீட்டுக்கு வந்திருந்தார் 'ஏன் அவனைத் தனியாகச் சினிமாவுக்கு அனுப்பி வைத்தாய்?" என்று அம்மாவைக் கோபித்துக் கொண்டார்.

கிட்டுவும் அப்பாவுமாக எங்கெங்கேயோ இரவு வெகுநேரம்வரைக்கும்போய்த்தேடினர்கள். பாலு அகப்படவில்லை. "பொழுது விடிந்து வருவான்" என்று அவர்களும் படுத்துக்கொண்டார்கள். "பாலு எங்கு போயிருப்பான்" என்ற கவலையில் அவர்கள் யாரும் தூங்கவேயில்லை.

பொழுது விடிந்தது. தூங்கி எழுந்திருந்த கிட்டு தெருப்பக்கம்



போஞன். போன சுருக்காக உள்ளே ஓடிவந்தான். "பாலு இதோ இருக்கிருன். பக்கத்து வீட்டுத் திண்ணையில் படுத்து இருக்கிருன்" என்று சந்தோஷ மிகுதியால் கூவிஞன்.

அப்பா போய்ப் பாலுவை அழைத்து வந்தார். ராத்திரி சாப்பிடாமல் இருந்ததிஞல் பாலு சோர்ந்து போயிருந்தான். சுடச்சுட காப்பிக் குடித்ததும் அவனுக்குக் கொஞ்சம் உற்சாகம் உண்டாயிற்று.

"ஏண்டாக் கழுதை! சினிமா பார்த்துவிட்டு நேராக வீட்டுக்கு வருகிறது தானே?" என்று அப்பா அவனைப் பார்த்துக் கோபித்துக் கொண்டார். ஆனுல் அடிக்கவில்லை.

அதற்குள் அம்மா "மணிப்பர்சு எங்கேடா?" என்று கேட்டாள். பாலு பதில்சொல்ல முடியாமல் விழித்தான். அம்மாவுக்கு விஷயம் விளங்கிவிட்டது.

"மணிப்பர்சைத் தொலைத்துவிட்டு, உதைக்குப் பயந்துபோய்தான் அவன் ராத்திரி வீட்டுக்கு வரவில்லை. நீங்கள் இருபது வருஷமாகவைத்துவரும் பர்ஸை இப்படித் தொலைத்து விட்டு வந்து நிற்குமா, குழந்தை" என்று சொல்லி அம்மா வருத்தப்பட்டாள்.

"பர்ஸு போனால் போகிறது. குழந்தை திரும்பி வந்தானே அதுவே போதும்" என்ருர் அப்பா. "அந்த மணிப்பர்ஸ் போனதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது" என்று மீண்டும் கூறி அம்மா வருத்தப்பட்டாள்

"புதிதாக ஒரு பர்ஸ் வாங்கியிருநதேன். அதைததான் கெட்டுப் போக்கிவிட்டு வந்திருக்கிருன் பாலு பழைய பர்ஸ்இதோ இருக்கிறது, பார்" என்று கூறி அப்பா தன் சட்டைப் பையிலிருந்த பர்ஸை எடுத்துக் காண்பிததார்.

பாலுவுக்குப் போன உயிர் திரும்பி வந்தது. "அப்பா பர்ஸைத் தொலைததற்காகத் தன்னைக் கோபிக்கவில்லை அடிக்கவில்லை," என்பதை நினைக்க நினைக்க அவனுக்கு ஒரே ஆச்சரியமாயிருந்தது.

—

அட்டைப்படம்

ஜெனரல் கரியப்பா

இந்திய ராணுவத்தின் சேனுதிபதியாக நியமிக்கப்பட்டு பதவி ஏற்றிருக்கும் லெப்டினென்டு ஜெனரல் கே. எம். கரியப்பா, முதலாவது இந்தியராவார். இந்திய ராணுவத் தலைமைக் காரியாலய அதிகாரப் பொறுப்பும் இவரிடமேதானிருக்கும். பதவி யேற்றதற்குப் பிறகு முதன் முதலாகச் சென்றவாரம் ஜெனரல் கரியப்பா சென்னை வந்திருந்தார். கார்ப்பொரேஷன் சார்பாக அவருக்கு ஓர் உபசாரப் பத்திரம் படித்தளிக்கப்பட்டது. கட்சிப் பற்றில்லாமல் ராணுவத்தினர் இருந்து சேவை செய்யவேண்டிய அவசியம் குறித்து அவர் பிரஸ்தாபித்து நகர சபை உபசாரத்துக்குப் பதிலளித்தார்.

ஜெனரல் கரியப்பா நம்முடைய மாகாணத்தைச் சேர்ந்தவர் என்ற பெருமிதமும் நமக்கேற்படுவது இயற்கை. இத்தகைய உன்னத பதவியைத் தாங்கும் ஜெனரல் கரியப்பாவுக்கு வயது சுமார் 48. 1900 ஜனவரி 28-ந்தேதி குடகிலுள்ள மர்க்கராவில் பிறந்து அங்கேயே மத்திய ஹைஸ்கூலிலும் சென்னை ராஜதானிக் கல்லூரியிலும் கல்வி பயின்று பின்னர் இந்தோர் ராணுவப் பயிற்சிப் பள்ளி மூலம் கமிஷன் பெற்ருர்.

1941 முதல் 1942 மார்ச் வரை இராக், சிரியா, இரானில் 10-வது இந்திய டிவிஷனில் இருந்தார் பின்னர் கர்னல் பதவிக்கு உயர்த்தப்பட்டு ராஜபுதன படையின் இயந்திர பீரங்கி பட்டாளத்தின் தலைவராக இருந்தார். பட்டாளத் தலைவராக பதவி வகித்த முதல் இந்தியர் இவர்தான்.

1946-ல் தற்காப்பு கல்லூரியில் படிக்க அனுப்பப்பட்ட முதல் இரண்டு இந்திய அதிகாரிகளுள் இவரும் ஒருவர். திருப்பி அழைக்கப்பட்டு ராணுவ புனரமைப்பு கமிட்டி மெம்பராக இருந்தார். மேஜர் ஜெனரலாக உயர்த்தப்பட்டு கொஞ்ச காலத்துக்கு தலைமை காரியாலய பிரதான அதிகாரியாய் இருந்தார் 1947 நவம்பரில் கீழ் பிராந்திய தளபதி பதவியில் முதல் இந்தியராக நியமிக்கப்பட்டவுடன் லெப்டினென்ட் ஜெனரல் பதவிக்கு உயர்த்தப்பட்டார் 25-வருடகாலமாக இந்திய ராணுவத்தில் நெருங்கிய தொடர்பு கொண்டவர் ஜப்பான் உள்பட உலகில் பல நாடுகளுக்கு அவர் விஜயம்செய்து அந்நிய ராணுவ அமைப்பு பயிற்சிபற்றி அறிந்திருக்கிருர்.

மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானால் இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும் பெற இச்சையுண்டானால் இன்றே

“ ஜீவவசிய பரம ரஹஸ்யம் ”

என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப் படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்த சாஸ்திர சம்பந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று, பிறகு அப்யசித்து வெற்றிபெற்ற ஒரு மகானால் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப் படித்து பயன் பெறுங்கள்.

விலை ரூ. **4-8-0.**

வி. பி. செலவு அணா 9.

மண வாழ்க்கை

★

சதி–பதிகள் விஞ்ஞான ரீதியாகவும் ஒழுக்க முறைப்படியும் இல்வாழ்க்கையை எவ்வாறு நுகரவேண்டுமென்பதை மிக நுணுக்கமாகவும், விளக்கமாகவும் ஆபாசமின்றி போதிக்கும் அபூர்வ நூல். கற்றோரும், மற்றோரும், பால்யர்களும் சங்கோஜமின்றிப் படித்துணரத்தக்க சிறந்த நூல். கண் கவரும் வனப்புவாய்ந்தது.

344 பக்கங்கொண்ட பெரிய நூல்.

மலிவுப் பதிப்பு ரூ. 3—12—0

பரிசுப் பதிப்பு ரூ. 5—8—0

வி. பி. வேறு.

ஷாஜஹான் புக் டெப்போ,

34, சாந்தோம் : : சென்னை **4.**

தந்தி விலாசம் : “ கோகுல் ” ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்ச் : மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது “ கோகுல் ” வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள் :—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,

பைகிராப்ட்ஸ் ரோட்,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை ஸ்ரீ பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,

246, Vysyal St.,

COIMBATORE.

Printed and Published by S. Chakrapani Iyengar at the “Swadesamitran” Press. Victory House Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B. A.

உங்கள் முறை தவருனது

தரகர்கள் — நிபுணர்கள் — அவரவர் சொந்த நலனுக்காக லாபம் சம்பாதிக்கும்பொருட்டு, தமது அன்பான (!) உதவியின்றி வியாபாரியிடம் நீங்கள் நேரடியாகச் செல்லாமலிருக்க சாதுர்யமாகப் பேசுகின்றனர்.

ஆகையால், நீங்கள் வியாபாரியை அடையும் முறை தவருனது. வியாபாரி பைசாசமானலும், உமது அறியாமையை எளிதில் கண்டுபிடிப்பார்; அதுவே அவரது கொள்கை. உமது அறியாமையை அறிய எவ்வளவோ வழி அவருக்கு இருக்கிறது. நீங்கள் மிகவும் புத்திசாலியாயிருந்தாலும் வியாபார விஷய மறியாதவர்தானே.

ஜப்பானிய விலைகளில், பிரிட்டிஷ் நம்பிக்கையுடன் ஜெர்மன் சரக்குகளை எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகும். விலை விகிதங்களை மட்டும் பரிசீலித்து உமது நிபுணரை ரகத்தை தெரிந்தெடுக்க அனுமதிப்பது நெருப்புக்கோழி வழிபோலாகும். உமது நிபுணர் சொல்லிக் கொடுத்துள்ள வழியைப் பின்பற்றுவதாலும் நன்ருக விவரித்துக் கூறுவதாலும் சரியான ரகம் கிடைக்காது நீங்கள் கொடுக்கும் பணத்துக்கு ஏற்ற சரக்குதான் கிடைக்கும்.

நேர்மை, நம்பிக்கை, பெயர், நீண்டகால சேவை இவை பொருந்திய வியாபாரி கிடைப்பது உமக்கு அனுகூலமாகும். உமக்கு நம்பிக்கையான சரக்கு கிடைக்கக்கூடும். உங்களுக்குத் தேவையான நகையை அவரிடம் சொல்லுங்கள். நீங்கள் கொடுக்கக்கூடிய தொகையும் கூறுங்கள். சரியான விலையில் சரியான சரக்கு பெறுவதற்கு அது போதுமானது.

உமது வாங்கும் முறையைச் சீர்படுத்துங்கள். சுயநலம்பெற்ற தரகர்களின் வம்பு பேச்சில் சிக்கிக்கொள்ளாதீர்கள்.

நேர்மையான வியாபாரியை நம்புங்கள்
நாணயமுள்ள சரக்கு கிடைக்கும்.

வியாபாரி உண்மையில் நேர்மையானவர்

ஸூராஜ்மல்ஸ்

"1895 முதல்"
நம்பிக்கையான நகை வியாபாரிகள்

313, எஸ்பிளனேட் : : மதராஸ்.